YARL OSAI
Regested No. QD/130/News/2011
# யாழ் ஓசை
வார இதழ்

ஓசை : 01 | நாதம் : 25 | வெள்ளிக்கிழமை 22.04.2011 | வார இதழ் | விலை ரூபா: 15.00

# கடற்றொழிலாளர்களின் மனித உரிமை மீறல் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட முடிவு




**வருடாந்தம் 12 கோடி ரூபா நஷ்டம் என கடற்றொழிலாளர் சமாஜத் தலைவர் தெரிவிப்பு**

வடமாகாணத்தில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவ சமூகத்தின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு வருவதனால் அவர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் தொழிலாளர்கள் தினமான மே தினத்தன்று தொழில் உரிமை குறித்து முறையிடவுள்ளதாகவும் வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் எஸ்.தவரெட்ணம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; கடந்த வருடங்களைவிட (6ஆம் பக்கம் பார்க்க)


ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக 10 இலட்சம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கை நேற்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டபோது பொதுமக்கள் கையெழுத்திடுவதை படத்தில் காணலாம்.
(படப்பிடிப்பு: ஜோய் ஜெயக்குமார்)

## காக்கைதீவுக் கடற்பிரதேசத்தில் கலங்கரைவிளக்கம் அமைக்கும் பணி பிரதேசசபையால் இழுத்தடிப்பு

யாழ்ப்பாணம்,

ஆழ்கடல் தொழிலில் ஈடுபடும்கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி காக்கை தீவுக் கடற்பிரதேசத்தில் அமைக்கப்படவிருந்த கலங்கரைவிளக்கம் வலி. தென்மேற்குப் பிரதேச சபையின் அசட்டையீனத்தால் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்துக் (6ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்து அரசின் உதவியுடன் யாழ்ப்பாண கோட்டையை புனரமைக்கும் பணிகள்

**வடக்கில் 680 தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்கள்**

வடக்கில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த 680 பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை விரைவில் தொல்பொருள் பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்படும் என்று தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் செனரத் திசாநாயக்க தெரிவித்தார். மேலும் யாழ்ப்பாண கோட்டையை (6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும் பெண்கள் மீதான வன்முறைகள்

**யாழ். பெண்கள் அபிவிருத்தி மையம் சுட்டிக்காட்டு**

பெண்கள் மீதான வன்முறைகள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருவதாக யாழ். பெண்கள் அபிவிருத்தி மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (6ஆம் பக்கம் பார்க்க)

**மூனின் கருத்து இன்னும்**

## இரண்டொரு தினங்களில்

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து செயலாளர் நாயகம் பான் கீ மூனின் (6ஆம் பக்கம் பார்க்க)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபுணர்கள் குழுவின் அறிக்கை இலங்கைக்காகவே தாமதமானது

## இன்னர்சிற்றி பிரஸ்

ஐ.நா . நிபுணர்கள் குழுவின் அறிக்கை மார்ச் மாதம் 31 ஆம் திகதியே தயாரிக்கப்பட்டுவிட்டபோதும் இலங்கைக்காகவே அதை பான் கீ மூனிடம் கையளிப்பது தாமதமாகியது என்று இன்னர் சிற்றி பிரஸ் கூறியுள்ளது.

ஐ.நா. நிபுணர்கள் குழு சமர்ப்பித்த அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதியின் பகுதி இன்னர்சிற்றி பிரஸுக்கு கிடைத்துள்ளது.

அதில் நிபுணர்கள் குழுவில் இடம்பெற்றுள்ள மூவரும் மார்ச் 31 ஆம் திகதியிட்டு ஒப்பமிட்டுள்ளனர். ஆனால் அந்த அறிக்கை ஏப்ரல் 12 ஆம் திகதியே பான் கீ மூனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரதி ஏப்ரல் 13 ஆம் திகதி ஐ.நா.வுக்கான இலங்கையின் பிரதி நிரந்தரவதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவிடம் கையளிக்கப்பட்டது.

இன்னர் சிற்றி பிரஸ் கடந்த 19 ஆம் திகதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவுடனும் பாலித கொஹன்னவுடனும் கலந்துரையாடியது. பாலித கொஹன்னவின் இல்ல வரவேற்பறையில் இச் சந்திப்பு இடம்பெற்றது.

அப்போது இந்த அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் என்று ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் கூறியிருப்பினும் பொதுமக்கள் மத்தியில் அது வெளியிடப்படக் கூடாது என்று பாலித கொஹன்ன வாதிட்டார்.

ஐ.நா. இந்த அறிக்கையை இன்னமும் ஏன் வெளியிடவில்லை என்று பாலித கொஹன்னவிடம் கேட்டபோது இது பொதுமக்களுக்குத்தேவையற்றது என்று கூறினார். இந்த அறிக்கை ஐ.நா. பொதுச் செயலருக்கானது என்றும் அவர் குறிப்பிட்டார்.ஐ.நா.வுக்கு பதிலளிப்பதற்கு இலங்கை 36 மணிநேரம் கால அவகாசம் கோரிய போதும் இதுவரை பதிலளிக்காதது ஏன் என்று பாலித கொஹன்னவிடம் கேட்டபோது 195 பக்கங்கள் கொண்ட அறிக்கைக்கு 36 மணிநேரத்தில் எவ்வாறு பதிலளிக்க முடியும் என்று கேள்வி எழுப்பினார்.

# அறிக்கை கசியக்கூடும் என ஐ.நா. எச்சரித்திருந்தது

## கொஹென்ன தெரிவிப்பு

இலங்கை மீது போர்க் குற்றச்சாட்டுகளை சுமத்தும் ஐ.நா. நிபுணர்குழு அறிக்கை ஊடகங்களுக்கு கசியும் சாத்தியம் குறித்து இலங்கை அரசாங்கத்தை ஐ.நா. எச்சரித்திருந்ததாக ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி பாலித கொஹென்ன தெரிவித்துள்ளார்.பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்திடம் இது குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்படி குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

இந்த அறிக்கை கசியக்கூடும் என்பது குறித்து இலங்கை அரசாங்கத்திடம் ஐ.நா. கவலை தெரிவித்தது. ஏனெனில் (ஐ.நா.) செயலகத்திலிருந்து அனைத்தும் கசிவடைவதாக அது தெரிவித்தது. எனினும் இக்கூற்றை ஐ.நா. நிராகரித்துள்ளது.

'செயலகத்திலிருந்தே அது கசிந்தது என நம்புவதற்கு காரணம் எதுவும் இல்லை' என ஐ.நா.வின் பிரதி பேச்சாளர் பர்ஹான் ஹக் கூறியுள்ளார்.

இதேவேளை அறிக்கையின் குறைகளை வெளிப்படுத்துவற்காக இலங்கை அரசாங்கம் அதை ஆராய்ந்து வருகின்றது என்றார்.

# சனல் 4 ஊடகத்துக்கு எதிராக இலங்கை உயர்ஸ்தானிகரகம் அறிக்கை

இலங்கையின் போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பிலான ஆவணங்களை வெளியிட்டு வரும் சனல் 4 தொலைக்காட்சிக்கு எதிராக லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கொலைக்குற்றங்கள் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப் படம் ஒன்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

ஏற்கனவே பலமுறை அரசாங்கத்துக்கு எதிராக வெளியிடப்பட்டவை போலவே இந்த முறையும் சனல் 4 தொலைக்காட்சி இந்த ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனினும் இதில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாக லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

குறித்த அறிக்கை சனல் 4 தொலைக்காட்சியின் இணையத்தளத்திலேயே பிரசுரிக்கப்பட்டுள்ளமை சுட்டிகாட்டத்தக்கது.

# வடக்கின் மின் தேவையை முழுமையாக நிறைவேற்ற வெளிநாட்டு உதவியுடன் வேலைத்திட்டம்

## அமைச்சர் சம்பிக்க

போக்குவரத்து, மின்சாரம் மற்றும் எரிவாயு ஆகியவற்றுக்கான கட்டணங்களில் வருடத்துக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முறைமை ஒன்று உருவாக்கப்படவேண்டும். இதற்காக தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்படவேண்டும் என கருதுகின்றோம் என்று மின்சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கு முழுமையாக மின்சாரத்தை வழங்குவதற்கான மிகப்பெரிய வேலைத்திட்டங்கள் வெளிநாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை அதிகரிப்பையடுத்து மின்சார கட்டணங்கள் அதிகரிக்கப்படுமா என்று விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அமைச்சர் இவ்விடயங்கள் குறித்து மேலும் கூறியதாவது எரிபொருள் விலை அதிகரிப்பையடுத்து மின்சார கட்டணங்களை தற்போதைக்கு அதிகரிக்கும் எண்ணம் மின் சக்தி அமைச்சுக்கு இல்லை. ஆனால் நாங்கள் இந்த விடயத்தில் தேசிய கொள்கை ஒன்று இருக்கவேண்டும் என்று கருதுகின்றோம்.

அதாவது போக்குவரத்து மின்சாரம் மற்றும் எரிவாயு ஆகியவற்றுக்கான கட்டணங்களில் வருடத்துக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் திருத்தங்களை மேற்கொள்வதற்கான முறைமை ஒன்று உருவாக்கப்படவேண்டும். அந்த வகையில் வருடத்துக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் இவ்வாறு திருத்தங்கள் வரும். அப்போதுதான் மக்களும் விடயத்தை தெளிவாக புரிந்துகொள்வார்கள்.

இதேவேளை வட பகுதிக்கு மின்சார விநியோகத்தை முழுமையாக மேற்கொள்ளும் வகையில் பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். அதாவது மின்விநியோக வேலைத்திட்டத்தில் ஏ-9 வீதியூடாக சுன்னாகம் மற்றும் வவுனியா ஆகியவற்றை இணைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம். 2013 ஆம் ஆண்டில் இதனை செய்யவுள்ளோம். அவ்வாறு செய்யும்போது யாழ்ப்பாண மின்சார நெருக்கடி தீர்க்கப்படும்.

அத்துடன் 2012 ஆம் ஆண்டில் வன்னியின் அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரத்தை வழங்கிவிடுவோம்.

தற்போதைக்கு முல்லைத்தீவு மன்னார் கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் பல இடங்களுக்கு மின்சாரம் வழங்கியுள்ளோம். இவ்வருட நடுப்பகுதியில் பூநகரிக்கும் வழங்கிவிடுவோம். மல்லாவி, மடு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு மின்சாரத்தை விநியோகிப்போம்.

# தனியார்துறையினருக்கான உத்தேச ஓய்வூதிய சட்டமூலத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## ஐக்கிய தேசிய கட்சியின் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டம் தொடர்பான உத்தேச சட்டமூலத்துக்கு எதிராக அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இணைந்து சட்டநடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதிய திட்டம் தொடர்பான சட்டமூலம் அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அது தொடர்பான விவாதம் விரைவில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து ரவி கருணாநாயக்க எம்.பி. மேலும் கூறியதாவது

தனியார் துறையினருக்கான ஓய்வூதிய திட்டத்தின் ஊடாக நாட்டின் சுமார் 75 இலட்சம் தனியார் ஊழியர்களை ஏமாற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. ஊழியர்களுக்கு அரசாங்கம் நன்மைகளை வழங்க விரும்பினால் அதற்காக தனது சொந்த பணத்தை பயன்படுத்த வேண்டும்.

ஆனால் அரசாங்கம் தொழிலாளர்களின் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றை பெற்று மீண்டும் தொழிலாளர்களுக்கு வழங்க முயற்சிக்கின்றது.

இந்த ஓய்வூதிய திட்டத்தின் மூலம் நன்மைபெறுவதற்கு ஊழியர்கள் 10 வருடங்கள் பங்களிப்பு செய்யவேண்டும். 9 வருடங்கள் அதனை மேற்கொண்டால் எதுவும் கிடைக்காத நிலைமையே காணப்படுகின்றது. எனவே இதனை நாங்கள் ஏமாற்று நடவடிக்கை என்று கூறி எதிர்க்கின்றோம். அந்த வகையில் உத்தேச சட்டமூலத்துக்கு எதிராக அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் இணைந்து சட்டநடவடிக்கையை எடுக்கும்.

# கான்ஸ்டபிளுக்கு 15 வருட சிறைத்தண்டனை

தனது மனைவியையும் மகளையும் கொலை செய்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக 15 வருட கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

எம்.ஜி.எஸ். ஆமரசிறி எனும் இக்கான்ஸ்டபிள் 33 வயதான தனது மனைவியையும் 8 வயதான மகளையும் பேராதனையிலுள்ள தனது வீட்டில் வைத்து கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அகற்றும் பிரிவின் கண்காட்சிக்கு அரசங்க அதிகாரிகளின் பிரசன்னம் இல்லை

## வருத்தத்துக்குரியது என்கிறார் ஹலோடிறஸ்ட் நிறுவனத்தின் முன்னாள் பணியாளர்

வண்ணார்பண்ணை,

மக்களின் இயல்புவாழ்க்கை, மீள்குடியேற்றம், சுதந்திர நடமாட்டம் என்பவற்றுக்கு உயிரைத் துச்சமென நினைத்து பணியாற்றும் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் கண்காட்சி நிகழ்விற்கு அரச உயர் அதிகாரிகளின் சமுகம் தராதது ஏமாற்றம் - வருத்தம் அளிக்கிறது என ஹலோடிறஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் முன்னாள் பணியாளர் இ.பகீரதன் தெரிவித்தார்.

கண்ணிவெடி விழிப்புணர்விற்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு யாழ். இந்துக்கல்லூரி கண்காட்சி நிகழ்வு நடைபெற்றது.இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில்,

கண்ணிவெடி என்பது இன்று உலகிற்கே சவாலான விடயமாக உள்ளது. மக்களின் இயல்புவாழ்க்கை, மீள் குடியேற்றம், அபிவிருத்தி என்பவற்றை முன்னெடுப்பதற்காக இவற்றை அகற்றவேண்டிய கட்டாயம் உள்ளது. அவ்வாறான பாரிய பணியைச் செய்பவர்கள் ஒழுங்குபடுத்திய கண்காட்சிக்கு அழைக்கப்பட்ட விருந்தினர்கள், அரச உயரதிகாரிகள் சமுகம் தராதது மனவேதனையைத் தருகின்றது.

ஹலோடிறஸ்ட், டெனிஷ் போன்ற தன்னார்வ நிறுவனங்கள் கண்ணிவெடி அகற்றி வருவதுடன், இராணுவ கண்ணிவெடி அகற்றும் பிரிவும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றது.

நான் கண்ணி வெடி அகற்றும்போது எனது காலை இழந்துள்ளேன். இன்று அங்கவீனமடைந்தவனாக நான் உள்ளேன். இன்று என்னை கௌரவப்படுத்தியுள்ளார்கள். கண்ணிவெடி அகற்றுபவர்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள், உதவிவழங்கும் நிறுவனங்கள் 30, 35 வருடங்களுக்கு முன்பாக பசுமையாக இருந்த எமது நிலங்கள் மீண்டும் பசுமையாக வருவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கண்ணிவெடியை துரிதமாக அகற்றுவதற்கு இராணுவத்தினர் கூடிய ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

# தேவி பாகவதம் சொற்பொழிவு

வடமராட்சி,

தொண்டைமானாறு - சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு 'தேவி பாகவதம்' என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நடைபெறும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் இச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார்.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் சைவ கலை, பண்பாட்டுப் பேரவை பிரதி வெள்ளி தோறும் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இச்சொற்பொழிவுக்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.



சிவபூமி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள 99 வயதான மூதாட்டி இராஜேஸ்வரி அம்மா மகளிர் தினத்தன்று இல்ல சிறார்களினால் கௌரவிக்கப்பட்டார். அதன் போது மூதாட்டி சிறார்களுடன இனிப்புண்டு மகிழ்வதைப் படத்தில் காணலாம்.

# விளையாட்டு விஞ்ஞானப் பிரிவின் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை

கோப்பாய்,

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான பிரிவின் ஏற்பாட்டில் சுகாதாரமான வாழ்விற்கு உடல் ஆரோக்கியம் என்ற தலைப்பில் இரண்டு நாள் முழு நேரப் பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானப் பிரிவின் இணைப்பாளர் பேராசிரியர் நடராஜசுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியை வசந்தி அரசரட்ணமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கணிதத்துறை தலைவர் கலாநிதி எஸ். குணராஜா மற்றும் கொமர்ஷல் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் எஸ். ரஜீவனும் கலந்துகொண்டனர்.

இப் பயிற்சிக் கருத்தரங்கை இந்தியாவிலிருந்து வருகை தந்த அண்ணாமலைப் பல்கலைக்கழக உடற்கல்வி , விளையாட்டு விஞ்ஞான அலகின் பேராசிரியர்களான கோபிநாத் மற்றும் இளையராஜா ஆகியோர் நடத்தினர்.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர்கள் யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுனர்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# வடமராட்சியில் மீள்குடியேறிய மீனவர்களுக்கு பாஸிக் நிறுவனம் மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

வடமராட்சி,

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீளக்குடியேறியுள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்து முகமாக பாஸிக் நிறுவனத்தினால் சிறுதொழிலுக்கான உதவித் திட்டத்தின் கீழ் மேலும் 50 மீனவர்களுக்கு மீன்பிடிவலை, உபகரணங்கள், கட்டுமரங்கள் என்பன அண்மையில் வழங்கப்பட்டன.

இப்பிரதேசத்திலுள்ள ஆழியவளை, வத்திராயன் ஆகிய இரு கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த தலா 5 மீனவர்களுக்கே இந்த உதவித் திட்டம் மூலம் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மீனவருக்கும் 85 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலை உபகரணங்கள், கட்டுமரங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

பாஸிக் நிறுவனம் இந்த உதவிகளை வழங்குவதற்குத் தேவையான நிதி உதவிகளை ஜப்பான் பிளாற் போம் நிறுவனம் வழங்கியிருந்தது.

உதவிகளை வழங்கும் நிகழ்வு வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரச அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற போது உதவி அரசாங்க அதிபர் ந. திருலிங்கநாதன், யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் எஸ். ரவீந்திரன் மற்றும் இத்திட்டம் தொடர்பான அதிகாரிகளினால் இவ்வுதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

கிராம சேவையாளர்கள், கடற்றொழில் பரிசோதகர்கள் இணைந்து இவ் உதவித் திட்டத்திற்கான பயனாளிகளைத் தெரிவுசெய்திருந்தனர்.

# சாவகச்சேரி புகையிரதப் பாதையை மாற்றுவதற்கு தமிழ்க்கூட்டமைப்பு ஆதரவு

வண்ணார்பண்ணை,

சாவகச்சேரி பகுதியிலுள்ள புகையிரத பாதையை மாற்றி அமைப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு அளிக்குமென தெரிவித்துள்ளது.

பொது அமைப்புக்களுடன் ஆராய்ந்து இதற்கான முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

சாவகச்சேரிப் பகுதியில் செல்லும் புகையிரதப் பாதை பல இடங்களை ஊடறுத்துச் செல்வதுடன் ஏ-9 வீதி அகலிப்பின் போதும் புகையிரதப் பாதை இடையூறு ஏற்படுத்தும். இதனை மாற்றுவதற்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்துடன் அப்பகுதியைச் சேர்ந்த பொது மக்கள், பொது அமைப்புக்களுடன் பேசி பாதையை மாற்றுவதற்கு பிரதேச செயலர் ஊடாக வேண்டுகோள் விடுத்தனர்.

இதன் அடிப்படையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்டமைப்பு எம்.பி.க்கள் இதனை வரவேற்று மக்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்ததுடன், மாற்றுவதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு புகையிரதத் திணைக்களத்திற்குத் தெரியப்படுத்துமாறு தெரிவித்தனர்.

இதனைத் தாம் பொது அமைப்புக்களுடன் கதைத்து முடிவு எடுப்பதாக அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

# கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி நியமிப்பு

வடமராட்சி,

கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரியாக வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி அதிபர் சி. நற்குணலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய ந. தபேந்திரராசா சேவையிலிருந்த இளைப்பாறியதைத் தொடர்ந்து இப்பதவிக்கு சி. நற்குணலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், கரணவாய் மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் அதிபராகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Yarl Osai

# யாழ் ஓசை

2011 ஏப்ரல் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2222730, Fax: 0212222730
E-mail-jaffna@virakesari.lk

## யாழில் அதிகரிக்கும் தற்கொலைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை அவசியம்

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதானது மனிதாபிமானமுள்ள அனைவரையும் ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியுள்ளது.

இந்த வாரத்துக்குள் மாத்திரம் யாழ். மாவட்டத்தில் இருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

கே.கே.எஸ்.வீதியில் வசிக்கும் 23 வயது இளைஞர் ஒருவரும் சிறுப்பிட்டியில் வசிக்கும் 44 வயது குடும்பஸ்தர் ஒருவருமே தூக்கில் தொங்கிய நிலையில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

பாமர மக்கள் மாத்திரமின்றி படித்தவர்கள் கூட இவ்வாறு தற்கொலை செய்து கொள்வதானது யாழ். மாவட்ட மக்களின் உளவியல் ரீதியான பிரச்சினைகள் எந்தளவு தூரம் தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ளன என்பதை தெளிவாகக் காட்டி நிற்பதுடன் சமூகத் தலைமைகளை சிந்திக்கவும் தூண்டியுள்ளது.

இது தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் உளநல பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த வருடத்தை விட இவ் வருடம் யாழ். மாவட்டத்தில் தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

இளவயதுக் காதல் தோல்விகள், பரீட்சையில் சித்தியின்மை, குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளமை, வறுமை, ஆதரவுக்கு யாருமற்ற அநாதரவான நிலை ஆகிய பிரதான காரணங்களினாலேயே யாழ். மாவட்டத்தில் அதிகமானோர் தற்கொலை செய்து கொள்வதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அதிகரித்துச் செல்லும் தற்கொலைகளைக் கட்டுப்படுத்த வெளிநாடுகளிலிருந்து உளவளத்துணை நிபுணர்கள் வரவழைக்கப்படவுள்ளதாகவும் மாவட்டம் தழுவிய ரீதியில் உளவளத்துணை கருத்தரங்குகளை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

இலங்கையில் போர் நடைபெற்ற காலப்பகுதியில் வடக்கு கிழக்கு பகுதிகளில் தற்கொலை வீதம் அதிகரித்திருந்ததை நாம் அறிவோம்.

இதற்கு போரும் அதனால் ஏற்பட்ட விளைவுகளுமே காரணம் எனக் கூறப்பட்டது. ஆனால் இன்று போர் முடிவுற்று இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் அதுவல்லாத வேறு பல காரணங்களால் மக்கள் தற்கொலையை நாடிச் செல்கின்றனர்.

எனவேதான் இந்த இடத்தில் பாரம்பரியமிக்க யாழ்ப்பாண மண்ணின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு தற்கொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான ஆக்கபூர்வமான வழிவகைகள் குறித்து சிந்திப்பது அனைவரதும் கடமையாகும்.

யாழ். போதனா வைத்தியசாலையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காரணிகளை முன்னிறுத்தி அவற்றிலிருந்து மக்களை விடுவிப்பதற்கான நடைமுறைச்சாத்தியமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வது அனைவரினதும் கடமையாகும்.

இது விடயத்தில் போதனா வைத்தியசாலை முன்னெடுத்துள்ள உளவளத் துணை சார்ந்த நடவடிக்கைகள் வரவேற்புக்குரியவை.

அதேபோன்று யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஏனைய பொது அமைப்புகளும் இது விடயத்தில் வைத்தியசாலைக்கு உறுதுணையாகச் செயற்படுவது அவசியமாகும்.

சமூகத்தைப் பாதிக்கும் வகையிலான நிகழ்வுகள் தலைதூக்கும் போது அதனை ஒதுங்கி நின்று பார்ப்பதை விடுத்து அவற்றைத் தடுத்து நிறுத்தி முழு சமூகத்தையும் அந்த தீமையிலிருந்து பாதுகாப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்வது ஒவ்வொரு பொது மகனினதும் தலையாய கடமையாகும்.

இந்தக் கடமையை நாம் செவ்வனே நிறைவேற்றத் தவறுவோமாயின் அதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளுக்கு நாம் அனைவரும் அல்லது நமது சந்ததியினர் அனைவருமே முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என்பதை இந்த இடத்தில் நினைவூட்ட விரும்புகிறோம்.

எனவே இன்று யாழ்ப்பாணத்தில் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ள தற்கொலை மோகத்திலிருந்து மக்களை விடுவிக்கும் நடவடிக்கையில் அனைவரும் முனைப்புடன் செயற்படவேமாக.

## சீனாவுக்கு சாதகமாகும் இலங்கை - பாகிஸ்தான் உறவு

(சென்றவாரத் தொடர்ச்சி)

பாகிஸ்தான் ஜனாதிபதி அசீப் அலி சர்தாரியின் இலங்கைக்கான பயணம் இரு நாட்டு உறவில் புதியதொரு உதயம் எனப் பாகிஸ்தானிய அமைச்சர்கள் புகழாரம் சூட்டியிருந்தார்கள். பாகிஸ்தானில் இராணுவ அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது பாதுகாப்புடன் தொடர்புடைய ஒத்துழைப்பே இரு நாடுகள் மத்தியிலும் அதிகம் இருந்தன எனவும் இன்றைய நிலையில் இரண்டு நாடுகளும் பரஸ்பர பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகள் தொடர்பாக இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவினை விரிவுபடுத்துவதற்கு வழி பிறந்திருப்பதாக பாகிஸ்தானிய அரச தரப்பினர் வாதிட்டனர்.

போருக்குப் பின்னான மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கும் வகையில் இலங்கைக்கான உதவிகளை வழங்குவதென சர்தாரி அரசாங்கம் தகுந்ததொரு முடிவினை எடுத்திருந்தது. வீழ்ச்சியடைந்து செல்லும் பாகிஸ்தானியப் பொருளாதாரத்தினை மீண்டும் தூக்கி நிறுத்துவதற்கான ஒரு முயற்சியாக இது அமைகிறது. அத்தோடு இது தனக்கான அரசியல் ஆதரவை வென்றெடுப்பதற்கும் வழிசெய்யும் என பாகிஸ்தான் நம்பியது.

இலங்கையில் தான் மேற்கொண்டுவரும் போருக்குப் பின்னான மீள்கட்டுமானப் பணிகளைச் சீனா துரிதமாக விரிவாக்கி வருகிறது. தனக்கும் சீனாவிற்கும் இடையில் நீண்ட பல காலமாக நல்லுறவு நிலவிவருகின்ற நிலையில், இலங்கையில் சீனாவின் தலைமையில் முன்னெடுக்கப்படும் மீள்கட்டுமானத் திட்டங்களில் தனக்குமொரு பங்கு வழங்கப்படும் என்ற நம்பிக்கையில் பாகிஸ்தான் இருக்கிறது.

தான் கைக்கொள்ளும் இந்த மூலோபாயமானது, இந்தியாவினை இலக்குவைத்த அரசியல்சார் நடவடிக்கைகளுக்கு அப்பால், இந்தப் பிராந்தியத்தில் பாகிஸ்தான் பொருளாதார ஒத்துழைப்பு ஊடாக பரந்துபட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு வழிசெய்கிறது.

பிராந்திய சக்தியாகத் திகழவேண்டும் என்ற இந்தியாவின் எண்ணத்திற்குச் சவால் விடும் வகையில் சீனா செயற்பட்டுவரும் நிலையில், இந்தியாவிற்கு எதிரான செயற்பாடுகளைத் தானே முன்னெடுப்பதை விடுத்து சீனாவிற்குச் சேவையாற்றுவதுதான் பொருத்தமானது எனப் பாக். அரசு கணக்கிடுகிறது.

**சீனாவின் வருகை**

இலங்கையுடனான பாகிஸ்தானின் எதிர்கால உறவினைத் தீர்மானிப்பதில் சீனாவின் முக்கியத்துவம் தொடர்பாக பாகிஸ்தானின் வெளியுறவு அமைச்சர் மெமூட் குறேசி விளங்கிக்கொண்டார். 'பாகிஸ்தானுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவை விரிவுபடுத்துவதற்கான கட்டமைப்பு' தொடர்பாக நம்பிக்கை தெரிவித்த அவர், சீனாவின் இலங்கையுடனான உறவு பாகிஸ்தானுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது திருப்திதருவதாக அமைவதாகவும் இந்த உறவு இரண்டு நாடுகளுக்கும் நன்மையளிப்பதாக அமையும் எனவும் அவர் வெளிப்படையாகவே தெரிவித்தார்.

இத்தகைய உறவு நிலையிலேயே கடந்த நவம்பரில் இலங்கை, நான்கு பிரதான உடன்படிக்கைகளை பாகிஸ்தானுடன் கைச்சாத்திட்டது. இந்த உடன்படிக்கை பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பான இரு நாடுகளினதும் கரிசனையை வெளியிட்ட அதேவேளையில், போருக்குப் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளில் பாகிஸ்தானின் முக்கிய பங்கை வெளிப்படுத்துவதற்கான தளமாக அமைந்தது.

இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் பொருளாதாரத் தொடர்புகளாலேயே பாகிஸ்தானும் வர்த்தகம் மற்றும் முதலீட்டில் இந்தப் பங்கை வகிக்கும் நிலைக்கு உந்தப்பட்டதாகத் தெரிகிறது. சீனாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் பல்வேறு திட்டங்களுள் கொழும்புக்கு அண்மையில் 'மிரிகம' எனும் இடத்தில் பிரத்தியேக பொருளாதார வலயம் ஒன்றை உருவாக்குவதற்கும் முயற்சிக்கிறது. மேலும் அதிக சீன முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக பாரிய கட்டுமானத் திட்டங்களை சீனா முன்னெடுக்கப்பட்டு வருகிறது. 'இலங்கையில் கிடைக்கக் கூடிய அனைத்து முதலீட்டு வாய்ப்புக்களையும் பயன்படுத்தவேண்டும்' என்றே பாகிஸ்தான் விரும்புகிறது. ஆனால், இந்த வாய்ப்புக்கள் யாவும் தற்போது இந்தியாவைத் தந்திரமாகக் கையாண்டு வெற்றிபெறுவதைவிட சீனாவுடன் பங்காளியாகச் சேர்ந்துகொள்வதிலேயே அதிகம் தங்கியிருப்பதாகத் தெரிகிறது.

அவ்வாறாயின், பாகிஸ்தானின் பிராந்தியக் கொள்கை இயக்கங்கள் தொடர்பாக சில மீளாய்வுகளை மேற்கொண்டு, மேலும் சிக்கலான விடயங்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். இதற்கா[illegible] இந்தியா தொடர்பான பாகிஸ்தானின் பாதுகாப்புக் கரிசனைகளைத் தளர்த்த வேண்டும் என்பதல்ல.

இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தான் தலைமையிலான அணி என்ற கருத்து சுற்றுவட்டத் தந்திரோபாயம் என்ற கட்டாய இராணுவ கொள்கைக்கு அப்பாலும் பரிணமிப்பதற்கான சமிக்ஞைகளைக் காட்டுகின்றது. முக்கியமாக, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான பகைமையைவிட, இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே தென்னாசியாவின் பூகோள அரசியல் சக்தியாகப் பரிணமிப்பதற்கான போட்டி தற்போது ஆரம்பமாகி விட்டது என்பதை பாகிஸ்தான் புரிந்து கொண்டிருப்பது பிரதிபலிப்பதாகத் தெரிகிறது.

அதேவேளையில், இந்தியாவின் செல்வாக்கை இலங்கையில் இல்லாது செய்யலாம் என்ற நம்பிக்கையில் அந்த உறவைத் தக்கவைப்பதற்காக சீனாவில் தங்கியிருப்பதன்மூலம், இந்தியாவுக்கு 'இணையாக' வரும் தனது விருப்பத்திற்கு வல்லாதிக்க சக்திகளில் தங்கிநிற்கும் தனது நீண்டகாலக் கொள்கையை பாகிஸ்தான் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறது.

தி. வண்ணமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நேர்மைக்கான போராட்டத்தை சந்தேகப்படக்கூடாது ‘லோக்பால்’ அமைப்பை முழுமனதுடன் ஆதரிக்கிறேன்



## அன்னா ஹசாரேவுக்கு சோனியா காந்தி கடிதம்

**புதுடில்லி,**

பொதுவாழ்வில் நேர்மையை கட்டிக் காக்கும் போராட்டத்தில் எனது உறுதிப்பாட்டை சந்தேகப்படக்கூடாது, லோக்பால் அமைப்பை உருவாக்குவதை முழுமனதுடன் ஆதரிக்கிறேன் என்று அன்னா ஹசாரேவுக்கு எழுதிய கடிதத்தில் சோனியா காந்தி குறிப்பிட்டுள்ளார்.

ஊழலை ஒழிப்பது தொடர்பான லோக்பால் மசோதாவை உருவாக்க, 5 மத்திய அமைச்சர்களும், 5 சமூக பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டுக்குழு அமைக்கப்பட்டு உள்ளது.

இக்குழுவில் இடம்பெற்றுள்ள சமூக பிரதிநிதிகளுக்கு எதிராக காங்கிரஸ் பிரமுகர்கள் அவதூறு பிரசாரத்தில் ஈடுபட்டு இருப்பதாகவும், அவர்களுக்கு அறிவுரை கூறுமாறும் காங்கிரஸ் தலைவி சோனியா காந்திக்கு காந்தியவாதி அன்னா ஹசாரே கடிதம் எழுதி இருந்தார்.


இந்த கடிதம் தொடர்பாக நேற்றுமுன்தினம் ஹசாரேவுக்கு சோனியா காந்தி, பதில் கடிதம் எழுதி உள்ளார். அதில் அவர்,

நான் அவதூறு பிரசார அரசியலை ஆதரிப்பதும் கிடையாது, ஊக்குவிப்பதும் கிடையாது. ஊழலையும், லஞ்சத்தையும் ஒடுக்குவது அவசர அவசியமானது என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. பொது வாழ்க்கையில் நேர்மையை கட்டிக்காப்பதற்கான போராட்டத்தில் எனது உறுதிப்பாட்டை நீங்கள் சந்தேகப்படக்கூடாது.

லோக்பால் அமைப்பை உருவாக்குவதை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். அந்த மசோதா தொடர்பான விஷயம், எனது தலைமையிலான தேசிய ஆலோசனை கவுன்சிலின் செயற்றிட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த மசோதா தொடர்பாக சாந்தி பூஷண், பிரசாந்த் பூஷண், அரவிந்த் கெஜ்ரிவால், சந்தோஷ் ஹெக்டே, சுவாமி அக்னிவேஷ் ஆகிய சமூக பிரதிநிதிகளுடன் கடந்த 4 ஆம் திகதி தேசிய ஆலோசனை கவுன்சில் சார்பில் ஆலோசனை நடத்தப்பட்டு உள்ளது. இந்த நடவடிக்கைகள் அனைத்தையும், அதன்பிறகு நடந்த சம்பவங்கள் பின்னுக்கு தள்ளி விட்டன என்று கூறியுள்ளார்.

## அரசியல் களத்தில் யோகா ஆசான்



இந்தியாவின் மிகப் பிரபலமான யோகாசனப் பயிற்சி ஆசானான பாபா ராம்தேவ், எதிர்வரும் ஜூன் மாதம் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கப்போவதாகவும், அந்தக் கட்சி இந்திய பாராளுமன்றத்துக்கான அடுத்த தேர்தலில் போட்டியிடவுள்ளதாகவும் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இது குறித்து அவர் கூறியதாக வெளியான செய்தியில்,

ஊழலுக்கு எதிராக புதிய சட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்று நடந்து வருகின்ற ஆர்ப்பாட்டங்களில் பாபா ராம் தேவ் கலந்து கொண்டிருந்தார்.

ஊழலில் திளைக்கும் அரசியல்வாதிகளை எதிர்த்து நேருக்கு நேர் களம் இறங்கப்போவதாக அவர் சூளுரைத்துள்ளார்.

வளம் மிக்க நாடான இந்தியாவை அதன் அரசியல்வாதிகள் சுரண்டுகின்றனர் என்று வாதாடும் இவர், தான் அரசியலுக்கு வருவதன் மூலம் இந்திய அரசியலில் புரையோடிப்போயுள்ள ஊழலைக் களைய முடியும் என்றார்.

## மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண ‘கடல் முற்றுகை’ போராட்டம்

### பொன்.ராதாகிருஷ்ணன்



**மதுரை :**

தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கக்கோரி எதிர்வரும் மே மாதம் கடல்முற்றுகை போராட்டம் நடத்துவோம் என பா.ஜ.மாநில தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறினார். இது குறித்து அவர் மதுரையில் கூறியதாவது:

தமிழக மீனவர்கள் நான்குபேரை இலங்கை கடற்படையினர் சுட்டு கொன்றுள்ளனர். அவர்களின் உடல்களை மீட்பதில் மத்திய அரசு மெத்தனம் காட்டியது. மத்திய, மாநில அரசுகள் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை எனில் பா.ஜ. சார்பில் மே மாதம் கடல் முற்றுகை போராட்டம் நடைபெறும்.

இலங்கையில் தமிழர்கள் மீதான போரில், அந்நாட்டு அரசுக்கு சாதகமாக மத்திய, மாநில அரசுகள் நடந்து கொண்டதாக ஐ.நா. விசாரணைக்குழு தெளிவுபடுத்தியுள்ளது. செய்த துரோகத்திற்கு இலங்கை அரசு மன்னிப்பு கோர வேண்டும் என்றார்.

## தங்கபாலு, ஆசாத் கொடும்பாவி எரிப்பு



**திருவாரூர் :**

தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு மற்றும் மேலிட பொறுப்பாளர் குலாம் நபி ஆசாத் ஆகியோரை பதவி நீக்கம் செய்யக் கோரி அவர்களது கொடும்பாவியை, மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் எரித்தனர்.

தமிழக காங்கிரஸ் மேலிட பொறுப்பாளர் குலாம் நபி ஆசாத், தமிழக காங்கிரஸ் குழுத் தலைவர் தங்கபாலு ஆகிய இருவரையும் பதவி நீக்கம் செய்யக் கோரி, திரு வாரூர் மாவட்ட காங்கிரஸ் சார்பில் பஸ் நிலையம் அருகில், ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் 30 பேர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் போது தங்கபாலு, குலாம் நபி ஆசாத் ஆகியோரின் உருவ பொம்மையை திடீரென எடுத்து வந்து, தீ வைத்து கொளுத்தினர். ஆயினும் அதை பாதுகாப்பு பணியில் இருந்த பொலிஸார் தடுக்காமல், உருவ பொம்மை முழுவதும் எரிந்து முடிந்ததும் அவற்றை அப்புறப்படுத்தினர்.

## ஜெயலலிதா மீது அவதூறு வழக்குகள்

**சென்னை:**

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மீது முதல்வர் கருணாநிதி இரண்டு அவதூறு வழக்குகளைத் தொடர்ந்துள்ளார்.

சென்னை செசன்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அந்த மனுக்களில்,

ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கையில், அ.தி.மு.க. பலமாக உள்ள தொகுதிகளை கண்டறிந்து மத்திய அமைச்சர் ஒருவர் அரசு அதிகாரிகள் துணையுடன், தி.மு.க. ரவுடிகளை கொண்டு மிகப்பெரிய வன்முறையை தேர்தலின் போது கட்டவிழ்த்து விட திட்டமிட்டுள்ளார் என்றும், மறுநாள் வெளியான அறிக்கையில் துணை இராணுவத்தினருக்கு ரூ.300 தினப்படியை முதல்வர் கருணாநிதியின் உத்தரவின்பேரில் தலைமை செயலாளர் கொடுக்க மறுப்பதாக தனக்கு தகவல் கிடைத்துள்ளது என்றும், இதனால் துணை இராணுவத்தினர் போராட்டம் நடத்த தயாராக இருப்பதாகவும், எனவே சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

ஜெயலலிதாவின் இந்த அறிக்கைகள் தமிழக அரசுக்கும், முதல்வருக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. எனவே, ஜெயலலிதாவை அவதூறு சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

## போலி விசா விவகாரம்: விக்கிலீக்ஸ் புதிய தகவல்

**புதுடில்லி :**

ஆந்திர தலைநகர் ஐதராபாத் போலி விசா தயாரிப்பின் தலைமையிடமாக விளங்குவதாக ‘விக்கிலீக்ஸ்’ புதிய தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவிற்கான போலி விசா தடுப்பு மையம் சென்னையில் இயங்கி வருகிறது. சென்னை மையம் 2008-2009 இல் போலி விசா குறித்து அமெரிக்காவிற்கு அளித்த அறிக்கையை ‘விக்கிலீக்ஸ்’ தற்போது வெளியிட்டுள்ளது. இந்தியாவின் குஜராத், பஞ்சாப் மாநிலங்களிலும் இது போன்று போலி விசா பெருமளவில் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் சென்னை மையம் தெரிவித்துள்ளதாக ‘விக்கிலீக்ஸ்’ குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாம்களில் எஞ்சியுள்ள மக்களை விரைவில் மீள்குடியேற்றிவிடுவோம்

## வீடுகளை நிர்மாணிக்கும் வகையில் ஒரு இலட்சம் உதவித்தொகை என்கிறார் அமைச்சர்

வவுனியா முகாம்களில் எஞ்சியுள்ள அகதி மக்களை மிக விரைவில் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும். குறிப்பிட்ட பிரதேசங்களில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். மக்களை விரைவில் மீள்குடியேற்றவேண்டும் என்ற நோக்கத்திலேயே நாங்களும் செயற்பட்டுவருகிறோம் என்று மீள்குடியேற்ற விவகார அமைச்சர் குணரட்ன வீரக்கோன் தெரிவித்தார்.

மீள்குடியேற்ற செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன என்று விபரிக்கையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை கூறினார்.

அவர் இவ்விடயம் குறித்து மேலும் கூறுகையில்:-

வவுனியா நலன்புரி முகாம்களில் எஞ்சியுள்ள சுமார் 15 ஆயிரம் குடும்பங்களை விரைவில் மீள்குடியேற்ற எமது அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆரம்பத்தில் சுமார் மூன்று இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் காணப்பட்டனர்.

ஆனால் அவர்களில் அதிகமானோரை நாங்கள் மீள்குடியேற்றிவிட்டோம். அது உண்மையில் மிகப்பெரிய விடயமாகும். இந்நிலையில் எஞ்சியுள்ள மக்களையும் மீள்குடியேற்றும் நோக்கிலேயே அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதில் நிலக்கண்ணிவெடிகளே பிரதான தடையாக அமைந்துள்ளன. எனவே நிலக்கண்ணிவெடிகளை அகற்றியதும் முகாம்களில் எஞ்சியுள்ள மக்களை மீள்குடியேற்றிவிடுவோம்.

இதேவேளை மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு வீட்டுப் பிரச்சினையே முதன்மை பிரச்சினையாக உள்ளது. அந்த வகையில் மீள்குடியேற்றப்படும் அனைத்து குடும்பங்களுக்கும் வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்கும் நோக்கில் வீடமைப்பு அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம்.

இதேவேளை வீடுகளை அமைத்துக் கொடுக்கும் வேலைத்திட்டத்தின்போது மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கு ஒரு இலட்சம் ரூபாவை உதவித் தொகையாக வழங்கவும் திட்டமிட்டுள்ளோம் என்றார்.

# வெள்ளத்தால் சேதமடைந்த கனகராயன் பாலத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

நெடுங்கேணி,

கடந்த மார்கழி, தை மாதங்களில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் கனகராயன் ஆறு பெருக்கெடுத்து ஓடியது. இதனால், கனகராயன்ஆற்றுப்பாலத்தினூடான பிரயாணம் துண்டிக்கப்பட்டுள்ளது.

கனகராயன் ஆற்றுப் பகுதியை கடப்பதற்கு இனப்பிரச்சினையின் பின்னர் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட இப்பாலத்தினூடாக போக்குவரத்து மேற்கொண்டு வந்தனர்.

ஆனால், தற்போது இப்பாலம் சற்று விரிசல் ஏற்பட்டு விலகியுள்து. இதனால், அப்பகுதியினூடான வாகனங்கள், பார ஊர்திகள் செல்வதற்கு தடை ஏற்பட்டுள்ளது.

மீண்டும் தற்போது அப்பகுதியில் மழை பெய்கின்றமையால் அப்பாலம் மேலும் சேதமடைந்து போக்குவரத்து துண்டிக்கப்படுகின்ற நிலைமை ஏற்படுமோ என மக்கள் அச்சம் கொள்கின்றனர். இதனால், உரியவர்கள் கருத்திலெடுத்து அப்பாலத்தைச் சீர் செய்து தருமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

---

### மூனின் கருத்து...(தொடர்ச்சி)

கருத்து இன்னும் இரண்டொரு தினங்களில் வெளியிடப்படும் என்று அறியக்கிடைத்துள்ளது.

இன்னும் இரண்டொரு தினங்களில் வெளியாகவுள்ள பான் கீ மூனின் செய்திக் குறிப்பில் நிபுணர் குழுவின் அறிக்கை குறித்த அவரது முழுமையான கருத்து வெளியிடப்படும் என்று ஐ.நா. சபை இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து செய்திகள் கசிந்துள்ளன.

இலங்கையின் போர்க்குற்றம் குறித்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கு அவரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அவரிடம் கையளிக்கப்பட்டு பல நாட்கள் கடந்து விட்ட நிலையிலும் இதுவரை அவர் அது குறித்து எது வித கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

### காக்கைதீவு...(தொடர்ச்சி)

கவலையும் விசனமும் தெரிவித்து ள் ள சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் என். பொன்னம்பலம், கலங்கரைவிளக்கம் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார். காக்கைதீவு மீன் பிடித்துறையிலிருந்து சாவல்கட்டு, ஆனைக்கோட்டை, நவாலி, உயரப்புலம், நாவாந்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவர்கள் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இரவு நேரங்களில் தொழில்செய்யும் இவர்கள் மழைக் காலங்களிலும் காற்று வீசும் நேரங்களிலும் திரும்பிவருவதற்கு திசைதெரியாமல் பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். கடற்றொழிலாளர்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைகத் தீர்க்கும் வகையில் சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் யாழ்ப்பாணம் கடற்றொழில் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு கலங்கரை விளக்கம் பொருத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

ஆனால், கலங்கரை விளக்கத்தைப் பராமரிப்பதற்கான பொறுப்பை ஏற்க வலி. தென்மேற்குப் பிரதேச சபை மறுத்துவிட்டது. இதனால், இப்பணி கைவிடப்பட்டுள்ளது. மீனவர்களின் நன்மை கருதி கலங்கரை விளக்கம் பொருத்துவதற்கான நடவடிக்கையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

---

### யாழ்ப்பாணத்தில்...(தொடர்ச்சி)

இது தொடர்பாக அவ் மையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

குடும்ப வன்முறைகளாலும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் துஷ்பிரயோகங்களினாலும் பெண்கள் மிகவும் அவஸ்தைப்பட்டு வருகிறார்கள். வக்கிர தன்மை கொண்ட ஆண்களினால் பெண்களுக்கான உரிமை மீறல்கள் யாழில் அதிகரித்து வருகின்றன.

பெண்களுக்கு சமூகத்தில் கிடைக்கக் கூடிய அஸ்தஸ்து பெரிதும் ஆண்களினால் தடுக்கப்படுகின்றது.

பெண்கள் மீதான பாலியல் ரீதியான சேட்டைகளும், பாலியல் துஷ்பிரயோகங்களும் பாடசாலை மட்டத்தில் இருந்து பல்கலைக்கழகங்கள் வரை மிக இரகசியமான முறையில் அரங்கேறி வருகிறது இதனால் ஆண்கள் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்கின்றனர்.

---

### கடற்றொழி...(தொடர்ச்சி)

இந்த வருடத்தில் அதிகளவான மீனவர்கள் தங்களுடைய தொழில் வளங்களை இழந்துள்ளனர். இந்திய மீனவர்களுடைய அத்துமீறிய செயற்பாடுகளினால் வட பகுதி மீனவர்களுக்கு வருடம் ஒன்றுக்கு 12 கோடி ரூபா நட்டம் ஏற்படுகின்றது.

வடமாகாண மீனவர்களின் கடல் வளங்கள் மற்றும் சொத்தழிவுகளுக்கு இதுவரை எந்தவித நட்டஈடுகளும் வழங்கப்படவில்லை இதனால் அவர்களின் குடும்பங்கள் மிகவும் வறுமையான நிலையில் வாழ்ந்து வருகின்றன.

எதிர்வரும் காலங்களில் மீனவர்களின் உரிமைகள் மீறப்படுவதை அனுமதிக்க முடியாது. எனவே இவ்வாறான பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்குமுகமாகவே மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடவுள்ளோம் - எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடபகுதி கடற்றொழிலாளர்கள் தங்கள் வாழ்க்கைத்தரத்தை எந்தவகையிலும் உயர்த்த முடியாதவர்களாகவே இருந்து வருகின்றனர். கடந்த காலங்களில் இடம் பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாக தமது தொழிலுக்கான உபகரணங்கள், தோணிகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பனவற்றை இழந்த அவர்களால் மீண்டும் அவற்றைக் கொள்வனவு செய்யக்கூடிய வகையில் வருமானமோ வசதிகளோ இல்லாதிருப்பதாக மிகுந்த விசனம் தெரிவிக்கின்றனர்.

அதேபோன்று வீடுவாசல்களை இழந்தவர்களும் தொடர்ந்து நிர்க்கதியான நிலையிலேயே இருந்து வருகின்றனர். வடபகுதி கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளைப் போக்க காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் தொடர்ச்சியாக கோரி வருவது குறிப்பிடத்தக்கது.

---

### நெதர்லாந்து...(தொடர்ச்சி)

புனரமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்காக வெளிநாட்டு உதவிகளும் பெறப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் செனரத் திசாநாயக்க இவ்விடயம் குறித்து மேலும் கூறியதாவது

யுத்தகாலத்தில் வடக்கில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அடையாளம் காண முடியவில்லை. ஆனால் யுத்தம் முடிவ்டைந்துள்ள நிலையில் 400 இடங்கள் தொல்பொருள் பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

மேலும் யுத்தத்துக்கு முன்னர் வடக்கில் 280 பிரதேசங்கள் தொல் பொருள் பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டிருந்தன. அந்த வகையில் தற்போது 680 பிரதேசங்கள் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களாக பிரகடணப்படுத்தப்படும்.

யாழ்ப்பாண கோட்டையை புனரமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதற்காக நெதர்லாந்து அரசாங்கம் 60 மில்லியன் ரூபாவையும் அரசாங்கம் 40 மில்லியன் ரூபாவையும் செலவிட்டுள்ளன. இதனை ஒருங்கிணைக்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் தேசிய தொல்பொருள் திணைக்களத்தின் அலுவலகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று வடக்கு கிழக்கில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மக்களிடம் பாரம்பரிய கலைகளை ரசிக்கும் பண்பு அருகிவருகிறது

## வில்லிசைக் கலைஞர் இரா.ஸ்ரீதரன்

**பாரம்பரிய இசைவடிவங்களுள் வில்லிசைக் கலை மகத்தானது. சிறுவர்கள் முதல் பெரியோர் வரை அகமகிழ்ந்து ரசிக்கும் வில்லிசைக் கலை இன்று அதன் செழுமையிழந்து வருவதாகக் கூறுகிறார் பழம்பெரும் வில்லிசைக் கலைஞர் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன். யாழ்ப்பாணத்திலுள்ள விரல்விட்டு எண்ணக்கூடிய வில்லிசைக் கலைஞர்களுள் அநேக ரசிகர்களின் அன்புக்குப் பாத்திரமாக விளங்கிவரும் இவரை 'யாழ் ஓசை' வாசகர்களுக்காக நேர் கண்டபோது,**

**கேள்வி:-** நீங்கள் பல வருடங்களாக வில்லிசைக் கலையில் தனித்துவம் பெற்ற கலைஞனாக வலம் வருகிறீர்கள். முதலில் வில்லிசைக் கலைபற்றி சிறிது கூறுவீர்களா?

**பதில்:-** இசை என்பது உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளையும் கட்டிப் போட்டுள்ளது. இசையின்றி உயிர்களே இல்லை எனும் அளவிற்கு தனித்துவமான கலைவடிவமாகத் திகழ்கின்றது. அந்த இசையில் ஒரு பகுதி தான் வில்லிசை. இதனை வில்லுப்பாட்டு என்றும் கூறுவர். அதாவது, வில்போன்ற வடிவத்தில் சலங்கை ஒலி எழுப்பத்தக்கவாறு நாணினை வில்லின் இரு துருவங்களிலும் கட்டி அதில் தட்டித்தட்டி பாடுவதே வில்லுப்பாட்டாகும். இது பாரம்பாரிய இசை வடிவங்களில் ஒன்று. பாமர மக்களுக்கு கதைகள் மூலம் நல்லவிடயங்களைக் கூறுவதே இதன் நோக்கமாகும். இதில் முத்தமிழாகியஇயல், இசை, நாடகம் ஒருங்கே சங்கமிக்கின்றன.

**கேள்வி:-** வில்லிசைக் கலை மூலம் எத்தகைய கதையம்சங்களை வெளிப்படுத்தலாம்?

**பதில்:-** வில்லிசைக் கலை மூலம் புராணக் கதைகளையும், இதிகாசங்கள் கூறும் கருத்துக்களையும் சில வரலாற்று உண்மைகளையும் எடுத்துக் கூறமுடியும். நல்ல பல விடயங்களை விளக்கத்தோடு நகைச்சுவையாக எளிய தமிழில் கூறி பெரும் தத்துவங்களையும், கோட்பாடுகளையும் புரியவைக்க இக்கலை வடிவம் பெரிதும் பயன்படும். ஒரு விடயத்தை இசைமூலம் கூறுமிடத்து எளிதில் புரியவைக்க முடியும். எனவே தான் கேட்பதற்கு மிக இனிமையான இசைகளை பயன்படுத்த வேண்டும். கூடுமான வரை தெம்மாங்கு மெட்டில் அமைந்த பாடல்களை இதில் சேர்க்க வேண்டும். நாட்டார் பாடல்களையும் இதில் சேர்க்கலாம். உயர்ந்த உன்னதமான தத்துவங்களை இனிய இசையில் வடிவமைத்து நகைச்சுவைகளையும் கலந்துகொடுப்பது வில்லிசை ஒன்றே என்பது எனது கருத்து.

**கேள்வி:-** வில்லிசைக் கலைக்கு நகைச்சுவை உணர்வு மிகவும் அவசியம் என்று கூறுகின்றீர்கள். நகைச்சுவை கலந்து வில்லிசையைப் படைக்கும் போது மக்கள் மத்தியில் ஏற்படும் பிரதிபலன்கள் பற்றி விளக்கமுடியுமா?

**பதில்:-** 'சிரித்து வாழவேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே' என்பது ஒரு பாடல்வரி. சிரிப்பு ஒரு சிறந்த மருந்து. வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போகும் என்பார்கள். எனவே, வயிறு குலுங்கச் சிரிக்கும் போது எமது உடல்நரம்புகள், தசைகள் செயலூக்கம் பெறுகின்றன. இரத்தோட்டம் சீராக நடைபெறுகின்றன. வில்லுப் பாட்டின் மூலம் மக்களை சிரிக்கவைக்க முடியும். இதனால், உடல் நல்நிலைக்கு வரும். உடலிலுள்ள நோய்கள் இல்லாமல் போகின்றன. ஆகவே, வில்லிசை ஓர் ஔடதமாகத் திகழ்கின்றது என்றால் பிழையில்லை. உலகிலுள்ள ஜீவராசிகளுள் மனிதன் மட்டுடே சிரிக்கும் திறன் படைத்தவன். இதனால், 'சிரிக்கும் விலங்கு' என தனை அறிஞர்கள் குறிப்பிடுவார்கள்.

எனவே தான் ஒரு விடயத்தைக் கதையழகோடும் நகைச்சுவை உணர்வோடும் கூறும் போது அனைவராலும் ரசிக்கப்படுவது மட்டுமன்றி, எளிதில் புரிந்து கொள்ளப்படுவதுமாக இருக்கும்.

**கேள்வி:-** வில்லிசைக் கலை மீதான ஆர்வம் உங்களுக்கு எப்படி வந்தது?

**பதில்:-** 1967ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள அரசடி விநாயகர் ஆலயத்தில் சிவராத்திரி விழாவிற்கு வில்லிசைக் கலையில் புகழ்பெற்று விளங்கும் ஒரு கலைஞரின் நிகழ்வு நடைபெற ஏற்பாடாகியிருந்தது. ஆனால், இறுதி நேரத்தில் அக்கலைஞரால் வரமுடியாமற் போனது. இதனால், எனது தந்தையார் இராசையா என்னை ஊக்குவித்து இக்கலையில் ஆர்வமான ஒரு சிலருடன் சேர்த்து குறுகிய நேரத்திற்குள் பயிற்சிசெய்து அன்றைய சிவராத்திரி விழாவில் எனது அரங்கேற்றத்தை எதிர்பாராத விதமாக அரங்கேற்றம் செய்தார்.

இந்நிகழ்வு எனது வாழ்க்கையில் நடந்த ஒரு

**நேர்கண்டவர் → எஸ்.நதிபரன்**

மறக்கமுடியாத திருப்புமுனை என்றே கூறவேண்டும். ஏராளமான ரசிகர்கள் நிகழ்வு முடிந்ததும் மேடைக்கு வந்து பாராட்டிச் சென்றனர். இதனால், மேலும் பல வில்லிசை நிகழ்ச்சிகளை செய்ய வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட காரணமாயிற்று. இதனால், ஸ்ரீதர் வில்லிசைக் குழுவை அமைத்து இப்பணியை இற்றைவரை தொடர்ந்து வருகிறேன்.

**கேள்வி:-** இதுவரை எத்தனை நிகழ்ச்சிகள் செய்துள்ளீர்கள்? இதன்போது ஏற்பட்ட மறக்கமுடியாத சம்பவம் ஏதேனும் உண்டா என்பது பற்றி கூறுமுடியுமா?

**பதில்:-** எனது நினைவுக்கு எட்டியவரை சுமார் 70 நிகழ்ச்சிகள் வரை செய்துள்ளேன். யாழ். குடாநாட்டில் மட்டுமன்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு, தீவுப் பகுதிகளிலும் எனது வில்லிசைக் கலையை ஆற்றுகை செய்துள்ளேன். அத்துடன், மறக்கமுடியாத சம்பவம் என்று கூறும் போது, வில்லிசைப் பணிகளை பாராட்டியும் கௌரவித்தும் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் எனக்கு பொன்னாடை போர்த்தியும் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன். இதுவே எனது வாழ்நாளில் மறக்கமுடியாத சம்பவமாகும்.

**கேள்வி:-** இதுவரை வில்லிசைத் துறையில் நீங்கள் பெற்ற பட்டங்கள்...

**பதில்:-** பட்டம் என்று கூறும்போது இதுவரை ஒரே ஒரு பட்டத்தையே வில்லிசைத் துறையில் பெற்றுள்ளேன். எனது மணி விழா நிகழ்வு அத்தியடி விநாயகர் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற போது, யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் எனக்கு 'வில்லிசைச் செல்வர்' என்ற பட்டம் வழங்கி கௌரவித்துள்ளார். இதுவே நான் வில்லிசைத் துறையில் பெற்றுக்கொண்ட பட்டம் என்று கூறவேண்டும். அத்துடன் கவிமணி, சைவப்புலவர் போன்ற பல பட்டங்களையும் பெற்றுள்ளேன். என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**கேள்வி:-** தற்போது வில்லிசைக் கலை மீதான ஆர்வம் மக்களிடத்தில் குறைந்து வருவது குறித்து தங்களது கருத்துஎன்ன?

**பதில்:-** இப்போது வில்லிசைக் கலை மீதான ஆர்வம் மக்களிடத்தே குறைந்துவருவது உண்மைதான். காரணம் நேரம் ஒரு முக்கிய பிரச்சினையாக உள்ளது. அதாவது, இன்றைய நவீன யுகத்தில் மக்கள் பரபரப்புடன் இயங்கியவரும் நிலையில் நேரமின்மை காரணமாக மக்களிடம் ரசிப்புத் திறன் குறைவடைந்து வருகிறது. அத்துடன், சினிமாக்களின் தாக்கம் அதிகரித்துள்ளதால் வீடுகளுக்குள்ளேயே முடங்கியிருந்து தமது பொழுதுகளை கழிக்கும் வழக்கம் அதிகரித்து வருகிறது. இதனால், பாரம்பரிய கலைகளை குறிப்பாக, வில்லிசைக் கலையை ரசிக்கும் பண்பு அருகிவருகிறது. முன்னர் ஆலயத் திருவிழாக்களில் வில்லிசைக் கலைக்கு முக்கிய இடம் வழங்குவார்கள். ஆனால், இன்று இசைக்குழுக்கள் அதன் இடத்தைப் பிடித்துள்ளன என்றே கூறிக்கொள்ளலாம்.

**கேள்வி:-** இறுதியாக வளர்ந்துவரும் கலைஞர்களுக்கு என்ன கூறவிரும்புகிறீர்கள்?

**பதில்:-** கலை வடிவம் நன்கு வளர்ச்சி அடையவேண்டுமாகில் அது நாட்டு மக்களிலேயே தங்கியுள்ளது. அவர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாக கைகொடுத்து ஊக்குவித்தால் வளர்ந்து உயர்ந்த நிலையை அடையும்.

அந்த வகையில், எமது அருங்கலையான இந்த வில்லிசைக் கலையும் அருகிப் போகாமல் வளர்ந்து விருட்சமாகி நிழல் தர நாம் ஆவன செய்ய வேண்டும்.

நாங்கள் முற்றுமுழுதாக இணைந்து வில்லிசைக் கலையை வளர்ப்போம் என்று இலட்சிய நோக்கிடன் செயற்பட்டால் மங்கி மறைந்துவரும் இக் கலைக்கு உயிர்கொடுத்துக் காப்பாற்ற முடியும். இதற்கு இன்றை இளம் சமுதாயம் கைகொடுக்க முன்வர வேண்டும். இவர்கள் கைகொடுத்தால் தான் வில்லிசைக் கலையால் தொடர்ந்து வரும் சந்ததியும் நன்மை அடையும் என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்

## நான் பறவை ஆனால்

அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் நான் மிக்க மகிழ்ச்சி அடைவேன். நான் ஒரு பறவையானால் எனது வண்ணச் சிறகை விரித்து ஆனந்தமாய் இருப்பேன். வண்ணக் கிளிகளுடன் வானில் வட்டமிடுவேன். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். அவர்களுடன் சுதந்திரமாய் பறப்பேன்.

'இரவு பகலாக உழைக்கும் கமக்காரர்களுக்கு எவ்வாறு உதவலாம்'- என ஆலோசிப்பேன். என் வயிற்றுக்குத் தீனி போடுவதற்கு கட்டுப்பாடு ஒன்றும் இல்லை. இனிய உலகம் காணும் திருப்தியை நான் வெறுவேன். பசும் புற்களையும் பழமரங்களையும் கண்டு மகிழ்வேன். குறிப்பிட்ட் இடத்திலே காலத்தைக் கழிக்காமல் இறைவன் தந்த இறகினால் இடத்திற்கு இடம் உலாவித் திரிவேன்.

நீண்ட ஆறுகளையும் மலைத்தொடர்களையும் பசுமையான காட்சிகளையும் மீட்டிப்பார்த்து ஆனந்தமடைவேள். சின்னஞ் சிறு குருவிகள்,மைனாக்கள்,புறாக்களுடன் உலாவுவேன். வேண்டிய நேரம் குளங்களில் நான் குளிக்கும் வாய்ப்பு இருந்தால் அதில் குதித்து விளையாடி மகிழ்வேன்.

இறைவனின் கொடைகளையும் இயற்கை எழில்களையும் காணும் பாக்கியம் பெறுவேன். கோவில்களிலுள்ள கோபுரங்களையும் தரிசிப்பேன். மனிதவாழ்வில் காணமுடியாதது இவ்வாழ்வில் கிடைக்கிறது என நினைத்து பூரிப்படைகிறேன். இனிய குயிலின் கீதமும் ஆடும் மயிலின் அழகும் கிளியின் மழலைப் பேச்சும் புறாக்களின் ஓசையும் கேட்டு பறவை இனத்தோடு பண்பாய் வாழ்வேன்.

பறவை வாழ்க்கையைப் போல் நல்ல வாழ்க்கை ஏதும் இல்லை. அப் பாக்கியம் எப்பொழுது வரும் என எதிர்பார்க்றேன்.

*செ.இலக்கியா*
*தரம்-06*
*யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.*

## பறவைகள் விலங்குகளின் ஒலிகள்

| பறவையின் பெயர் | பறவையின் ஒலி | மிருகங்களின் பெயர் | மிருகத்தின் ஒலி |
|---|---|---|---|
| காகம் | கரையும் | நாய் | குரைக்கும் |
| குயில் | கூவும் | பூனை | சீறும் |
| சேவல் | கூவும் | பாம்பு | சீறும் |
| கிளி | பேசும் | யானை | பிளிறும் |
| கோழி | கொக்கரிக்கும் | சிங்கம் | கர்ச்சிக்கும் |
| மயில் | அகவும் | ஆடு | கத்தும் |
| | | மாடு | கதறும் |
| | | புலி | உறுமும் |
| | | கரடி | உறுமும் |

நேசராஜ்குமார் தமிழினி
தரம் -03 ஏ
கிளி மகா வித்தியாயம்.

பிரிட்ஜில் வைக்கும் ட்ரேயில் குளிர்ந்த தண்ணீரை விட சூடான தண்ணீர் விட்டால் உறைந்து விடும் என்பது தவறு. ஆனால், விசேஷ அமைப்புக்கள் கொண்ட ஆய்வகத்தில் இந்நிகழ்வு சாத்தியமாகும். நாம் வீடுகளில் பயன்படுத்தும் பிரிட்ஜில் சூடான தண்ணீரை வைத்தால் வேகமாக ஐஸ் உறைந்து விடும்.

ஒலிவ் மரம் சுமார் 1,500 ஆண்டுகள் வரை வாழும். கடல்கள் உள்ள நாடுகளில் ஒலிவ் மரம் வளர்கிறது. கடினமான தாவரம் மலைப் பிரதேசங்களில் வளரும். குறைந்த அளவு மண் போதும். சாதாரணமாக 500 ஆண்டுகள் வாழும். சில மரங்கள் 1,500 வருடங்கள் வரை வளரும்.

## எங்கள் வீட்டுப் பூனை

*எங்கள் விட்டுப் பூனை*
*மியா மியா பூனை*
*எலியைக் கண்டால் துரத்தும்*
*எங்கள் விட்டுப் வெள்ளைப் பூனை*
*பாலைப் பாலை பருகும் - கண்ணை*
*மூடிக்கொள்ளும்*
*எங்கள் விட்டு வெள்ளைப் பூனை.*

*பந்தைப் பிடித்து விளையாடி*
*பாவனை பல செய்திடும்*
*எங்கள் விட்டுப் பூனை*
*பசியும் சோர்வும் வந்திடவே*
*பாங்காய் ஓடிச் சென்றிடுமே*
*பாலைப் பருகி முடித்திடவே*
*பசியும் நொடியில் பறந்திடவே*
*பஞ்சு மெத்தையில் படுத்திடுமே*
*பாசமான எங்கள் விட்டு*
*வெள்ளைப் பூனை*

*வி.சதுயனன் தரம்-04*
*யா/ கலைவாணி வித்தியாசாலை*
*கைதடி மேற்கு.*

## நாடுகளும் அதன் நாணயங்களும்

| | |
|---|---|
| சீஷெல்ஸ் | சீஷெல்ஸ் ரூபாய் |
| சூடான் | டினார் |
| சிம்பாப்பே | சிம்பாப்பே டொலர் |
| மாலி | CFA ஃபிரேங் |
| தென் ஆபிரிக்கா | ரேண்ட் |
| தென் ஆபிரிக்கா | ரேண்ட் |



அபிராமி கனகசபை தரம் 7B
யாழ் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை



செ.இலக்கியா தரம் 6
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

சிறுவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**

'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்.
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொட்டு வைப்பதில் பிரச்சினையா?

உடலை சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக் கொள்வதில் எவ்வளவு நேரத்தை செலவிட்டாலும் சில வேளைகளில் நம்மை அறியாமல் சில ஆபத்தான சாதனங்களை அழகுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறோம். கூடவே அழையா விருந்தாளியாக வந்துசேர்கிறது 'ஒவ்வாமை'. அதனை தவிர்க்க சின்னச் சின்ன விஷயங்களில் கவனம் செலுத்தினாலே போதும்.

பொட்டு வைப்பதால் சருமத்தில் பிரச்சினை ஏற்படுமா?

பொட்டு வைப்பதில் பொதுவாக பிரச்சினைகள் ஏற்படுவதில்லை. ஆனால், பொட்டுகளை ஒட்ட வைக்கும் பசையின் தரத்தால் சிலருக்கு ஒவ்வாமை (அலர்ஜி) ஏற்படுவதுண்டு. இரசாயனப் பொருளால் உருவாக்கப்பட்டிருக்கும் பசை, தொடர்ந்து நெற்றியில் ஒட்டியிருக்கும்போது அந்தப் பகுதி நிறம்மாறி, வடு உருவாகிவிடும்.



### உயர்ந்த வகை 'பவுடர்'களைப் பயன்படுத்தினால் முகத்தில் சரும நிற மாற்றம் ஏற்படுமா?

'பவுடர்' மூலம் நிரந்தரமான சரும மாற்றம் எதுவும் ஏற்படாது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் உலர்ந்த சருமத்தைக் கொண்டவர்கள் பவுடர் பூசாமல் இருப்பது நல்லது. பவுடரில் மணத்திற்காக சில இரசாயன பொருட்கள் சேர்க்கப்படுகின்றன. அவைகள் சிலருடைய உடலுக்கு அலர்ஜியை ஏற்படுத்துகிறது. ஆனால், வெய்யில் சருமத்தில் விழுவதைத் தடுக்க 'சன் ஸ்கிரீன் கிரீம்' பூசுவது நல்லது.

### எண்ணெய் தேய்த்துக் குளிப்பது சருமத்திற்கு நல்லதா?

எண்ணெய் தேய்த்து குளிப்பது ஏன்பது இந்தியாவின் ஒரு பகுதியில் இருக்கும் பாரம்பரிய பழக்கம். அதனால், சருமத்திற்கு மினுமினுப்பு கிடைக்கும் என்பது உண்மைதான். வறண்ட சருமத்தைக் கொண்டவர்களுக்கு இது நல்ல பலனளிக்கும். ஆனால், எண்ணெய் சருமம் கொண்டவர்களுக்கு மேலும் எண்ணெயை தேய்த்து எந்த பலனும் ஏற்படப்போவதில்லை. எண்ணெயை தேய்த்துவிட்டு 'சோப்' போட்டு குளிக்கும்போது சருமத்தில் இருக்கும் எண்ணெயும் சேர்ந்து தண்ணீரோடு போய்விடும். வறண்ட சருமத்தைக் கொண்டவர்கள் குளித்த பின்பு, நனைந்த துணியால் சருமத்தில் இருக்கும் தண்ணீரை ஒற்றி எடுக்கவேண்டும். அதன் பின்பு மிகக்குறைந்த அளவு எண்ணையை எடுத்து, லேசாக சருமத்தில் தேய்த்துக்கொள்ள வேண்டும். குளிப்பதற்கு முன்பு அதிகமாக எண்ணெய் பூசிக்கொள்வதைவிட, குளித்த பின்பு சிறிதளவு எண்ணெய் பூசிக்கொள்வதே சிறந்தது.

### தினமும் எத்தனை தடவை குளிக்கவேண்டும்?

எத்தனை தடவை குளிக்கிறோம் என்பதை விட, உடலில் அழுக்கு சேரக்கூடாது என்பதுதான் முக்கியம். மூன்று நேரம் குளித்த பின்பும் உடலில் அழுக்கு நீங்காமலே இருந்தால் எந்த பயனும் இல்லை. வியர்வை அழுக்கு, வேலை பார்க்கும் அல்லது வசிக்கும் சூழலுக்கு தக்கபடி உடலில் இருக்கும் அழுக்கை போக்கும் விதத்தில் குளிக்கவேண்டும். தினமும் இரண்டு தடவை குளிக்கலாம்.

# சான்விட்ச்



**தேவையான பொருட்கள்:**

மாஜரீன் - 125 கிராம், அரைத்த சீனி - 125 கிராம், முட்டை - 2, மா - 125 கிராம், கொக்கோப் பவுடர் - 1 மேசைக்கரண்டி, ஸ்ரொபெரி ஜாம் - 3 மேசைக்கரண்டி

**செய்முறை:**

மாவுடன் கொக்கோ பவுடர் கலந்து ஐந்து முறை அரித்துக்கொள்க.

பாத்திரத்தில் மாஜரீனையிட்டு, அரைத்த சீனியைச் சேர்த்து நன்றாக அடித்த பின் ஒரு முட்டையைச் சேர்த்து அடித்து, மாவில் அரைவாசியை சிறிது சிறிதாகத் தூவிச் சேர்த்துக் கொண்டபின் மற்றைய முட்டையை விட்டு அடித்து மிகுதி மாவைச் சேர்த்து அடித்துக் கொண்டபின் மாஜரீன் பூசிய தட்டிலூற்றி 345 பாகை பரனைட்டில் 30 - 04 நிமிடங்கள் 'பேக்' செய்து எடுத்து 'சான்ட்விட்ச்' நன்றாக ஆறியபின் நடுவாக இரண்டு சம பாதியாகப் பிளந்து ஒரு துண்டுக்கு ஜாம் பூசி மறுதுண்டால் மூடிய பின்னர் துண்டுகளாக வெட்டியெடுத்து பரிமாறலாம்.

# இறால் பஜ்ஜி

**தேவையான பொருட்கள்**

கோதுமை மா - 4 மேசைக்கரண்டி, பேக்கிங் பவுடர் - 1/2 தேக்கரண்டி, உப்பு - தேவையான அளவு, மிளகுத்தூள் - 1 தேக்கரண்டி, முட்டை - 2, தண்ணீர் - தேவையானளவு, பெரிய இறால் - 1/2 கிலோகிராம், தேங்காய் எண்ணெய் - 1/2 போத்தல்.

**செய்முறை:**

முட்டையை உடைத்து வெண்கரு புறம்பாகவும், மஞ்சட்கரு புறம்பாகவும் எடுத்துவைக்குக.

இறாலைத் துப்பபுரவாக்கிக் கழுவி உப்புத்தூள் புர்டி ருத்பெக்/ஈர்க்கில் துண்டை ஒவ்வொரு இறாலின் நடுவேயும் குற்றிக் கொள்க.

மாவை அரித்துப் பாத்திரத்திலிட்டு பேக்கிங் பவுடர், மிளகுத்தூள், உப்புத் தூள் என்பன இட்டு முட்டை மஞ்சள் கருவைச் சேர்த்து நன்கு கலந்துகொண்ட பின் தண்ணீரை அளவுக்குகு விட்டு கூழ்ப்பதமாகக் கரைத்துக் கொள்க.

ருத்பெக்கில் குற்றிய இறால்களை ஒவ்வொன்றாக எடுத்து மாக்கரைசலில் தோய்த்து பின் முட்டை வெண்கரு நுரையில் தோய்த்து கொதிக்கும் எண்ணெயிலிட்டு பொன்னிறமாக பொரித்துக் கொள்க.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி அபாயம் உள்ளதால் தொழில்செய்வதை தவிர்க்க வேண்டும்

## கரைச்சி வடக்கு கடற்றொழில் சமாசம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,

பேய்ப்பாறைப்பிட்டிக் கடற்பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்படாமலிருப்பதினால் அப்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு படையினரால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. எனினும் அங்கு மீனவர்கள் சிலர் திருட்டுத்தனமாக மீன்பிடித்து வருகின்றனர். அங்கு மீன் பிடிப்பதை தவிர்க்குமாறு கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

உத்தரவை மீறி தொடர்ந்தும் தொழிலில் ஈடுபடுபவர்கள் மீது பொலிஸாரின் உதவியுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சமாசம் அறிவித்துள்ளது.

வன்னிப் பிரதேசத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற் யுத்தத்தைத் தொடர்ந்து பேய்ப்பாறைப்பிட்டிப் பிரதேசத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டன. இதவற்றை அகற்றுவதில் ஏற்பட்ட தாமதத்தால் அப்பகுதியிலுள்ள கடற்பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்குப் படையினர் தடை விதித்தனர்.

இந் நிலையில், இப்பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட்ட மீனவர்கள் வறுமையின் காரணமாக படையினரின் அறிவித்தலையும் பொருட்படுத்தாமல் கடலுக்குச் சென்று மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இதனால், உயிருக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்புமிருக்கின்றது.

இந்த நிலையைக் கருத்திற்கொண்டு மீனவர்களின் நலன் கருதி தடைசெய்யப்பட்ட பிரதேசங்களில் மீன்பிடிப்பதைத் தவிர்க்குமாறு தெரிவித்துள்ள மேற்படி சமாசம் தொடர்ந்து மீன்பிடிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் இதேவேளை, அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பாவித்து மீன்பிடிப்பவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சமாச செயலாளர் அறிவித்துள்ளார்.

# கேரதீவு - சங்குப்பிட்டி வீதி புனரமைப்பு தாமதத்தால் பயணிப்போருக்கு பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம் மேலதிக நிருபர்)

கேரதீவு - சங்குப்பிட்டி வீதி திருத்தம் செய்ய தாமதமாவதால் இவ் வீதியால் பயணிப்பதில் அதிக சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கான பிரதான வீதியாக விளங்கும் இவ் வீதியில் கோவிலாக்கண்டி, மறவன்புலவு, தனங்கிளப்பு, அறுகுவெளி ஆகிய பகுதிகள்அதிக சேதமடைந்த வீதியாக காணப்படுவதால் வாகனச் சாரதிகளும் பொது மக்களும் வீதியால் பயணிப்பதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் காலதாமதம் செய்யாது இப்பிரதான வீதியை புனரமைப்புச் செய்யுமாறும் இவ்வழியால் பயணிக்கும் பயணிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# ஆங்கிலப் பயிற்சிநெறிக்கான தெரிவுப்பரீட்சை எதிர்வரும் 30 இல்

கோப்பாய்,

வட மாகாணக் கல்வித்திணைக்களம் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து தெரிவுசெய்யப்பட்ட ஆங்கில ஆசிரியர்கள் அல்லாத ஆசிரியர்களுக்கு நடத்தவிருக்கும் பத்துமாத ஆங்கில பயிற்சிநெறிக்கான தெரிவுப்பரீட்சை எதிர்வரும் 30 ஆம் திகதி நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலை, கிளிநொச்சி மகா வித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாச மகா வித்தியாலயம், மன்னார் சென். சேவியர் பெண்கள் கல்லூரி ஆகிய நிலையங்களில் காலை 9.30 மணி தொடக்கம் 11.30 மணிவரை நடைபெறவுள்ளது.


இதற்காக விண்ணப்பித்த ஆசிரியர்களை பரீட்சைக்கு அன்றைய தினம் அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலுள்ள நிலையங்களுக்குச் சென்று பரீட்சைக்குத் தோற்றுமாறு மாகாண கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப் பயிற்சிநெறியில் பங்குகொள்ள விரும்பும் வேறு ஆசிரியர்களும் இத்தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# விடுவிக்கப்பட்ட குரும்பசிட்டியில் முத்துமாரியம்மன் ஆலய பொங்கல் விழா

தெல்லிப்பழை,

உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட குரும்பசிட்டி பிரதேசத்தின் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் புதுவருடத்தை முன்னிட்டு பொங்கல் நிகழ்வும் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன. 21 வருடங்களின் பின்னர் புதுவருட பொங்கல் விழாவும் சிறப்புப்பூஜை விழாக்களும் நடைபெற்றன. இந்நிகழ்வில் மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இவ் ஆலயத்தில் இடப்பெயர்வின் பின்னர் அண்மையில் பிரதிஷ்டை இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.




# மறவன்புலவு கிராமத்தில் நானூறு வீடுகள் அமைப்பு

கிளிநொச்சி,

மீள்குடியேற்றப்பட்ட மறவன்புலவு பகுதியில் சுவிஸ் நிறுவனம் 400 வீடுகளை கட்டிக்கொடுத்துள்ளது.

வீட்டுடன் கிணறு, மலசலகூடம் போன்ற வசதிகளையும் சுவிஸ் நிறுவனம் செய்து கொடுத்துள்ளது. கேரதீவு வீதியிலிருந்து மறவன்புலவிற்குச் செல்லும் பிரதான வீதியான மறவன்புலவு - மணல்காடு கந்தசாமி ஆலய வீதி உட்பட இக் கிராமத்தின் சகல வீதிகளும் புனரமைக்கப்படாதுள்ளன.

இக்கிராமத்திற்கான ஏனைய வசதிகளும் சரிவரச் செய்துகொடுக்கப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இணுவில் பொது நூலகம் நடத்திய விளையாட்டுப்போட்டிகளின் முடிவு

தெல்லிப்பழை,

இணுவில் பொது நூலகத்தில் 9 ஆம் ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப்போட்டியின் முடிவுகள் பின்வருமாறு:-

கரம் - மகளிர் ஒற்றையர் பிரிவு:

முதலாமிடம் - எஸ். வித்தியராணி, இரண்டாமிடம் - எம்.எஸ். ஷஹாமா, மூன்றாமிடம் - எல். ஐதுகுலா.

கரம் - ஆண்கள் ஒற்றையர் பிரிவு:

முதலாமிடம் - ஆர். பாலமுரளி, இரண்டாமிடம் - எஸ். செந்தூரன், மூன்றாமிடம் - ஜெ. ஜெயகாந்தன்.

கரம் - ஆண்கள் இரட்டையர் பிரிவு:

முதலாமிடம் - ஆர். பாலமுரளி, ஜெ. ஜெயகாந்தன், இரண்டாமிடம் - எஸ். செந்தூரன், பிரதீப், மூன்றாமிடம் - ரி. காந்தன், ரி. அனுராம்.

சதுரங்கம் - பெண்கள் பிரிவு:

முதலாமிடம் - கு.மாதுமை, இரண்டாமிடம் - தி. மிதுஷா.

சதுரங்கம் - ஆண்கள் பிரிவு:

முதலாமிடம்- ஜே. நிரோஜன், இரண்டாமிடம் - அ. ஜென்ரைன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

மரதன் ஓட்டம் : முதலாமிடம் - ம. மயூரன், இரண்டாமிடம் ந. சுகந்தன், மூன்றாமிடம் - ர. லக்வின் ஆகியோர் வெற்றியீட்டியுள்ளனர்.

துடுப்பாட்டப் போட்டி: முதலாமிடம் - காந்தி நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம், இரண்டாமிடம் - திருக்குமரன் விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 வயது யுவதி வல்லுறவு சம்பவம்: அடையாள அணிவகுப்பு ஒத்திவைப்பு

வாழைச்சேனை,

வாகரைப் பிரதேசத்தில் உள்ள தட்டுமுனை கிராமத்தில் 16 வயது யுவதி பாலியல் வல்லுறவிற்குட்பட்ட சம்பவம் தொடர்பாக கடந்த புதன்கிழமை அன்று வாழைச்சேனை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெறவிருந்த அடையாள அணிவகுப்பு எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வாகரை தட்டுமுனை கிராமத்தைச் சேர்ந்த குறித்த யுவதி தனது உறவினர் முறையான 5 வயது சிறுமி ஒருவருடன் தட்டுமுனை இராணுவ காவல் அரண் ஒன்றை அண்டிய காட்டுப் பகுதியில் விறகு பொறுக்கி விட்டு திரும்பும் வழியில் சிவில் உடையில் காணப்பட்ட இராணுவ சிப்பாய் ஒருவரால் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு தற்போது 3 மாத கர்ப்பிணியாகியுள்ளார். குறித்த நபரை தனக்கு நேரில் கண்டால் அடையாளம் காட்ட முடியும் என்று வாகரை பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸார் கடந்த வாரம் வாழைச்சேனை நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையின் பேரில் அடையாள அணிவகுப்பொன்று நடைபெறவிருந்தது.

இதேவேளை பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில், குறித்த யுவதி மட்டக்களப்பு பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதால் பிறிதொரு தினத்தில் மீண்டும் அடையாள அணிவகுப்பினை ஏற்பாடு செய்து தருமாறு நீதிமன்றத்தை கேட்டதனைத் தொடர்ந்து வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிபதி ஏ. எம். எம். றியாள் எதிர்வரும் 03 ஆம் திகதிக்கு அடையாள அணிவகுப்பை வைக்குமாறு கட்டளை பிறப்பித்துள்ளார்.

# ஊடகவியலாளர்களுக்கு இலவச பஸ் போக்குவரத்து அனுமதி அட்டை வழங்க ஏற்பாடு

காங்கேயனோடை,

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களுக்கு இலவச பஸ் போக்குவரத்துக்கான அனுமதி அட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பி. பிரசாந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து முதலமைச்சர் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதுடன் கிழக்கு மாகாண சபை மற்றும் கிழக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு என்பனவும் அனுமதி வழங்கியுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட 15 ஊடகவியலாளர்களுக்கு அனுமதி அட்டை வழங்கப்படவுள்ளது.

அரச பஸ் வண்டி மற்றும் தனியார் பஸ் வண்டிகள் என்பவற்றில் ஊடகவியலாளர்கள் இலவசமாக பயணம் செய்யக் கூடிய வகையில் இப்பாஸ் வழங்கப்படவுள்ளதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசாந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலுள்ள ஊடகவியலாளர்கள் பல முறை பஸ் பாஸ் கோரி கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# "பச்சை மரத்தில் கட்டிய தீ"

துறைநீலாவணை,

புனித வெள்ளியின் சிறப்பு நிகழ்வாக இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட விடயங்களைச் சித்தரிக்கும் 'பச்சை மரத்தில் கட்டிய தீ' என்னும் நாட்டிய நாடகம் மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் இணைப் பேராலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு புளியந்தீவு புனித மரியாள் இணைப் பேராலயத்தின் பங்குத் தந்தை அருட்பணி ஜே. ஏ. ஜீ. கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இயேசு சபையின் கலைஞானி விருது பெற்றவரான கலைக்கோட்டன் அ. இருதயநாதன் இந்நாடகத்தை நெறியாள்கை செய்யவுள்ளார். இதற்கு புனித மரியாள் சேவா சங்க நிர்வாகிகள் ஒத்துழைப்பு நல்கவுள்ளனர்.

# கல்முனையில் ஆண்டு விழா

துறைநீலாவணை,

கல்முனை நகர லயன்ஸ் கழகம் ஏற்பாடு செய்துள்ள லயன்ஸ் கழக ஆண்டு விழா நிகழ்வு எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்முனை கிறிஸ்டா இல்ல மண்டபத்தில் மிகவும் கோலாகலமான முறையில் இடம்பெறவுள்ளது.

கல்முனை நகர லயன்ஸ் கழக தலைவர் லயன் சின்னதுரை தைரியராசாவின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுனர் *(306 சீ - 2)* தேசபந்து, தேசசக்தி, லயன் திலக்பெரேரா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வு கல்முனை, கல்ஓயா, அக்கரைப்பற்று, சம்மாந்துறை ஆகிய இடங்களில் இயங்கும் லயன்ஸ் கழகங்களின் பங்களிப்புடன் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பல கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 127 முஸ்லிம் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள்

(காங்கேயனோடை நிருபர்)

காத்தான்குடியிலுள்ள 127 குடும்பங்களுக்கு காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தினால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

சம்மேளனத்தின் கூட்டு சக்காத் திட்டத்தின் கீழ் இவ்வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. புதன்கிழமையன்று காத்தான்குடி ஹிஸ்புல்லா கலாசார மண்டபத்தில் வைத்து இக்குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சம்மேளனத்தின் கூட்டு சக்காத் திட்டத்தின் பிரதித் தலைவர் எம்.டி. காலித் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சம்மேளன பிரதித் தலைவர் சட்டத்தரணி ஏ. எஸ். அப்துல் ஜவாத் உட்பட முக்கியஸ்தர்கள், உலமாக்கள், பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் தொழில் முயற்சிகளுக்காக 57 குடும்பங்களுக்கு வாழ்வாதார உபகரணங்களும் , கடன் நிவாரண உதவிகளாக 43 குடும்பங்களுக்கு பண உதவியும், வாழ்வாதாரக் கொடுப்பனவு 27 குடும்பங்களுக்கும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் 35 குடும்பங்களுக்கு மலசல கூட நிர்மாணமும் மற்றும் வீடுகள் திருத்தமும் இடம்பெற்று வருகின்றன.

# கிராமப்புற மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி முன்னெடுக்கும் பணிக்கு முழு ஆதரவு

## அகில இலங்கை அரசாங்க பொதுச்சேவைகள் சங்கம்

துறைநீலாவணை,

கிழக்கு மாகாணத்தின் கல்வித் துறையை வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதற்கு இரவு பகல் பாராது அயராது உழைத்துவரும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் எம்.ரீ.ஏ. நிசாம் முன்னெடுத்து வரும் புரட்சிகரமான சமூக நீதி கருதிய செயற்பாடுகள் யாவுக்கும் எமது தொழிற்சங்கம் பரிபூரணமான ஆதரவை அளிக்க சித்தமாகவுள்ளது.

இவ்வாறு அகில இலங்கை அரசாங்க பொதுச் சேவைகள் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் தலைவர் க. புலேந்திரன், பொதுச் செயலாளர் கே. நடராசா ஆகியோர் இணைந்து விடுத்துள்ள அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது,

நகரப் புறங்களில் குவிந்துள்ள ஆசிரிய வளத்தை ஆசிரிய ஆளணித் தட்டுப்பாடு நீண்ட காலமாக இருந்து வரும் கிராமப் புறங்களுக்கு சென்றடைய கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிசாம் பல்வேறுபட்ட சவால்களுக்கும் அரசியல் அழுத்தங்களுக்கும்மத்தியில் நீதி தேவதையின் பக்கம் நின்று கிராமப்புற மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி முன்னெடுக்கும் பணிக்கு நாம் முழு நிறைவான ஆதரவு அளிக்கின்றோம்.

போர்ச் சூழல் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மூதூர், ஈச்சிலம்பற்று, கிண்ணியா, மட்டக்களப்பு, வாகரை, படுவான்கரை உள்ளிட்ட பிரதேசங்களில் காணப்படும் பாடசாலைகள் போதியளவு ஆசிரிய ஆளணி இன்றி இயங்கி வருகின்றமை கவலை தரும் விடயமாகும்.

இங்குள்ள மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி, அரசியல் கலப்பற்ற வகையில் மேற்கொள்ளப்படும் நீதியான ஆசிரியர் இடமாற்றத்திற்கு எமது தொழிற்சங்கம் பூரண ஒத்துழைப்பு அளிக்க தயாராகவுள்ளது.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வாதார தேவைகளுள் கல்வி இன்று முக்கிய இடம் பிடித்துள்ளது. கிழக்கு மாகாணத்திலுள்ள சில ஆசிரியர்கள் தமது சொந்த கிராமத்தில் உள்ள பாடசாலைகளில் மாறி மாறி இடமாற்றம் பெற்று உயில் எழுதிப் பெற்றவர்களாக பணியாற்றும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து அவர்களை இடமாற்றம் செய்ய வேண்டியது வெளிமாவட்டத்திற்கு அனுப்ப வேண்டியது கட்டாயம் தேவை.

அத்துடன் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக பணியாற்றுவோரையும் இடமாற்றம் செய்ய மேற்கொள்ளும் திட்டம் குறித்து நாம் பாராட்டு தெரிவிக்கின்றோம்.

இதேவேளை, கிராமப்புற பாடசாலைகளில் நிலவும் பௌதீக வளத் தட்டுப்பாடுகளைப் போக்க கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் முயற்சிக்க வேண்டுமெனவும் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

# அட்டாளைச்சேனையில் விதைநெல் சுத்திகரிப்பு நிலையம்

(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)

அட்டாளைச்சேனை, மீலாத் நகரில் விதை நெல் சுத்திகரிப்பு நிலையமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இத்தாலி நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனமொன்று 8.4 மில்லியன் ரூபா நிதியை மேற்படி கட்டட நிர்மாணத்துக்கென வழங்கியுள்ளது. அட்டாளைச்சேனை விதை நெல் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் ஏ. பி. எம். அமீன் தலைமையில் நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் அம்பாறை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் வீ. எம். நிமல் தயாரத்ன, அம்பாறை விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை நிலையத்தின் பொறுப்பதிகாரி எம். ஐ. எம். நஸீர், ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மற்றும் விதை நெல் உற்பத்தியாளர்களும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது

செங்கடகல,

கட்டுகாஸ்தோட்டை துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக கட்டுகஸ்தோட்டை பொலிஸார் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதுடன் மேற்படிநபரிடமிருந்து கைத்துப்பாக்கி, தோட்டாக்கள் என்பவற்றையும் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த 15 ஆம் திகதி இரவு இடம்பெற்ற இளைஞர் ஒருவர் மீதான துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பாகவே பொலிஸார் மேற்படி நபரை கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கட்டுஸ்தோட்டை வத்துவல என்ற இடத்தில் கடந்த 15 ஆம் திகதி இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுள்ளது. இதன் போது இரு கோஷ்டிகளுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

இதன் பின்னர் இசை நிகழ்ச்சிகளை பார்த்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும் போது கட்டுஸ்தோட்டை குருணாகலை பிரதான பாதையில் வைத்து 26 வயது இளைஞர் ஒருவர் மீது இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கி பிரயோகம் செய்து விட்டு தப்பிச்சென்றுள்ளார்.

இத்துப்பாக்கிப் பிரயோகத்தினால் காயமைந்த இளைஞர் கண்டி வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

இச் சந்தேகநபர் அமைச்சரின் பாதுகாப்பு பிரிவை சேர்ந்தவர் என பொலிசார் தெரிவித்ததுடன் இவரிடமிருந்த 23 கைத்துப்பாக்கிகள், தோட்டாக்கள், மெகசின்கள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# எந்தானை இல.1 த.வி. க்கு சி.டி.எப். நிறுவனத்தால் ஆசிரியர்கள் நியமனம்

(காவத்தை மேலதிக நிருபர்)

காவத்தை எந்தானை இல.1 வித்தியாலயத்திற்கு சி.டி.எப். நிறுவனத்தின் மூலம் 5 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அதிபர் ஏ.ஜே.எம்.ஹபீல் தெரிவித்தார். இப்பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவே ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக சி.டி.எப். நிறுவனத்தின் பணிப்பாளர் சாள்ஸ் மோகன் ரவி தெரிவித்தார். கஷ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையின் கல்வி அபிவிருத்தியில் சி.டி.எப். நிறுவனம் முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றது.

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சையில் 6 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இப்பாடசாலையில் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என நிறுவன பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். இதேவேளை சி.டி.எப். நிறுவனத்தின் பணிப்பாளருடன் அவுஸ்திரேலியா ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் அதிகாரிகளும் அண்மையில் இப்பாடசாலைக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

# திருமண மண்டபங்களில் திருட்டு பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

இறத்தோட்டை,

மாத்தளை நகரிலுள்ள திருமண மண்டபங்களில் நடைபெறும் திருமண வைபவங்களின்போது நகை மற்றும் புதுப் புடைவைகள் களவு போவது சாதாரண நிகழ்வாக மாறி வருவதாகப் பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

பெண் வீட்டார் அல்லது மாப்பிள்ளை வீட்டார் போன்று தம்மை இனங்காட்டிக் கொண்டு மண்டபத்துக்கு வரும் இவர்கள் அங்குள்ளவர்களிடம் மிகவும் சகஜமாகப் பழகி மாப்பிள்ளை, பெண் ஆகியோர் அணிவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அறைகளுக்குள் உறவினர்கள் போல் நுழைந்து அங்கிருக்கும் நகை மற்றும் புதுப் புடைவைகளை களவாக எடுத்துக் கொண்டு தலைமறைவாவதும் மேடையில் திருமண நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கையில் ஆர்வமுடன் அவதானித்துக் கொண்டிருக்கும் பெண்கள் அணிந்துள்ள சங்கிலிகளை அபகரித்துக் கொண்டு தலைமறைவாவதும் சாதாரணமாக நடைபெற்று வருவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இது பற்றி எவரிடமும் புகார் செய்ய முடியாத நிலையில் தம்மை அழைத்த திருமண வீட்டார் மேல் குறை கூறி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. திருமண வீட்டாருடன் மண்டப உரிமையாளர் ஒத்துழைத்தால் இது போன்ற நடவடிக்கைகளைக் குறைக்கலாம் என பாதிக்கப்பட்டவர்கள் மேலும் கூறுகின்றனர்.

## தலைமைத்துவ பயிற்சிக்காக ஜோன் அமெரிக்கா பயணம்

(பதுளை மேலதிக நிருபர்)

பதுளை சரஸ்வதி மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் மாணவன் ஜோன் டானியல் ஆங்கில மொழியிலான தலைமைத்துவப் பயிற்சி நெறியொன்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பயிற்சி நெறியில் கலந்து கொள்வதற்காக ஜோன் டானியல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கா செல்லவுள்ளார்.

ஒரு மாத கால பயிற்சி நெறிக்கான அனுசரணையை அமெரிக்க மத்திய நிலையம் வழங்கியுள்ளது.

இதேவேளை, பயிற்சி நெறிக்காக ஊவா மாகாணத்திலிருந்து இம்முறை தெரிவான ஒரேயொரு தமிழ் மாணவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹல்துமுல்லை விபுலானந்த த.ம.வி. யில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்கவும்

## ஊவா மாகாண சபை உறுப்பினர் முதலமைச்சருக்கு கடிதம்

ஹல்துமுல்லை விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஊவா மாகாண சபை உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவருமான அ. அரவிந்த்குமார் ஊவா மாகாண முதலமைச்சரும் மாகாண கல்வியமைச்சருமான சசிந்திர ராஜபக்ஷவிற்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஹல்துமுல்லை விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயம் பல வருடங்களுக்கு முன்பு தரம் 5 வரையிலான ஒரு ஆரம்ப பாடசாலையாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

அப்பாடசாலையின் அதிபர், ஆசிரிய குழாம் மற்றும் பெற்றோர்களின் அயரா முயற்சியின் பயனாக சிறிது சிறிதாக வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டு இன்று உயர்தரம் வரை வகுப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தற்போது ஆண்டு ஒன்று முதல் பதின்மூன்று வரை சுமார் 650 பிள்ளைகள் இங்கு கல்வி கற்கின்றனர்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அதிபர் உட்பட ஒட்டுமொத்தமாக 14 ஆசிரியர்களே இப்பாடசாலையில் சேவையில் உள்ளனர். மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமைய அங்கு சுமார் 35 ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும்.

சராசரியாக சுமார் 46 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற குறைந்த வீதத்திலேயே இங்கிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆண்டு 1 முதல் உயரதரம் வரை வகுப்புக்கள் இருக்கும் பாடசாலை ஒன்றில் சுமார் 650 பிள்ளைகள் கற்கை நெறிகளில் ஈடுபட்டிருக்கும் இந்நிலையில் இச்சிறிய ஆசிரியர் தொகையை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. ஏதோ ஒரு காரணத்திற்காக இப்பாடசாலை புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது.

அது மாத்திரமின்றி, பாடசாலை ஒன்றில் பிள்ளைகளின் தொகைக்கு ஏற்ப ஆசிரியர் நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற தேசிய கல்விக் கொள்கைக்கும் இது முரணாகவே உள்ளது.

எனவே மேலும் தாமதமின்றி இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும். போதியளவு ஆசிரியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்களேயானால் அது எம் சமூகத்தின் உயர்விற்கு வழிசமைக்கும் அதேவேளை, நல்ல பெறுபேறுகளையும் இப்பாடசாலையில் எதிர்பார்க்க முடியும்.

எனவே விரைவில் கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேறும் டிப்ளோமாதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படும்போது ஹல்துமுல்லை விபுலானந்த தமிழ் மகா வித்தியாலயத்திற்கு குறைந்தது 5 ஆசிரியர்களையாவது நியமனம் செய்யுமாறு வினயமாக கேட்டுக் கொள்கின்றேன்.

இந் நியமனமானது அங்குள்ள ஆசிரியர் பற்றாக்குறையை முழுமையாக தீர்த்து வைக்காவிட்டாலும் ஓரளவிற்காவது நிவாரணத்தை ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் கற்போம்

எனக்கு சோறு வேண்டும்
மட்ட பத் ஒனே

எனது மிகுதி பணத்தை தரவும்
மகே இந்துறு முதல் தென்ன

எனக்கு தொந்தரவு தரவேண்டாம்
மட்ட கரதர தென்ன எபா

சோறு இருக்கிறதா?
பத் தியனவத?

நீர் என்னை தப்பாக நினைக்கிறீரா?
மாவ வெரதிகியா தேருன் கத்தாத?

என்னோடு அவர்களைப் பற்றி கதைக்க வேண்டாம்.
மா சமக எயாலகன கதாகரன்ன எப்பா

உமது வேலை செய்யவும்
ஒயாகே வெடடிக்க கரன்ன

கெதியாக செய்யவும்
இக்மனட்ட கரன்ன

நான் கெதியாக போகவேண்டும்
மம இக் மனட்ட யன்ன ஒனே

பரவாயில்லை
கமக் நெ

பெயரைச் சொல்லவும்
நம கியன்ன

அங்கு வைக்கவும்
ஏ தியன்ன

அதை வாங்க வேண்டாம்
ஏக இல்லன்ன எப்பா

அதை சாப்பிட வேண்டாம்
அரக்க கன்ன எப்பா

அதை சாப்பிடவும்
ஏக கன்ன

நான் சாப்பிட்டுவிட்டேன்
மம காலா இவராய்

என்னிடம் சாப்பாடு இருக்கிறது
மாலங்க கேம தியனவா

நான் சொல்வது உமக்கு விளங்குகிறதா?
மம கியனதே ஒயாட்ட தேரென வாத?

நான் மறந்து போய்விட்டேன்
மட்ட அமத்தக்கவுனா

உமக்கு என்னை நினைவிருக்கிறதா?
ஒயாட்ட மாவ மத்தக்கத

இந்த பிரச்சினை தீருமா?
மே பிஸ்னய விசத் தெய்த.

மீண்டும் அடுத்த
பாடத்தில் சந்திப்போம்.

●வேலு. ஜீவராஜா



## விழிகள்

என் எழுத்துக்கு
விளக்கம் கொடுப்பது
உன் விழிகள்
இரண்டும் தான்
காரணம்,
ஒவ்வொரு முடியும்
உன் கூந்தலிலிருந்து
உதிரும் போதும்
கவனமாக சேர்த்தேன்
நம் அணைப்பின்போது
வரிந்து கட்டுவதற்கு

மருதங்கேணியூர்
வே.வே,அகிலேஸ்வரன்

# SPOKEN ENGLISH

## Two Friends Meet each other on the Street. Their names are Kanthaiya and Ramaiya.

### இரு நண்பர்கள் வழியில் ஒருவரை ஒருவர் சந்தித்து உரையாடுகின்றனர்.

*Ramaiya*:- Kanthaiya! When did you come to Jaffna?

*இராமையா*:- எப்பொழுது யாழ்ப்பாணத்திற்கு வந்தீர்கள்?

*Kanthaiya* :- Oh, Ramaiya, I come last month.

கந்தையா:- கடந்த மாதம் வந்தேன்.

*Ramaiya*:- I see, how are you and your Family?

*இராமையா*:- எப்படி இருக்கிறாய். உனது குடும்பம் எப்படி?

*Kanthaiya*:- We are okay.

கந்தையா:- நல்ல படியாக இருக்கிறார்கள்.

*Ramaiya* :- Are they in Colombo?

*இராமையா*:- கொழும்பிலா இருக்கின்றார்கள்?

*Kanthaiya*:- No, They are in America now.

கந்தையா:- இல்லை. அவர்கள் அமெரிக்காவில் இருக்கின்றனர்.

*Ramaiya*:- I see, when did they leave for there?

*இராமையா*:- அப்படியா, அங்கே எப்போது போனார்கள்?

*Kanthaiya*:- Last years they left, I am only in Srilanka.

கந்தையா:- கடந்த வருடம் போனார்கள். நான் மட்டும் தான் இங்கே இருக்கிறேன்.

*Ramaiya*:- Don't say like that we with you.

இராமையா:- அப்படிச் சொல்லாதே நாம் உன்னுடன் இருக்கிறேன்.

*Kanthaiya*:- Thanks, Ramaiya.

கந்தையா:- நன்றி

*Ramaiya*:- I feel like that in Colombo.

*இராமையா*:- நான் கொழும்பில் இருப்பது போல உணர்கிறேன்.

*Kanthaiya*:- If you don't mind. I am say to you be in Jaffna.

கந்தையா :- அப்படி சொல்லாதே. நான் சொல்கிறேன் யாழ்ப்பாணத்தில் இருக்கிறாய்.

*Ramaiya*:- It's okay. I try to do some thing but I have some goods there.

*இராமையா*:- சரி. ஏதாவது செய்வோமா? அங்கே கொஞ்சப்பொருட்கள் இருக்கின்றன.

*Kanthaiya*:- Dispose it and come and stay here. You have a nice home in jaffna is't it.

கந்தையா:- அவற்றை விற்றுவிட்டு இங்கு வந்து இருக்கலாமே? உனக்கு அழகிய வீடு யாழ்ப்பாணத்தில் இருக்கிறது அல்லவா?

*Ramaiya*:- Why not?

*இராமையா*:- ஏன் முடியாது?

*Kanthaiya*:- Free time we can go to Sivathondan Nillaiyam in Jaffna.

கந்தையா:- ஓய்வு நேரங்களில் யாழ்ப்பாணத்திலுள்ள சிவதொண்டன் நிலையத்திற்கு செல்லலாம்.

*Ramaiya*:- Now also are you going there.

*இராமையா*:- இப்போது நாம் இருவரும் செல்வோம்.

*Kanthaiya*:- Why not I am going there where I have time.

கந்தையா :- நானும் ஓய்வுநேரங்களில் அங்கு செல்வது வழக்கம்.

*Ramaiya* :- Okay. I like it.

*இராமையா* :- எனக்கும் விருப்பம்.

*Kanthaiya*:- Last week YogarSwamyKal Kurupoojah. Which was conducted many places in Jaffna.

கந்தையா:- கடந்த வாரம் யோகர் சுவாமிகளின் குருபூசைதினம் யாழ்ப்பாணத்திலுள்ள பல இடங்களில் நடந்தது.

*Ramaiya*:- I see, I like to read Natsinthanai Do you have?

*இராமையா*:- அப்படியா? அவருடைய நற்சிந்தனைகளை வாசித்து இருக்கிறேன். நீயும் வாசித்திருக்கிறாயா?

*Kanthaiya*:- Yes, I have, I will give you.

கந்தையா :- ஆம். நான் உனக்கு அந்தப் புத்தகத்தை தருகிறேன்.

*Ramaiya*:- Thank you Kanthaiya.

*இராமையா*:- நன்றி கந்தையா.

*Kanthaiya*:- Shall we meet again.

கந்தையா :- மீண்டும் சந்திப்போம்.

*Ramaiya*:- Thanks, Bye.

S.Uthayabalan (M.A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லியம்-கேட் மிடில்டன் தேன் நிலவில் இரகசியம்



இளவரசர் வில்லியம் அடுத்த வாரம் மணந்து கொள்ளவுள்ள தனது மனைவி மிடில்டனிடமி ருந்து ஒரு விடயத்தை இன்னும் இரகசியமாக வைத்துள்ளார்.

தேன் நிலவுக்கு எங்கு அழைத்துச் செல்லவுள்ளார் என்பது தான் அந்த இரக சியம்.

அடுத்த வாரம் திருமணம் முடிந்து எங்கு தேன் நிலவு பயணம் செல்லப் போகிறார் என்பது பற்றி கேட் மிடில்ட னுக்கு இதுவரை எதுவும் தெரி யாது.

ஆனால் இது பற்றி வில்லியம் ஏற்கனவே முடிவு செய்துள்ள தாக அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

எங்காவது ஒரு உஷ்ண மான பகுதிக்குச் செல்லவே மிடில்டன் விருப்பம் கொண் டுள்ளார். இருந்தாலும் அதை முழுக்க முழுக்க வில்லியமின் விருப்பத்துக்கே அவர் விட்டுள் ளார்.

அது மட்டுமன்றி கடைசி வரை அது ஆச்சரியமாக இருப்பதையே அவரும் விரும்புகின்றார் என்று மிடில்டனுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள் ளன. தேன் நிலவு பயணத்தைத் தவிர எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவு ள்ள திருமணத்துக்கான எல்லா ஏற்பா டுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தோடு சகல நிகழ்வுகளும் ஊர்ஜிதம் செய்யப் பட்டும் உள்ளன.

# இராணுவ நிபுணர்களை அனுப்பி வைக்க தீர்மானித்துள்ள பிரிட்டனுக்கு லிபியா கண்டனம்

லிபியாவுக்கு இராணுவ நிபுணர்களை அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ள பிரிட் டனுக்கு, லிபியா கடும் கண்டனம் தெரி வித்துள்ளது. அதேநேரம், 'போரை தற்கா லிகமாக நிறுத்தி விட்டு, ஐ.நா., மேற் பார்வையில் இன்னும் ஆறு மாதத்தில் தேர்தல் நடத்தவும், கடாபியின் எதிர் காலம் குறித்தும் விவாதிக்கவும் தயார்' என்று லிபிய வெளியுறவு அமைச்சர் கூறி யுள்ளார்.

லிபியாவில் தொடர்ந்து நடந்து வரும் போரில், எதிர்த்தரப்பால் குறிப்பிடத்த க்க அளவு வெற்றி பெற முடியவில்லை. கடாபி படைகள் வான்வழித் தாக்குதல் மூலம் எதிர்த் தரப்பினரை பின்வாங்கச் செய்கின்றன.

பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹொக் அண்மையில் அளித்த பேட்டியில்,'லிபிய எதிர்த் தரப்புக்கு அவ ர்களின் இராணுவ பலத்தை அதிகரிப் பது, தொடர்பு மற்றும் போக்கு வரத்து, மனிதாபிமான உதவிகளுக்கான நடவடி க்கைகள் ஆகியவை குறித்து ஆலோ சனை வழங்க 10 பிரிட்டன் இராணுவ நிபுணர்கள் லிபியாவுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படுவர்' என்று தெரிவி த்திருந்தார்.

பிரான்சும் பிரிட்டன் குழுவோடு தனது நாட்டு நிபுணர்கள் 10 பேரை அனுப்பி வைப்பதாகத் தெரிவித்திருந்தது.

அமைச்சர் ஹொக்கின் முடிவு அவரது கன்சர் வேடிவ் கட்சிக்குள்ளேயே அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நடவடி



க்கை ஐ.நா., தீர்மானத்தை மீறியதாகும் என்று கருதும் பிரிட்டன் எம்.பி.,க்கள், உடனடியாக பாராளுமன்றத்தை கூட்டி, இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.

இதுகுறித்து லிபிய வெளியுறவு அமை ச்சர் அப்துல் அடி அல் அபைடி அளித்த பேட்டியில் கூறியதாவது: இராணுவ நிபு ணர்களை அனுப்பி எதிர்த் தரப்பைப் பல ப்படுத்தும் முயற்சியில் பிரிட்டன் இறங் கியுள்ளது கண்டிக்கத்தக்கது. இதனால், லிபியாவில் அமைதி ஏற்படுவதற்குப் பதிலாக, நீண்ட கால பிரச்சனைதான் ஏற்படும். போர் நிறுத்தம் அறிவிக்கப்ப ட்டு பேச்சு நடந்தால் தான் எதிர்த்தரப்பு கோரும் ஜனநாயகம், சுதந்திரம், அரசியல் சீர்திருத்தம், தேர்தல் ஆகியவை நடக் கும்.

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு, ஆறு மாத காலத்திற்குள் தேர்தல் நடத்தப்பட வாய்ப்பிருக்கிறது. மேலும், அதன் பின் கடாபி இதே பொறுப்பில் நீடிக்க வேண் டுமா? ஓய்வு பெற வேண்டுமா? என்பது உள்ளிட்ட அனைத்துப் பிரச்சனைகளை யும் விவாதிக்க வேண்டும் என்றார்.

# ஒஸ்காருக்கு பரிந்துரைக்கப்பட்ட இயக்குனர் படுகொலை

லிபியாவில் நடைபெற்று வரும் கலவர த்தில் பிரபல திரைப்பட இயக்குனர் ஹேத் ரிங்டன் மற்றும் புகைப்படப் பிடிப் பாளர் கிரிஸ் ஹோண்டிரஸ் ஆகிய இருவரும் கொலை செய்யப்பட்டுள் ளனர். இவர்கள் இருவ ரும் ஆப்கானி ஸ்தான் எல்லையில் அமெ ரிக்க போர் வீரர்களின் பணிகள் குறித்த குறும்படம் ஒன்றை தயாரித்து வருகின்றனர். இதற்காக அவர்கள் சென்ற போது லிபியா கலவரக்காரர்களால் சுட் டுக் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் ஒஸ்கார் விருதுக்காக பரிந் துரை செய்யப்பட்டவர்கள் என்பது குறிப் பிடத்தக்கது.



பிரான்ஸ் வந்திருந்த கென்யா பிரதமர் ரெய்லா ஒடிங்கோ (இடது), அந்நாட்டு பிரதமர் பிராங்கோயிஸ் பில்லான் ஆகியோர், பாரிஸில் நடந்த நிகழ்ச்சியில் முக்கிய ஒப்பந்த விடயங் களை பரிமாறிக்கொண்டனர்.

# வில்லியத்தின் திருமணம் யு டியுப் வழியாக நேரடி ஒளிபரப்பு



21 ஆம் நூற்றாண்டின் எதிர்ப்பார்ப்புக் குரிய திருமணமாக அமையவுள்ள இளவ ரசர் வில்லியம் மற்றும் கேட் மிடில்டன் ஆகியோரின் திருமணம் யு டியுப் வழி யாக நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்ப டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் வரலாற்றில் பெரும்பாலா னவர்களால் பார்த்து மகிழக்கூடிய அல் லது பலருக்கு அந்த வாய்ப்பை வழங்கக் கூடிய ஒரு அரச குடும்ப நிகழ்வாக இந் தத் திருமணம் அமையப்போகின்றது.

திருமணத்துக்கான உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தின் மூலம் திருமணம் பற்றிய நேரடித் தகவல்க ளும் ஒளிபரப்புக்களும் இடம்பெறவுள்ளன.

முதல் தடவையாக அரச குடும்பத் திருமண த்துக்காக ரோயல் அலை வரிசையும் உருவாக்கப் பட்டுள்ளது.

சென்ட் ஜேம்ஸ் மாளி கையுடன் இணைந்து பல் ஊடக புளொக் சேவையையும் சேர்த்ததாக இது அமைய வுள்ளது. திருமண ஊர்வலம் முதல் தம் பதியினரின் மேலதிகப் புகைப்படங்கள் வரை இதில் பார்வையிடலாம்.

மேலும் இந்த இணையத்தில் வைக்கப் பட்டுள்ள உத்தியோகப் பூர்வ திருமண ஏட்டில் பொது மக்கள் தமது வாழ்த்துக்க ளையும், பாராட்டுக்களையும் கூட பதிவு செய்யலாம்.

அதற்கேற்றவாறு பொது மக்கள் தமது வீடியோ வாழ்த்துக்ளையும் தரவேற்றம் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவன் இவன் உருவான கதை

**'அவன்** இவன்' படத்தில் விஷால் இடம்பெற்றது எப்படி என்பது பற்றி மட்டு மல்ல. இந்த படமே எப்படி வந்தது என்பது குறித்து இப்பாடல் வெளியீட்டு விழா வில் பேசினார் பாலா. ஒரு நாள் திடீர்னு ஆர்யா வந்தான். சார் நம்ம படத்தில் விஷால் நடிக்க ஆர்வமாக இருக்காருன்னான். நான் அதெல்லாம் சரியே வராது. அப்புறம் பார்க்கலாம் என்று சொன்னேன். இல்லை சார் ஒரு தடவை பார்த்துப் பேசுங்க போதும்னான். நானும் கொஞ்சம் யோசித்து சரி இரண்டு நாள் கழித்து சொல்றேன்னு சொன்னேன். இல்லை சார் வாசல் லதான் விஷாலும் அவங்க அண்ணன் விக்கியும் நிற்கிறாங்க. உள்ளே வ ரச்சொல்றேன். கொஞ்சம் சிரிச்சுப் பேசுங்க போதும்னு சொன்னான்.

என்னடா இப்படி இம்சை பண்றானேன்னு நினைச்சு வரச்சொல்லி பேசி அனுப்பினேன். அடுத்த நாள் ஏ.ஜி.எஸ் அகோரம் சார் வீட்டிலேந்து பேசு றான். சார்... இது மாதிரி கல்பாத்தி அகோரம் சார்ட்ட பேசியிருக்கேன். வந்து ஒரு லைன் மட்டும் சொல்லிட்டு போயிருங்கன்னான். இப்ப முடியாதுப் பான்னு நான் சொல்லுறதுக்கு வழியே விடல. ஆர்யாவும் விஷாலும் என்னை கூட்டிட்டு அவரு வீட்டுக்கே போயிட்டாங்க. அவர் எவ்வளவோ தொழில் செய் யலாம். அதுலயெல்லாம் எப்படியிருக்கான்னு தெரியல. ஆனால், என்னை பொறுத்தவரை அவரு குழந்தை மாதிரிதான். நானும் அவரும் பேச பேச என்னடா லூசுப்பய இந்த பிராஜக்ட்டை கெடுத்துருவான் போலிருக்கேன்னுதான் என்னை பார்த் திட்டு இருந்தாங்க ரெண்டு பேரும். அப்புறம் படத்தை ஆரம்பிச்சோம்.

ஆரம்பத்துல எனக்கு விஷால் மேல பெரிய அபிப்பிரா யம் இல்லை. எப்ப பார்த்தாலும் அவன் பின்னாடி ஒரு இருபது பேரு குடைய பிடிச்சிக்கிட்டே அலையுறாங்க. எனக்கு பயங்கர எரிச்சல் வரும். அப்புறம் எப்படியோ எல்லாம் நல்லபடியா முடிஞ்சுது. என் வாழ்க்கையில் நான் நாலு படம் பண்ணியிருக்கேன். அத்தனை தயா ரிப்பாளர்களுடன் கட்டி உருளாத குறைதான். ஆனால், இந்த படத்தில்தான் நான் நிம்மதியா வேலை பார்த் தேன். அதுக்காக கல்பாத்தி அகோரம் சாருக்கு நன்றி என்றார் பாலா.



**கமல்** - செல்வராகவன் கூட்டணியில் உருவாகும் படத்துக்கு விரைவில் ஷ கான ஏற்பாடுகள் ஜருராக நடந்துவந்த நிலையில் படத்துக்கு திடீர் சிக்கல் ஏற் கையோடு இசை அமைப்பாளர் தேர்வும் நடந்தது. ஏற்கெனவே கருத்துவேறுட டம் இருந்து பிரிந்திருந்த செல்வராகவன் இப்படம் மூலம் இணைவதாக் கூற வார்த்தை சுமுகமாக நடந்த நிலையில் திடீரென்று சங்கர் மகாதேவன் இசை அ டார். மேலும், தொழில்நுட்பக் கலைஞர்களின் தேர்வு தாமதமாகி வருகிறது. இத டங்கமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில், மலையாளத்தில் ராஜேஷ் பிள்ளை இயக்கிய 'டிராபிக்' என்ற ப ருந்ததாம். உடனே அப்படத்தை தமிழில் ரீ-மேக் செய்ய ஐடியா கொடுத்ததுடன் செ டங்குவதற்குள் இப்படத்தில் நடிக்க முடிவுசெய்தார். டிராபிக் பொலிஸ் உள்ளிட்ட 3 பேரின் வாழ்க்கையை யுள்ளது. பொலிஸ் வேடத்தில் ஸ்ரீனிவாசன நடித்திருக்கிறார்.

கதைக்கு மெயினான அப்பாத்திரத்தை தேர்வுசெய்யாத கமல் மற்ற பாத்திரங்களில் ஒரு பாத்திரத்தில் ந தார். இந்த படத்தின் ஷூட்டிங்குக்கான பணிகள் தொடங்கியுள்ளன.

# கமல் படத்தில் சிக்கல்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஆனந்த தொல்லை



உயர்திரு 420

* வெளிமாநிலம், வெளிநாடுகளில் 'எந்திரன்' படம் ஆங்கில சப்-டைட்டிலுடன் ரிலீஸானது. இதைத் தொடர்ந்து மற்ற படங்களுக்கும் ஆங்கில சப் டைட்டில் போட்டு ரிலீஸ் செய்யும் பாணி ஹொலிவூட்டில் பரவிவருகிறது.
* வழக்கமாக கான் திரைப்பட விழாவுக்கு கணவர் அபிஷேக் பச்சனுடன் செல்லும் ஐஸ்வர்யா ராய் இம்முறை அபிஷேக் ஷூட்டிங்கிற்காக செல்வதால் தனியாக கலந்துகொள்ளவுள்ளார்.
* 'சண்முகிபுரம்' என்ற படத்துக்கு கவர்ச்சி நடிகை ஷகிலா பின்னணி பாடினார்.
* '7 ஆம் அறிவு' படத்தில் வியட்நாம் ஸ்டண்ட் நடிகர் ஜானி ட்ரி நெக்யென் வில்லனாக அறிமுகமாகிறார்.
* 'அக்கு அக்பர்' படம் மூலம் மலையாளத்தில் அறிமுகமாகிறார் பிரசன்னா.



...ட்டிங் தொடங்க இருந்தது. இதற் ...ட்டுள்ளது. ஸ்கிரிப்ட் ரெடியான ...டு காரணமாக யுவன் சங்கர் ராஜாவி ...து. இரு தரப்பிலும் பேச்சு ...ளராக ஒப்பந்தம் செய்யப்பட் ...ால், திட்டமிட்டபடி ஷூட்டிங் தொ

...த்தை கமல் பார்த்தார். கதை பிடித்தி ...வராகவன் படத்தின் ஷூட்டிங் தொ ...மயமாக வைத்து இக்கதை உருவாகி

...க்க விருப்பம் தெரிவித்

## 17 ஆம் நூற்றாண்டுக் கதை

**சென்னையில்** தொடங்குவதாக இருந்த 'ராணா' பட ஷூட்டிங் தள்ளிப்போயுள்ளது. ரஜனிகாந்த் 3 வேடங்களில் நடிக்கும் படம் ராணா. ரஜனி ஜோடியாக தீபிகா படுகோன் நடிக்கிறார். கே.எஸ். ரவிக்குமார் இயக்குகிறார். ரத்னவேலு ஒளிப்பதிவு செய்கிறார். 17ஆம் நூற்றாண்டு கதையான இதன் ஷூட்டிங் சென்னையில் தொடங்குவதாக இருந்தது. ஆனால், தொடங்கவில்லை. தீபிகா கால்ஷீட் இல்லாததால் தான் ஷூட்டிங் ஆரம்பமாகவில்லை என்று கூறப்பட்டது. இது பற்றி பட யூனிட்டில் கேட்டபோது இந்த படத்துக்காக ஏ.வி.எம் ஸ்டூடியோவில் பிரமாண்ட செட் போடப்பட்டு வருகிறது. செட் வேர்க் இன்னும் முடியாததால் இம் மாத இறுதியில் ஷூட்டிங் தொடங்கும் என்றனர்.



அவன் இவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்ந்து போயுள்ள அடிக்கல்நாட்டு விழாக்கள்

யாழ்.குடாநாட்டினில் கோலாகலமாக நடந்துவந்த அடிக்கல் நாட்டு விழாக்கள் ஒருவாறாக ஓய்வுக்கு வந்துவிட்டன. பெரும்பாலான அபிவிருத்தித் திட்டங்கள் கூட அடிக்கல் நாட்டுவதுடன் முடிவுக்கு வந்துவிட்டன. ஒரு சில திணைகள அலுவலகக் கட்டடங்கள் மட்டும் கட்டிமுடிக்கப்பட்டு திறக்கப்பட்டும் விட்டன. மற்றும்படி பெரும்பாலானவை அடிக்கலுகளுன மட்டுமே காட்சியளிக்கின்றன.

வன்னி யுத்த முடிவு மற்றும் குடாநாட்டுக்கான தரைவழிப் போக்குவரத்து திறப்பின் பின்னர் எல்லோருமே அபிவிருத்தி பற்றியே கதைக்கிறார்கள். நாட்டின் ஜனாதிபதி முதல் அரசின் அடிப்பொடிகள் வரை எல்லோருமே அபிவிருத்தி பற்றியே பேசுகிறார்கள். முப்பது வருட யுத்தத்தில் அழிந்துபோன எல்லாவற்றையும் மீட்டுக்கொடுத்து விடப்போவதாக அரசும் கூறுகின்றது. வந்துபோகின்ற வெளிநாட்டுப் பிரமுகர்கள், தூதுவர்களெல்லோரும் கூட அரசின் அபிவிருத்திகள் பற்றியே கேள்வி கேட்கின்றனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியுடன் அமைக்கப்படவிருந்த யாழ். - பருத்தித்துறை வீதி விஸ்தரிப்பு வேலைத்திட்டங்கள் இரண்டு வருடம் கடந்தும் இழுபறிப்பட்டே செல்கின்றது. வெறும் முப்பது கிலோமீற்றர் நீளமேயான இவ்வீதியில் ஒரு பங்கு மட்டுமே அரைகுறையாக முடிவுக்கு வந்துள்ளது. ஆனால், இப்போது குடாநாட்டிலுள்ள பெரும்பாலான பிரதான வீதிகள் எல்லாவற்றையும் இரட்டிக்கப் போவதாகவும் 'கார்பெட்' வீதிகளாக்கப் போவதாகவும் அறிவித்துள்ளார்கள். சீன அரசின் நிதி உதவியின் கீழ் இடம்பெறப்போவதாகக் கூறப்படும் இவ் வீதி அபிவிருத்திக்கு ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ அடிக்கல் நாட்டி ஒரு வருடம் அண்மிக்கிறது. பொரும்பாலும் அதுவும் அடிக்கல் நாட்டுவதுடன் ஓய்ந்துபோனதொன்றாகவே இருக்கின்றது.

குடாநாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பது அரசு கூறுவதற்கப்பால் வட்டுக்கோட்டைக்கும் கொட்டைப்பாக்குக்கும் உள்ள தொடர்பாகவே இருக்கின்றது. மிகச் சாதாரண உதாரணமாக, யாழ். நகரின் ஸ்ரான்லி வீதியை 'கார்பெட் வீதியாக மாற்ற சுமார் ஆறு மாதங்கள் வரையில் தேவைப்பட்டிருக்கின்றன. இவ்வீதியின் நீளங்கூட வெறும் ஒரு சில கிலோ மீற்றர் தூரம் மட்டுமேயென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, யாழ். நகரில் உள்ள உள் வீதிகளை கூட கார்பெட் வீதிகளாக்கப் போவதாக மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா கூறிவருகின்றார். சுமார் நூற்றி ஐம்பதிற்கும் அதிகமான வீதிகள் தெரிவுசெய்யப்பட்டு அரசின் அனுமதியும் பெறப்பட்டுவிட்டதாக



அண்மைய ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கூறியிருந்தார். ஆனாலும், சாதாரணமாக மக்கள் துவிச்சக்கர வண்டியில் கூட பயணிக்கமுடியாதுள்ள வீதிகளைப் பற்றி அவர் எதுவும் கூறவில்லை. இருபது வருடத்திற்கு மேலாக திருத்தப்படாதுள்ள மாநகர வீதிகள் பற்றி நாளிதழ்கள் நாள்தோறும் செய்திகளை வெளியிடுகின்றன.

மறுபுறத்தே, 50 ஆயிரம் வீடுகளைக் கட்டி வழங்கும் இந்தியாவின் உதவி உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாகிவிட்டது. அரியாலையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா கோலாகலமாக நாட்டி வைத்த அடிக்கல் இப்போது ஆடுமாடுகளது உறைவிடமாகி விட்டது. அருகிலுள்ள தரவைகளில் மேய்ச்சலுக்கு வரும் அவை பெரும்பாலும் மதிய வேளைகளில் ஓய்வுகொள்ள அங்கு நாட்டப்பட்ட தூண்களே பெரிதும் பயன்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலங்களில் மீள்குடியமர்ந்த குடும்பங்கள் உள்ளிட்ட 30 சதவீதமானவை நிரந்தர வசிப்பிடமின்றியே உள்ளன. அவர்களுக்கும் எஞ்சியிருந்த இந்திய வீட்டுக்கனவு பெரும்பாலும் இப்போது இல்லாதே போயுள்ளது.

குடாநாட்டினில் போரின் பின்னரான அபிவிருத்தி எனும் பேச்சு பெரும்பாலும் வெறும் மேடைப் பேச்சுக்களாகவோ ஊடக அறிக்கைகளாகவோ இருக்கின்றன. உரிய திட்டமிடல்கள் ஏதுமின்றி அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் கட்டடப் பணிகளையும் வீதித் திருத்தங்களையும் அமைச்சர்கள் அபிவிருத்தி என்கின்றனர். மறுபுறம், தமக்கும் தமது கட்சி ஆதரவாளர்களுக்கும் கடைத்தொகுதிகள் கட்டி வழங்குதைக் கூட அபிவிருத்தி என்கின்றனர். ஆனால், ஒரு நகருக்கு இருக்கவேண்டிய அடிப்படை குடிநீர் வசதி, வடிகால் வசதி, கழிவகற்றல் உள்ளிட்ட எவையுமற்றதாகவே குடாநாடு உள்ளது.

அபிவிருத்தி என்ற பெயரில் அரசும் சர்வதேச நிதி உதவி அமைப்புக்களும் தமது விருப்பங்களை குடாநாட்டு மக்கள் மீது திணித்துவிட முற்படுகின்றன. காங்கேசன்துறை வீதி விஸ்தரிப்பினால் அழிவுக்குள்ளாகப் போகும் பாரம்பரிய கட்டட தொகுதிகள் பற்றி பலரும் குரல் கொடுக்கிறார்கள். ஆனால், எவருமே திரும்பி பார்த்திருக்கவில்லை. நகரப்பகுதியில் மேம்பாலங்களையாவது அமைக்கவேண்டுமென்ற ஆலோசனைகளை எவரும் கேட்கத் தயாராகவில்லை. கிட்டப்போகும் இலாபங்களைப் பற்றியே பேச்சுக்கள் இருக்கின்றன.

குாடநாட்டின் அபிவிருத்திக்கு சீரான மின்விநியோகம் தேவையென்பது மறுக்கப்பட முடியாததொன்று. ஆனால், குடாநாட்டினில் உத்தியோகப்பற்றற்ற வகையினில் முழு அளவினில் மின் துண்டிப்பு இருந்தே வருகின்றது. அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தப் பிரகாரம் சீன நிறுவனமான 'நொதேர்ன் பவர்' மின்சாரத்தை விநியோகிக்காமையே இதற்குக் காரணமெனப்படுகின்றது. ஆனால், இந்த நிறுவனமும் இப்போது அரசின் முக்கியஸ்ரொருவர் வசமாகி விட்டதாகக் கூறப்படுகின்றது. சீரற்ற மின் விநியோகத்தினால் குடாநாட்டில் ஏதோ சில கிராமங்கள் இரவுவேளைகளினில் இருளிலேயே உறங்குகின்றன.

பிரதான போக்குவரத்து மார்க்கமான வீதிகள் பராமரிக்கப்படாமலேயோ திருத்தப்படாமலேயோ உள்ளன. அவ்வாறு திருத்தப்படுகின்ற அல்லது மீளமைக்கப்படுகின்ற வீதி வேலை உரிய தரத்தில் மேற்கொள்ளப்படுவதுமில்லை. இதனால் குறுகிய காலத்தினுள்ளேயே அவை பழைய நிலையினை அடைந்தும் விடுகின்றன. மறுபுறத்தே நிர்மாண வேலைகளுக்கு தெற்கினைச் சேர்ந்த பெரும்பான்மை ஒப்பந்தக்கார நிறுவனங்களுக்கே ஒப்பந்தங்களை வழங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றது. அரசியல் ரீதியாக சிபாரிசு செய்யப்பட்டு வரும் தென்னிலங்கை ஒப்பந்தக்கார நிறுவனங்களுடன் பகைத்துக்கொள்ள உள்ளூர் அதிகாரிகள் தயாராகவில்லை என்பதே உண்மையான யதார்த்தமாகும்.யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான கட்டுமானங்களை உருவாக்கவே ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்றவை அரசுக்கு உதவுவதாக கூறிக்கொள்கின்றன. ஆனால், அவ்வாறான உதவிகள் முழுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைகின்றதா என்பதனை உறுதிப்படுத்த அவை தவறிவிடுகின்றன. பொரும்பாலும் இடையில் பலரும் வருமானம் ஈட்டிக் கொள்ள இவ்வாறான உதவிகள் கைகொடுக்கவில்லை.

குடநாட்டில் உள்ளக மின்விநியோகத்திற்கு மின்மார்க்கங்களை ஏற்படுத்தி வழங்குவதில் பிரிட்டன் போதிய நிதி உதவிகளை வழங்கியிருந்தது. ஆனால், சீரான மின்விநியோகமற்ற நிலையில் மக்களுக்கான பயன் என்ன என்பதே கேள்வியாக இருக்கின்றது. 'யுனிசெவ்' போன்றவை கூட சர்வதேச ரீதியில் கிடைக்கின்றவற்றை இலக்குகள் ஏதுமின்றி கொட்டித் திணிப்பதிலேயே முனைப்பு காட்டுகின்றன. தமக்கான ஆசனங்களை காப்பாற்றிக் கொள்ள உள்ளூர் அதிகாரிகள் போட்டிபோடுகின்றனர்.குடாநாட்டில் அபிவிருத்தி என்பது முதலில் மக்களிடமிருந்து தேவைகளை அடையாளம் கண்டு வகுத்து முன்னெடுக்க வேண்டியது. அவ்வாறான அபிவிருத்திகளே மக்களுக்கு நலன் தருவதுடன் நின்றுநிலைக்க கூடியதொன்றுமாகும்.

• பாவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1956 சிங்களம் மட்டும் சட்டமும் 1957 பண்டா-செல்வா ஒப்பந்தமும் பகுதி-05

956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க, தாம் பிரதமராக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இருப்பதிநான்கு மணி நேரத்தில் சிங்களம் மட்டும் (Sinhala Only) சட்டத்தைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றப் போவதாகத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கூறிவந்தார். இதன் விளைவாகவும் பண்டாரநாயகாவால் முன்வைக்கப்பட்ட 'பஞ்சபலவேகய'(ஐம்பெருங்சக்திகள்) என்ற கொள்கையாலும் மக்கள் பண்டாரநாயகாவையும் அவரது கட்சியையும் நாடாலாயினர். 'பஞ்ச பலவேகய' என்பது ஒரு தேசத்தின் மூலவேராக விளங்குபவர்கள் கிராமப்புறப் பாடசாலை ஆசிரியர்கள், நாட்டுப்புறப் வைத்தியர்கள், புத்த குருமார்கள், தொழிலாளிகள், விவசாயிகள் என்பவர்களேயாகும் என்பது பண்டாரநாயகாவின் நிலைப்பாடாகும்.

இந்த ஐம்பெரும் சக்திகளையும்(பஞ்ச பலவேகய) தன்வசப்படுத்திய எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயகா அவர்களைத் தளமாகக் கொண்டே தனது கட்சியின் நிகழ்ச்சி நிரலையும் தயாரித்தார். தூயவெண்ணிற ஆடை அணிந்து கொண்ட பண்டாரநாயகா 'சிங்களம் மட்டும்' என்ற கதாயுதத்தைக் கையில் எடுத்த போது சிங்கள மக்கள் ஆரவாரித்தார்கள். தமிழ் பேசும் மக்கள் இதற்கு எதிராக ஆர்ப்பரித்து எழுந்தனர். இதனால் 1956 ஆம் ஆண்டு ஆனி மாதம் ஐந்தாம் திகதி (05.06.1956) பண்டாரநாயகாவின் அரசு சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்த போது தந்தை செல்வா தலைமையில் காலி முகத்திடலில் தமிழர்கள் சக்தியாகக் கிரகம் செய்தார்கள். இந்த முரண்



# சட்டமும் சமூகமும் 24






நிலை தேசத்தின் இனமுரண்பாடுகளுக்கு மேலும் தூபமிட்டது. இனக்குரோதங்களுக்கும் அதைத் தொடர்ந்து வளர்ந்த இன மோதல்களுக்கும் வித்திட்டது.

### இடது சாரிகளின் பெரும் எதிர்ப்பு

சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது அதனை அக்கால கட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களாகவிருந்த இடது சாரிக் கட்சியினர் வன்மையாகக் கண்டித்துப் பாராளுமன்றில் உரையாற்றினார்கள். சிங்களம் மட்டும் சட்டம் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சிந்தனைத் தெளிவோடு அவர்கள் பாராளுமன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

'பண்டாரநாயகவே இன்று நீர் சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வருகிறீர். இதன் மூலம் இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்துகின்றீர். இதன் விளைவாக எதிர்காலத்தில் தமிழர்கள் செல்வநாயகத்திற்கோ அல்லது ஜி.ஜி பொன்னம்பலத்திற்கோ சிலை வைக்கமாவட்டார்கள். அவர்கள் உமக்கே சிலை வைத்துப் போற்றுவார்கள் இது நிச்சயம்' என்றார். கலாநிதி என்.எம்.பெரேரா அவர்கள்.

'பண்டாரநாயகாவின் மொழிக் கொள்கையால் புதிய தொரு நிலைமையுருவாகியுள்ளது. ஒரு மொழி என்றால் இரண்டு நாடுகள் இரு மொழி என்றால் ஒரு நாடு( One Language : Two Countries Two Languages : One Country) இந்தப் புகழ் பெற்ற பேச்சை சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து நின்ற டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா பாராளுமன்றில் கூறினார்.

(தொடரும்)

சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# பக்தர் கேட்டவை பாபா சொன்னவை


**பக்தர் :** சுவாமி உங்களது அபாரமான அநுக்ரஹத்தினாலும் ஆசிர்வாதத்தினாலும், எங்களது அதிஷ்டத்தினாலும், உங்களது சன்னதியை அடைந்துள்ளோம். அவதார மூர்த்தியான தங்களின் தரிசனம், ஸ்பர்சனம், சம்பாஷணம் இவற்றைப் பெற்றிருக்கிறோம். முன் கழிந்த பூர்வ ஜென்ம வாசனைகள் அவசியமற்றவை அல்லவா? இப்போது கிட்டியுள்ள மகா பாக்கியம் எங்களுக்குப் போதுமானதல்லவா?

**பாபா :** இப்போது கிடைக்கப் பெற்றுள்ள பாக்கியங்கள் முன் பிறவிகளில் செய்த நற்கர்மங்கள் இரண்டும் தேவையானவையே. ஒன்றுக்கு மற்றது சம்பந்தப்பட்டவையே.

(உ+ம்) - அது ஒரு மணல் பாங்கான பிரதேசம். மழை பலமாகப் பெய்கிறது. பெய்த நீரெல்லாம் மணலில் வீழ்ந்து வடிந்து போய் விடுகிறது. அப்படியே உள்ளது உங்களது நிலைமை. நிலையாக இருப்பதில்லை. ஆனால் ஒரு கால்வாய் நதி உள்ள பிரதேசத்தில் மழை பொழிந்தால் என்னவாகிறது? நீரோட்டம் நிறைந்து மிக வேகமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது. முன் சென்ற ஜென்மத்தின் சமஸ்காரம் என்ற கால்வாய் இருக்குமானால் அநுக்ரஹம் என்ற மழை நீரோட்டத்தை அதிகரிக்கிறது. மழை என்பது இறைவனின் கருணை (அநுக்ரஹம்) போன்றது. அதே மாதிரி முன் ஜென்மங்களின் செய்த நல்வினைகள் இறைவனின் அநுக்ரஹத்தை நிலை நிறுத்திக் கொள்கின்றன. அதனால் தான் 'கையில் கிடைத்த சாயியை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளுங்கள்' என்று கூறுகின்றேன்.

கிணற்றில் வாளியை இட்டு நீரை இழுத்து எடுத்து வருகிறீர்கள். கவனமாக வாளியைப் பிடித்துக் கொள்ள வேண்டும் அல்லவா? நடுவில் கயிற்றை விட்டு விட்டால் நீரை அடைய முடியுமா?

ஆனால் ஒரு விடயம் உள்ளது. பூர்வ ஜென்ம சமஸ்காரங்கள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும் சரி இறைவனின் மீது ஆழ்ந்த அன்பு இருக்குமானால் எதையும் எந்தளவு வேண்டுமானாலும் சாதிக்க இயலும். மனித முயற்சி வலுவாக இருக்குமானால் இறைவனின் அநுக்ரஹமும் அதனுடன் இணைந்து நற்பலன்களை நல்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 24

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | ■ | 06 | 07 |
| 08 | 09 | ■ | 10 | ■ | 11 | 12 | 13 |
| ■ | 14 | 15 | 16 | ■ | 17 | 18 | 19 |
| 20 | ■ | 21 | 22 | ■ | 23 | 24 | 25 |
| 26 | 27 | ■ | ■ | 28 | 29 | 30 | ■ |
| 31 | ■ | 32 | 33 | 34 | 35 | ■ | 36 |
| 37 | ■ | 38 | 39 | 40 | ■ | 41 | 42 |
| 43 | 44 | ■ | 45 | 46 | 47 | 48 | ■ |

### இடமிருந்து வலம்

1. கண்ணனால் அர்ச்சுனனுக்கு வழங்கிய உபதேச சுருக்கம்
6. தங்களது (இறுதி இல்லை)
8. யானை (திரும்பி)
11. ஒரு ராசி
14. தடவை
17. செல்வம்
21. செல்போனின் உயிர்
23. எல்லோருக்கும் இது நல்லதே நல்லது
26. பெண்கள் விரும்பும் மலர்
28. நீர்நிலைகளில் ஒன்று
32. மிகக்கூடுதலாக வெளிப்படும் கோபம்
38. விநாயகர் உண்ட முதல் உணவு (திரும்பி)
41. ஒலி
43. நாங்கள்
45. மேளச்சத்தம்

### மேலிருந்து கீழ்

1. பாம்புக்கு எதிரி
2. உடலுக்கு நீர் அவசியமான உணர்வு
4. குருதி
6. சுயநலம்
7. மானிடன்
11. பளபளக்கும் நில
15. விருப்பமுடன் பார்
20. ஏறுமுகம்
28. புதினம்
32. முருகனின் வாகனம்
33. வெடிச்சத்தம்
36. ஆண்களுக்கே உரிய தனி அழகு
41. மந்திரம்

### குறுக்கெழுத்துப் போட்டி 22க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அ | ந் | த | ண | ர் | ■ | பா | சி |
| ர | ■ | வு | ப | ட | ர் | ■ | வ |
| ச | ங் | க | ம் | ■ | ம | க | ன் |
| ன் | வா | ■ | ச | டு | கு | டு | ■ |
| ■ | கு | ரு | ம | ண் | ■ | கு | தி |
| வை | ■ | சி | ப் | பா | ய் | ■ | ப் |
| கா | வி | ■ | ர் | ■ | ■ | டி | பி |
| சி | ம் | பு | ■ | க | ங் | கு | லி |

## பாராட்டுப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. **திருமதி. தி. சிதம்பரநாதன்**
டச்சு வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
2. **ப. மகேந்திரதாசன்**
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
3. **அ. ஸ்ரீஸ்கந்தராஜா**
15/11, புவனேஸ்வரி
அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

**குறுக்கெழுத்துப் போட்டி 23க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக் கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**

**குறுக்கெழுத்துப் போட்டி**
**'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,**
**117, புகையிரத நிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.**




"நம்ம தலைவர் எதற்கெடுத்தாலும் ஏட்டிக்குப் போட்டியா நடந்துக்கிறார்!"
"இப்போ என்ன செய்தார்?"
"எதிரணி தலைவர் நூலகத்தை திறந்து வைத்தார். இவர் ஊசியகம் திறந்து வைக்கப் போகிறாராம்!"




"என்ன அவர் உன்னுடைய மாஜிக் கணவரா?"
"முதல் கணவர்தான் அவர் தொழிலே 'மாஜிக்' செய்வதுதான்!"




"தன் வினை தன்னைச் சுடும் என்பது உண்மை!"
"எப்படிச் சொல்கிறாய்?"
"நான் நேற்றுச் சுட்ட ரொட்டியை என் மீதே என் மனைவி தூக்கி எறிந்து விட்டாள்!"




"டாக்டர், எங்க கட்சி வளர்ச்சிக்கு ஏதாவது உதவி பண்ணுங்க!"
"இந்தாங்க மல்டி விட்டமின்!"




"உங்களுக்கு பேத்தி பிறந்திருக்கு... ஏன் சோகமா இருக்கீங்க?"
"என் மகளுக்கு இன்னும் கலியாணமே ஆகலே!"




"அவர் பக்கத்தில் நெருங்க முடியாது உலக சாதனையாளர்!"
"அப்படியா?"
"ஆமாம், ஐந்து வருடங்களாக குளிக்காமலிருந்து சாதனை செய்திருக்கிறார்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

'அரசனை நம்பி புருசனை கைவிட்ட மனைவி' யின் கதை பற்றி அறிந்திருப்பீர்கள். முறைப்படி தொட்டுத் தாலிகட்டிய கணவனையே உதறித் தள்ளி விட்டு பணத்திற்காக, புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வசிக்கும் ஒருவருடன் வாழ்க்கை நடத்தப்புறப்பட்ட ஒரு பெண்ணின் துரோகச்செயல் எமது புலத்தில் அண்மையில் நடைபெற்றுள்ளது.

கணவனை விட்டு ஏன் பிரிந்தாய்? தற்போது அக் கணவனின் நிலை என்ன? கள்ளக் காதலனுடன் எப்படி அவளுக்கு தொடர்பு ஏற்பட்டது? அவனைப் பற்றிய பின்புலங்கள் என்ன? இக் கேள்விகளுக்கு விடையறிய தொடர்ந்து படியுங்கள்.

தமிழர் பிரதேசத்தில் யுத்தம் ஏற்படுத்திச் சென்ற வடுக்கள் சொல்லுந்தரமன்று. யுத்தம் முடிந்தாலும் அதன் தாக்கங்கள் நிறைவுறாது நீண்டு செல்கின்றன. தமிழரின் சமூக, பொருளாதார, கலாசாரத் தளங்களில் சிதைவுகளை - உடைவுகளை ஏற்படுத்திய போர் இப்போதும் எம் சமூகத்தின் வாழ்வியலை சூறையாடி, மெல்லக் கொல்லும் வியாதியான புற்றுநோய் போல நீடித்துவருகிறது.

தற்போது கலாசாரச் சீரழிவுகள் தொடர்பான விடயங்கள் ஊடகங்களால் அதிகம் பிரஸ்தாபிக்கப்பட்டு வரும் இப் பின்னணியில் இச் சம்பவம் அதிக கவனிப்பைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

வன்னிப் பிராந்தியத்தில் இறுதிக் கட்டப் போரில் சிக்கி மாண்ட உயிர்கள் ஏராளம். அதிஷ்டவசமாக பலர் செத்துப் பிழைத்து உயிர்தப்பி இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சமடைந்திருந்தனர்.

அப்படித்தான் கணவன், மனைவி மற்றும் ஒரு குழந்தை ஆகியோரை உள்ளடக்கிய சிறிய குடும்பம் ஒன்றும் வவுனியாவிலுள்ள இடைத்தங்கல் முகாம் ஒன்றில் தங்கியிருந்தது. யுத்த அரக்கனின் முரட்டுக் கரங்களிலிருந்து ஒருவாறு தப்பி பிழைத்து வந்துவிட்டோம் என்ற பூரிப்பில் இருந்த அக்குடும்பதின் மகிழ்ச்சிப் பிரவாகம் தொடர்ந்து நீடிக்கவில்லை. சந்தேகத்தின் பேரில் முகாமில் வைத்து கைதுசெய்யப்பட்ட கணவன் தற்போது தடுப்புமுகாம் ஒன்றில் தனது விடுதலையை எண்ணி ஏங்கியபடி தவமிருந்து வரும் நிலையில் மனைவி தனது இரண்டே வயதான பிஞ்சுப் பாலகனுடன் எங்கே போவாள்? பாவம். சொத்து சுகங்கள் எல்லாவற்றையுமே துறந்து உயிரையும் உடலையும் மட்டுமே உரிமையுடன் அவர்களால் கொண்டுவர முடிந்தது. அன்றாடச் செலவுக்கே திண்டாடிய அக்குடும்பம் இறுதியில் தலைவனையும் இழந்த சோகத்தில் அந்தரிக்கையில் நாளாந்த உணவுத் தேவையை தனது உறவினர்களது ஒத்துழைப்புடன் அவ்விளம் தாய் பூர்த்திசெய்து வந்தாள்.

தனக்கும் தன்னுடைய குழந்தையினதும் வயிற்றுப் பிழைப்புக்கு உறவினர்களின் தன்னலமற்ற உதவி பெரிதும் கைகொடுத்தது. கணவனின் விடுதலையை எண்ணி ஏங்கி பேதலித்து நின்ற அவளுக்கு தாய், தந்தையரின் உறவுகளின் ஆதரவுக்கரங்கள் இதமூட்டி அரவணைத்தன.

பல இன்னல்களுக்கு மத்தியில் தறப்பாள் கொட்டகைக்குள் தனது வாழ்வை எல்லைப்படுத்தி வாழ்ந்த அவளுக்கு ஒருவாறு விடுதலை கிட்டியது. இதனால், அங்கிருந்து வந்து யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு வீட்டில் பகுதியாக வாடகையில்லாமல் தங்கியிருந்தாள். அவள் மீது வீட்டு உரிமையாளரான அந்த வயோதிபப் பெண்ணுக்கு இருந்த இரக்கம், பாசம் அந்த அபலைப் பெண்ணுக்கு வாழ்வளித்தது.

தனது பிள்ளையின் கடமைகளைக் கவனிப்பதும் தடுப்புமுகாமில் இருக்கும் கணவனை அடிக்கடி சென்று பார்த்து விசாரித்துவருவதும் தான் அவளது பிரதான கடமையாக - பொறுப்பாக இருந்தது. இவ்வாறு நாட்கள் உருண்டோடின.

'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பது போல மீண்டும் அக்குடும்பத்தில் சனி பகவானின் கடைக் கண் பார்வை திரும்பியது. கணவனே கண் கண்ட தெய்வமாகவும் தனது தவப்புதல்வனான தன் பிள்ளைகக்கு சிறந்த நல்ல தாயாகவும் விளங்கிய அப் பெண்ணின் வாழ்வில் மீண்டும் விதி விளையாடியது.



அவள் இருந்த வீட்டின் உரிமையாளரான வயோதிபப் பெண்ணின் மகன் வெளிநாடு ஒன்றில் தொழில் புரிந்து வருகிறான். அவனுக்கு கல்யாணமாகி பிள்ளைகளும் இருக்கின்றனர். தன் மனைவி, பிள்ளைகளை தான் வதியும் நாட்டில் விட்டு விட்டு தனது தாயாரைப் பார்ப்பதற்காக தனது சொந்த நாட்டிற்குத் திரும்பினான்.

தாயாரும் தனது மூத்த மகன் வந்த சந்தோசத்தில் அவனுக்குரிய பணிவிடைகளை சிரமேற் கொண்டு ஆற்றினாள்.

அப்போது, அவ் வீட்டின் இன்னொரு பாகத்தில் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தங்கியிருந்த அந்த இளம் பெண் (தாய்) மீது அவனுக்கு மோகம் பிறந்தது. அவளின் சுமாரான அழகு, இளம் பெண்ணுக்கேயுரிய எடுப்பான தோற்றம், பார்ப்போரை மீண்டும் பார்க்கவைக்கும்,காந்தக் கண்கள் என அவளுக்கிருந்த தனிச்சிறப்பான தோற்றத்தில் அவனது மனம் உடைந்துவிட்டது; சுக்குநூறாகியது. குலம் கோத்திரம், கட்டிய மனைவி, வளர்த்த பிள்ளைகள் என எல்லாவற்றையும் மறந்தவனாக முற்றாக அவளிடம் சரணடைந்தான்.

தன்னிடம் இருந்த பணபலத்தால் எதுவும் சாதிக்கலாம் என்ற நப்பாசையில் அவளுக்கு வலைவீசினான். 'பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்' என்று கூறுவார்களே. பணத்தினால் எல்லாவற்றையுமே செய்யலாம் என்ற தற்காலத் தத்துவத்தை மெய்ப்பிப்பது போல அவன் விரித்த வலையில் அந்த அபலைப்பெண்ணும் வீழ்ந்தாள்.

தனது அன்பான கணவன், பாசமாக வளர்த்த பிள்ளை எல்லாவற்றையும் அவன் வீசிய பெருந்தொகைப் பணம் மறக்கடிக்கச் செய்தது. தனது பெற்ற பிள்ளையைக் கூட தனியாக தவிக்கவிட்டு இருவரும் ஊரைச் சுற்றக் கிளம்பிவிடுவார்கள். அவர்கள் எங்கு செல்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்? எங்கு தங்குகிறார்கள் என்பது அவர்கள் இருவருக்கும், கடவுளுக்கும் தான் வெளிச்சம்.

காலை சென்றால் மாலை வரை, சில நேரம் இரவுவேளை வரை அவர்களின் உல்லாசம் நீளும். "இரக்கப்பட்டு இருக்க இடங்கொடுத்தேனே இப்ப எனது குடும்பத்தையே மோசம் செய்துவிட்டாளே பாவி!" என்று புலம்புகிறார் அந்த வீட்டு உரிமையாளரான வயோதிபப் பெண். அவ்வயோதிபப் பெண்ணால் எதுவுமே செய்யமுடியவில்லை. காரணம், தனது மகனின் மானம் போய்விட்டால் அவனின் கதி என்னவாகும்? என்ன பிழை செய்தாலும் தாய்மை என்பது உடனே மன்னித்து மறக்கும் குணம் படைத்தது அல்லவா?

அவர்கள் இருவரும் உல்லாசம் அனுபவிக்கப் புறப்பட்ட பின்னர் அந்த இளம் பெண்ணின் பிள்ளை அந்த வயோதிபப் பெண்ணின் அரவணைப்பில் இருக்கும். இதேவேளை, அவ் இளம் பெண் தடுப்பு முகாமில் வாடும் தனது கணவனைக் கூட பார்க்கச்செல்வதில்லை. புதுக் காதலனுடன் உல்லாசம் அனுபவிக்க தனது பெரும் பகுதி நேரங்களை செலவிடுவதால் தனது கணவனை சென்று பார்ப்பதற்குக் கூட ஏது நேரம்? இதனால், இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைபோல் கணவனின் நிலை.

'ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்' என்று கூறுவார்களே அதுபோல, இவர்களுக்கு இடையிலிருந்த கள்ளக் காதல் தொடர்பு படிப்படியாகத் தெவிட்டத் தத் தொடங்கியது. பிறன் மனைவியை தனது பணபலத்தால் அடிமைப்படுத்திய சந்தோஷத்தில் அந்தக் காமுகன் மீண்டும் வெளிநாட்டுக்குச் செல்லத் தயாரானான்.

இருந்தும், அந்த அபலைப் பெண்ணால் ஒரு நிமிடம் கூட அவனைப் பிரிந்திருக்க முடியவில்லை. ஒப்புக்காக அக்காமுகனும் ஓரிரு மாதங்களில் தான் இருக்கும் நாட்டுக்கு அழைக்க ஏற்பாடு பண்ணுவதாக வாக்குறுதி அளித்துவிட்டு சென்றிருக்கிறான்.

அவனும் பிரிய மனமின்றியே சென்றிருக்கிறான். வாக்குறுதி அளித்தபடி அவளை கடைசி வரைக்கும் மறக்காமல் கரைசேர்ப்பானா? அல்லது தனது அன்புக் கணவனையே உதவி எறிந்துவிட்டு, ஏன் பத்துமாதம் தனது வயிற்றில் சுமந்து பெற்றெடுத்து பாலூட்டி சீராட்டி உச்சிமோந்து வளர்த்த அந்தப் பிஞ்சுப் பாலகனையே பரிதவிக்க விட்டுவிட்டு படுபாதகம் புரிந்த அந்தப் பெண்ணை இறைவன் தண்டிப்பானா? என்பது இப்போதைக்கு கூறமுடியாது. 'அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்' என்ற பழமொழி போல் அந்த பே(ய்)தைப் பெண்ணின் எதிர்கால வாழ்க்கை சூனியமாகிவிடுமோ என்பது தற்போதைக்கு விடை தெரியாத ஒன்றாகவே இருக்கப் போகிறது.

இந்த சம்பவத்தை எனது நண்பன் கூறி முடிக்கும் தறுவாயில் அருகில இருந்த தேநீர்க்கடை ஒன்றிலிருந்து பெரிய சத்தத்தில் பாடல் ஒன்று ஒலிக்கிறது. "ஆசைப்பட்ட எல்லாவற்றையும் காசிருந்தால் வாங்கலாம் அம்மாவை வாங்கமுடியுமா?" என்ற இப்பாடல் காற்றிலே கலந்து என் காதுகளைத் தழுவியபோது அப்பாடலை தனக்கும், தனது தந்தைக்கும் துரோகமிழைத்த தனது தாயை நோக்கி அந்த பிஞ்சுக் குழந்தை பாடுவதாக என் மனதில் எதிரொலித்தது.

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமும் பாலியல் கல்வியும்

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்றால், தாயின் கருவறையில் உருவாகிய தொடக்கம் 18 வயதிற்கு உட்பட்ட அனைத்து மனிதப் பிறவிகளும் சிறுவர்களாவர். இத்தகைய ஆண், பெண் இருபாலான சிறுவர்களும் பாலியல் ரீதியாகப் பிறரால் வார்த்தை மூலமாகவோ அல்லது உணர்வுபூர்வமாகவோ அல்லது உடலின் பாலியல் உறுப்புக்களைத் தொடுவதன் மூல்மாகவோ அல்லது காட்சிப்படுத்தல் மூலமாகவோ சிறுவர்களின் சம்மதத்துடனோ அன்றேல் சம்மதம் இன்றியோ மேற்கொள்ளப்படும் தூண்டுதல்கள் அல்லது உடலுறவு கொள்ளும் செயற்பாடுகள் யாவும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்துள் அடங்கும்.

அதாவது, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தீங்கு விளைவிக்கின்ற செயற்பாடுகள் யாவும் வயது வரும் பருவத்தில் பருவ வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும், பாதுகாப்பிற்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் தனியாட்களாலோ/நிறுவனங்களாலோ பாலியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்படுகின்ற யாவும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமாகும்.

**இதன் தாக்கம் நான்கு வகைப்படும்**

* பாலியல் வல்லுறவு
* சிறுவயதுக் கர்ப்பம்
* விருப்பத்துடனான பாலியல் உறவு
* பாலியல் துன்புறுத்தல்

**பாலியல் துஷ்பிரயோகத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் சில**

சிறுவர்கள் உடல், உள, பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகத்திற்கு அல்லது பிரச்சினைக்கு உட்படுத்தப்படுகின்றபோது ஆளுமை வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படுவதோடு நடத்தைக் கோலங்களும் மாற்றமடையும். மேலும் உணர்வுகள், உறவுகளில் சிதைவுகள் ஏற்படலாம். இதனால், கல்விச்செயற்பாட்டில் ஆர்வம் குறையும். தனித்துவமான திறமைகள் இழக்கப்படும். வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடல், தற்கொலை முயற்சிகள் அதிகரித்தல், குடும்ப, சமூகங்கள் சீர்குலைதல் போன்றன நடைபெறுகின்றன. இவற்றுக்கான காரணங்களாக நாகரிக மாற்றம், பிள்ளைகள் மீது பெற்றோர்களின் அக்கறையின்மை, குடும்பப் பிரிவுகள், சரியான வழி காட்டல்களின்மை, திரைப்படங்கள், கல்வியில் அக்கறையின்மை என்பனவாகும். நாம் சிறுவர்களின் உரிமைகள், தேவைகள், விருப்பங்கள், அவர்களின் நடத்தைகள் பற்றி தெளிவுபடுத்த வேண்டியதுடன் பிரதானமாக கட்டாய கல்வியை சகலரும் கற்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைக்கலாம்.

எமது மாவட்டத்தில் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இவற்றினை தடுப்பதற்கான நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லையென்றே கூறலாம். வெளிவருகின்ற சம்பவங்கள் குறைவாக இருந்தாலும் பல சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.




பெற்றோர்களுக்கு மிகவும் சவாலானது பிள்ளைகளின் வளரிளம் பருவமாகும். இப்பருவத்தில் பிள்ளைகளுடன் நன்மை, தீமைகளை பகிர்ந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இதில் பாலியல் கல்வி பற்றிய அறிவினை கூறவேண்டியது பெற்றோர்களின் கடமையாகும். பாலியல் கல்வி தனிப்பட்ட அந்தரங்க விஷயம். பொது இடத்தில் பேசக்கூடாது என பலர் நினைக்கிறனர்.

ஆனால், அது தவறு. எயிட்ஸ் தடுப்பு பற்றிய விழிப்புணர்வுகளில் பாலியல் கல்வி வெளிப்படையாக பேசப்படுகிறது. தேவை, அவசியங்களின் பொருட்டு இதனைக் கதைப்பது தப்பில்லை.

பாலியல் பற்றிய கதைகளை குழந்தைகள் முன் பேசுவதை தவிர்க்க வேண்டும். பாலியல் பற்றிய கேள்விகளை சிறுவர்கள் கேட்கும் போது அவர்களுடைய மனநலம் மற்றும் வாழ்க்கையில் ஒத்துப்போகக் கூடியவாறு பாலியல் பற்றிய விளக்கங்களை வெளிப்படையாக பேசுவது அவசியம். சிறுவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு நேரடியாக ஒளிவுமறைவில்லாமல் பதில் கூறுதல் வேண்டும். இல்லையேல், ஏதோ தமக்கு இரகசியத்தை மறைப்பதாக நினைப்பார்கள். எவ்வாறு இருந்தாலும் இவர்கள் வளரும்போது இதைப்பற்றி அறியத்தான் போகிறார்கள். எனவே பெற்றோர்கள் ஆகிய நீங்கள் சொல்லுவதே மிக நல்லது ஆகும். பாலியலின் அனைத்து விஷயங்களையும் விளக்கத் தேவையில்லை. அவர்களுடைய ஆர்வத்துக்கு ஏற்றவாறு பதிலை மட்டும் சென்னால் போதும். அவர்களை மேலும் குழப்பவேண்டாம்.

**சம்பவம் (Case Study)**

தாய் ஒருவர் கூறுகிறார், தன் மகன் (வயது 10) பாலுறுப்புக்கள் பற்றி அடிக்கடி கேள்வி கேட்கிறான். மற்றும் தாய், தகப்பனின் உடலமைப்பின் வேறுபாடுகள் பற்றியும் கேட்கிறான். இவ்வாறு கேட்கக் கூடாது என்று கூறி வேறு கதைகளை கூறினாலும் கேட்கிறான் இல்லை. என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் இருக்கிறது...? குழந்தைகள் தமது உடல் அம்சங்களைப் பற்றி கேட்க கூச்சப்பட மாட்டார்கள். மறைக்கப்பட்ட பாலுறுப்புக்கள் பற்றி ஆராயும் ஆர்வம் அவர்களிடத்தில் இயற்கையாகவே இருக்கும். மகனின் கேள்விக்கு கூச்சப்படாமல் ஆண், பெண் உடலமைப்புக்கள் பற்றி அவனுக்கு வெட்கம், குற்றமனப்பான்மையை ஏற்படுத்தாமல் உடலின் பாகங்களின் படங்களை காட்டி வேறுபாடுகளை கூறவேண்டும். உதாரணமாக, செல்லப்பிராணிகளினை காட்டி விளங்கப்படுத்தலாம். மேலும், உடலின் சில பாகங்கள் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். (25 ஆம் பக்கம் பார்க்க...)

ஸ்ரீ.கஜேந்திரன் (ஆற்றுப்படுத்துனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்கலாசார பரிமாற்றத்தின் தரிசனமாக யாழ்ப்பாண இசைவிழா

(சென்ற வாரத்தொடர்ச்சி...)

சிங்களச் சகோதரர்களிடமிருந்து சப்பிரகமுவ பிரதேசத்து சப்பிரகமுவ நிகழ்வும், ரோஹண பிரதேசத்து 'ரோஹண பத்தகே' நிகழ்வும் கொழும்பு 'சமன் சண பிற்றிய' மற்றும் 'மாத்ரா' நிகழ்வும் 'தெல்தெனிய' பிரதேசத்து 'கொஹம்ப கங்காரிய' நிகழ்வும் தெளிப்பிட்டி பிரதேசத்து 'தஹஅட்ட சன்னிய' நிகழ்வும் அம்பலாங்கொடை பிரதேசத்து 'றூகட' நிகழ்வும் மற்றும் கோலம் ஆற்றுகை நிகழ்வும் சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டன.

சர்வதேச மட்டத்திலிருந்து இந்தியக் குழுவினரின் மக்கனியார் நிகழ்வும், நோர்வேயின் 'ரின்ட்ரா' இசை நிகழ்வும் பாலஸ்தீனத்தின் 'சப்ரின்' நிகழ்வும் தென் ஆபிரிக்காவின் 'சிபிக்கா' எனப்படும் ஆடலுடன் கூடிய பாடல் நிகழ்வும் நேபாளத்தின் 'என்.பி. டங்கோல்' மற்றும் 'துர்கா பி.கே' நிகழ்வும் சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டன.

போர்த்துக்கேய வம்சாவளியான காப்பிரியரின் கெபர் ஸ்டெல்லா இசைக்குழுவின் பாரம்பரிய 'காப்பிரி மான்ஜா' பாடல் நிகழ்வும் சிறப்பாக ஆற்றுகை செய்யப்பட்டன.

இவ்விழாவில் ஆற்றுகை செய்யப்பட்ட அனைத்து ஆற்றுகைக் குழுக்களினதும் கலைவடிவங்கள் அவ்வப் பிரதேசத்து பின்புலங்களையும் நடைமுறை இயங்குதல்களையும் கொண்டமைந்து விளங்கியதுடன், சிறப்பாக பிரதேசத்து மண்வாசனையுடன் கிராமியக் கலை வடிவங்கள் ஆற்றுகை செய்யப்பட்டமை சிறப்பம்சமாகும்.

யாழ்ப்பாண இசைவிழாவானது பார்த்தோர்க்கு கிராமிய பாரம்பரிய அறிவைத் தந்ததோடு வேறுபட்ட கிராமியக் கலை வடிவங்களின் கலைநுட்பத்தை செய்முறை விளக்கத்துடன் அறியக் கூடிய வகையில் அதன் இயங்குதளம் அமைந்திருந்தமையும் சிறப்பம்சமாகும். இதனூடாக பல்வேறு கலாசாரங்களின் வடிவங்களினுடைய தரிசனங்களையும் ஆற்றுகைச் சிறப்பையும் கலைக்குழுக்களினுடைய இணைவினையும் கலைக்குழுவினருக்கும் பார்போருக்குமான உறவு நிலைகளையும் யாழ்ப்பாண இசைவிழா ஏற்படுத்தியது எனலாம். யாழ்ப்பாண இசைவிழா - 2011 பாரம்பரிய பல்கலாசார பரிமாற்றத்தின் இணைவு நிகழ்வாக அமைந்தமை சிறப்புக்குரிய விடயமாகும்.

● எஸ்.ரி.குமரன்

# வீட்டு வைத்தியம்

- சாறு எடுத்த பின்னர் எலுமிச்சம் பழ மூடிகளை எறியவேண்டாம். மீன், வெங்காயம், பூண்டு வாடைகைகளிலிருந்து போக அதை வைத்து அழுந்தத் தேய்க்கவும்.
- ஒறேஞ் தோல்களை வெயிலில் காயவைக்கவும். நன்றாக உலர்ந்த பிறகு அரைத்துப் பொடியாக்கவும். கேக் செய்யவும், முகத்திற்கான ஹூச்ஞிநுட்ச்ண்டு செய்யவும் பயன்படும்.
- சாதாரண அளவுள்ள ஒரு ஸ்பொஞ்சை குளிர்சாதனப் பெட்டியிலுள்ள காய்கறித் தட்டில் வைக்கவும். அது ஈரத்தை உறிஞ்சிய பின்னர் ஸ்பொஞ்சை எடுத்து காயவைக்கலாம்.
- இரும்பு அல்லது எவர்சில்வர் சல்லடையைச் சுத்தம் செய்ய சிறிது நேரம் எரியும் அடுப்பின் தீச்சுடருக்கு மேலே காட்டவும். ஒட்டிக் கொண்டுள்ள அழுக்கு எரிந்து சாம்பலான பிறகு சல்லடையை சோப்புத் தண்ணீரில் கழுவலாம்.
- மறுநாள் வரை சாண்விட்ச் கெடாமல் புதியதாக இருக்க உள்ளிருக்கும் உணவுப்பொருள் பழையதாக ஆகாமல் இருக்க சாண்விட்ச்சினுள் வெந்த காய்களை வைக்கவேண்டாம். முளை கட்டிய பயறு, வதக்கிய வெங்காயம், தக்காளி போன்வற்றைப் பயன்படுத்தலாம்.
- ரொட்டி ரொம்ப மென்மையாக இருந்தால் கத்தியை தீயில் வாட்டிய பிறகு துண்டுகள் போட முடியும்.
- எலுமிச்சைச் சாறை நாள் பட வைத்திருக்க பழங்களைப் பிழிந்து துணியில் வடிகட்டவும். சுத்தமாக உலர்ந்த பாட்டில்களில் சாறை ஊற்றி ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு ஆஸ்பிரின் மாத்திரைகளைப் போடவும். அழுத்தமாக மூடி குளிர்ந்த இடத்தில் வைக்கவும்.
- தயிர் புளிக்காமல் இருக்க அதில் ஒரு தேங்காய் துண்டு போடவும்.
- பழைய ரொட்டி புதிதாக இருக்கவேண்டுமா? பரப்பிய செய்தித்தாளில் சுற்றி சூட்டடுப்பில் சூடாக்கவும்.
- எலுமிச்சம் பழத்தை கொதிக்கும் தண்ணீரில் போட்ட பிறகு அதைப் பிழிவதால் இரண்டு மடங்கு சாறு கிடைக்கும்.
- பீட்ரூட்டைத் தோல் சீவி சிறு துண்டுகளாக்கவும். வெய்யிலில் உலர்த்திப் பொடி செய்யவும். இதை உணவில் சேர்ப்பதால் நல்ல நிறம் கிடைக்கும்.
- பச்சை மிளகாய் புதிதாக இருக்க செய்தித்தாளில் சுற்றி குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பாவிக்கவும்.



- கோடைகாலத்தில் பச்சைப் பட்டாணியை பாதுகாக்கும் முறை இதோ - உரித்த பட்டாணியை துணியால் கட்டி கொதிக்கும் நீரில் அந்த மூட்டையை 3 நிமிடங்கள் வைத்திருக்கவும். வெளியே எடுத்து 3 நிமிடங்கள் குளிர வைக்கவும். மின் விசிறிக் காற்றில் ஈரப்பதம் போக உலர்த்தவும். காற்றுப் புகாத ஜாடியில் போடவும். அல்லது சீல் செய்த பாக்கெட்டுக்களாகத் தயாரிக்கவும். இதை உறையும் பெட்டியில் வைத்து தேவையான போது பயன்படுத்தவும் இரண்டு வருடங்களுக்கு இவை கெடாமல் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வடித்த கண்ணீர்

## எம் மக்களின் பிரதிவிம்பம்



இலங்கை கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மத்தியில் Pass என்று அழைக்கப்படும் யேசுவின் வாழ்க்கை வரலாற்றையும் திருப்பாடுகளின் காட்சியையும் சித்திரிக்கும் ஆற்றுகை இக்கால கட்டத்தில் பெரும் வரவேற்பைப் பெற்று விளங்குகின்றது.

கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இவ் ஆற்றுகையானது ஓர் சடங்கு நிலை ஆற்றுகையாகவே கணிக்கப்படுகின்றது. இது Passion Play என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும். யேசுவின் திருப்பாடுகளின் காட்சிப்படுத்தலானது திருமறைக் கலாமன்றத்தினால் வருடம் தோறும் மேடை ஏற்றப்பட்டு வருகின்றது.

ஆரம்பக்காலங்களில் பொம்மைககளைக் கொண்டு நிகழ்த்தப்பட்டு வந்த இவ் ஆற்றுகை 1950 களில் மனிதர்கள் நடிக்கும் நாடகமாக மாற்றம் பெற்றது. முதலில் ஆங்கில மொழி உரையாடல்களே இதில் கையாளப்பட்டன. உயர் நிலையிலிருக்கும் கிறிஸ்தவ குடும்பங்கள் மட்டுமே இதனைப் பார்த்து வந்தார்கள். பிற்காலத்தில் இந் நாடக ஆற்றுகை தமிழாக்கம் செய்யப்பட்டு திறந்த வெளி அரங்குகளில் மேடையேற்றப்பட்டது. கிறிஸ்தவர்களுக்கு யேசுவின் வாழ்க்கை வரலாற்றை நாடக வடிவில் பார்க்கும் ஓர் உணர்வை இது ஏற்படுத்திவந்தது. குறிப்பாக, சிறுவர்களுக்கு கதை சொல்லும் நற்பண்பை போதிக்கும் நாடகமாக இது விளங்கி வந்தது.

திருமறைக் கலாமன்றம் 1960 களின் பிற்பாடுகளிலிருந்து இவ் ஆற்றுகைப் பணியை மேற்கொள்ளத் தொடங்கியது. அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளார் இதனை தமிழ்நாடக மரபிலக்கணத்துக்குரியதான வகையில் மாற்றியமைத்தார்.

நூற்றுக்கணக்கான நாடகக் கலைஞர்களை நடிக்கச்செய்து 1963 ஆம் ஆண்டிலிருந்து இடைவிடாது மேடையேற்றி வருகின்றார். 1995 ஆம் ஆண்டின் இடப்பெயர்வின் போது இடம்பெயர்ந்து சென்ற இடங்களிலும் இதனை திருமறைக் கலாமன்றம் ஏற்றியுள்ளது.

ஈழத்தில் காணப்படும் மரபு வழி நாடகங்களான காத்தவராயன், சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா மயான காண்டம் போன்றவற்றை போல் Pass உம் தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் ஓர் தொடர் நாடக மரபாகவும் சடங்காகவும் வருகின்றது.



இவ் ஆற்றுகைப் பணியை திருமறைக் கலாமன்றம் பொறுப்பேற்று பல இடங்களில் மேடையேற்றி புகழ் பெற்றுள்ளது. குறிப்பாக மன்னார், உரும்பிராய், நாரந்தனை, குருநகர், அச்சுவேலி, இளவாலை போன்ற இடங்களில் மேடையேற்றியதன் மூலம் தனக்கென தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. காலத்துக்கு ஏற்ப உரையாடல்களிலும் காட்சிகளிலும் மாற்றங்களைப் புகுத்தி மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளோடு ஒன்றித்து காட்சிப்படுத்தி வருகின்றது. இதுவே Pass யை ஒவ்வொரு தடவையும் பெருந்திரளான மக்கள் பார்ப்பதற்கு தூண்டுகிறது.

யாழ். திருமறைக் கலாமன்றம் முன்னெடுத்துவரும் இவ் தவக்கால ஆற்றுகை கடந்த கால வரலாற்றில் சில முக்கிய தடங்களைப் பதித்துள்ளது.

1971ஆம் ஆண்டில் கோட்டையின் பெரும் மதிலைப் பின்னணியாகக்கொண்டு 'அன்பில் மலர்ந்த அமர காவியம்' என்ற பிரமாண்டமான ஆற்றுகையைச் செய்துள்ளது.



1973 ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு கொண்டுசெல்லப்பட்ட முதல் தமிழ் நாடகமாக 'களங்கம்' என்ற திருப்பாடுகளின் காட்சி விளங்குகின்றது. இது தமிழ்நாடு திருச்சி மாவட்டத்தில் மேடையேற்றப்பட்டது.

1982 இல் இவ் ஆற்றுகை 'பலிக்களம்' என்றும் பெயரில் வெளிப்புற இயற்கைக் காட்சிகளுடன் ஈழத்தின் பல பாகங்களிலும் வீடியோ திரைப்படமாக தயாரிக்கப்பட்டது.

திருமறைக் கலாமன்றத்தின் கலைவளர்ச்சிக்கு இந்த ஆற்றுகைப் படைப்பே காரணமாக இருந்தமையால் மன்றம் இப்படைப்பை ஆண்டுதோறும் தனது முழுக் கலைஞர் வளத்தையும் பயன்படுத்தி மேடையேற்றி வருகின்றது.

அந்த வகையில், இம் முறை 'கடவுள் வடித்த கண்ணீர்' என்ற பெயருடன் இவ் ஆற்றுகையை கடந்த 12 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை தினமும் 6.30 மணிக்கு மேடையேற்றி வந்தது. வழமைபோலவே இம் முறையும் அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகளாரே எழுத்துருவாக்கம் செய்திருந்தார். நெறியாழ்கையை யோ. யோன்சன் ராஜ்குமார் மேற்கொண்டிருந்தார். 120 க்கும் மேற்பட்ட அரங்க கலைஞர்கள் இதில் நடித்திருந்தனர். பிரமாண்டமான மேடை அமைப்புடன் ஒலி, ஒளி அமைப்பிலும் மெருகூட்டி வித்தியாசத்தை காட்டியிருந்தனர். இசைத்தென்றல் ம. யேசுதாசன் இதற்கான இசையினை வழங்யிருந்தார்.

போர் முடிந்த பின்னரான இக்காலப்பகுதியில் தமிழ் மக்கள் அரசியல் மட்டத்திலும் வாழ்வியல் மட்டத்திலும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை காட்சிப்படுத்தல்களின் மூலம் வெளிப்படுத்தினர். குறிப்பாக முகாம்களில் சிக்கித்தவிக்கும் இளைஞர், யுவதிகளின் அவலக்குரல் ஒலிகள், விதவைப் பெண்களின் உணர்வலைகள், குடும்பத்தில் உள்ள பிரச்சனைகள் என்பவற்றை திறம்பட வெளிக்காட்டினார்.

அதற்கு ஆறுதல் கூறுவது போல் யேசுன் வார்த்தைகள் வெளிப்படுவதாக காட்சிப்படுத்தினார்கள்.

குறிப்பாக 'ஆன்மாவைக் கொல்ல இயலாமல் உடலை மட்டுமே கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம்' என யேசு கூறுவது போன்ற வசன அமைப்பு துன்பப்படும் மக்களுக்கு ஓர் ஆறுதல்படுத்துவதாகவே இருந்தது. அதன் போது ஒளியமைப்பும் அரங்கில் நிலவிய அமைதியும் அக்காட்சியை பார்ப்போரின் மனதில் நீங்காத நினைவாகப் பதியச் செய்தது எனலாம்.

● அஸ்வின்

பல திருப்பாடுகளின் காட்சிகள் இம் முறை சுருக்கப்பட்டிருந்தாலும் நீக்கப்பட்டிருந்தாலும் காட்சியமைப்பிலும் அரங்கமைப்பிலும் பல புதுமைகள் புகுத்தப்பட்டிருந்தன. கொழும்பு, மன்னார், வவுனியா போன்ற இடங்களிலிருந்தும் மக்கள் ஆற்றுகையைப் பார்ப்பதற்கு வந்திருந்தனர். உள்ளூரில் பருத்தித்துறை, சாவகச்சேரி, வலி. தெற்கின் பல பிரதேசங்கள் என பல இடங்களிலிருந்தும் பங்கு ரீதியாகவும் மன்றங்கள் மூலமாகவும் வந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

'கடவுள் வடித்த கண்ணீர்' தற்போது முகாம்களில் எம் மக்கள், இளைஞர்கள் வடிக்கும் கண்ணீரின் பிரதிவிம்பமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் மாறிவரும் சமூக சூழலும் HIV/AIDS ஐ எதிர்கொள்வதற்கான சவால்களும்

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

குறித்த ஒரு வயதிற்குப் பின் அதாவது 10 - 11 வயதிற்கு பின் ஆண், பெண் இணைந்து திரிவதோ ஏன் கதைப்பதோ கூட கண்டிக்கத்தக்க விடயமாக இருந்த யாழ்ப்பாணத்தில் இன்று கல்வியைக் காரணம் காட்டி மாணவ, மாணவிகள் குறிப்பாக உயர் கல்வி நிலைய மாணவ, மாணவிகள் சேர்ந்து திரிவதும் ஒன்றாகத் தங்கிப் படிப்பதும் நடைபெற்று வருகின்றது. அதன் உச்சக்கட்டமாக dating கலாசாரம் கூட எம்மவர் மத்தியில் துளிர் விட்டு கலாசாரச் சீரழிவிற்கு வழிவகுக்கின்றது.

இன்று எமது மாணவர்கள் வெளிநாட்டுக் கல்வியையே பெரிதும் விரும்புகின்றனர். அதற்கு அமைவாக ஏராளமான வெளிநாட்டுக் கல்வியளிக்கும் நிறுவனங்களும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களும் யாழ்ப்பாணத்தில் காலூன்றியுள்ளன. இவ் வெளிநாட்டுப் பயணங்களும் HIV தொற்றுக்கு வழிவகுக்கின்றன.

இன்று எமது யாழ்ப்பாண மக்கள் எந் நோய்க்கும் முதலில் தத்தமது இடங்களில் உள்ள டிஸ்பென்சறிகளையே நாடிச்செல்கின்றனர். இவ் டிஸ்பென்சறிகளில் தொற்றுநீக்கப்பட்ட ஊசிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பாவிக்கப்படுவதை நாம் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

எமது யாழ்ப்பாணத்தில் HIV/AIDS ஐ எதிர்கொள்வதற்கு பெரும் சவால்கள் காணப்படுகின்றன.

ஒருவருக்கு HIV தொற்று ஏற்பட்டு பல வருட காலங்களின் பின்பேயே அது தன்னை வெளிக்காட்டிக் கொள்ளும். இக் காலப்பகுதியில் அவ் வைரஸானது பாலியல் தொடர்பு மூலமாகவோ அல்லது வேறு வழியிலோ பலருக்குத் தொற்றும் வாய்ப்புள்ளது.

இந்நோயை பூரணமாகக் குணமாக்கக் கூடிய மருந்துகள் இது வரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லையாயினும் தொற்றுதலடைந்தவரின் ஆரோக்கியத்தைப் பேண வாழ்நாள் முழுவதும் Antiretroviral drugs பாவிக்கப்படுகின்றது. அம் மருந்திற்கென வருடத்திற்கு 15 - 20 இலட்சம் ரூபா வரை தேவைப்படுகின்றது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்திற்கு இத் தொகையானது பெரும் சவாலாக காணப்படுகின்றது.

தொற்றுதலடைந்த நபரில் தொற்றலை உறுதிப்படுத்தும்பொழுது அவர் தொடர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கும் பரிசோதனைகளுக்கும் குறித்த தொற்றுதலுக்குரிய காரணத்தை அறியமுற்படும் விசாரணைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்காத தன்மை ஒரு சவாலாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான ஒரு சம்பவம் அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.

20 வயதுடைய யுவதியொருவர் ஏறத்தாழ 04 வருடங்களுக்கு முன்பு HIV தொற்றுக்கு இலக்காகி இருப்பது அவர் வேறு நோய்க்கு விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று வரும்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால், HIV தொற்று கண்டுபிடிக்கப்பட்ட பின் அவ் யுவதி எந்த விசாரணைக்கும் ஒத்துழைப்பு வழங்காத நிலைமை பெரும் சவாலை தோற்றுவித்துள்ளது. இதனால், அவருக்கு எதனால் HIV தொற்று ஏற்பட்டது? அவரிடம் தொடர்புள்ளோர் யார் யார் என அறிந்தாலே மேற்கொண்டு HIV தொற்றுச்சங்கிலியை முடிவிற்கு கொண்டுவர முடியும்.

HIV தொற்றுள்ளவர்களை எமது சமூகத்திலிருந்து ஒதுக்கிவைத்து அவர்களை அற்பப்புழுக்கள் போன்ற கண்ணோட்டத்தில் பார்ப்பதும் இதனால்HIV தொற்றுள்ளோர் தம்மை வெளிக்காட்டிக் கொள்ளத் தயங்குவதுடன் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளுக்கு ஒத்துழையாத தன்மையும் பெரும் சவாலாகக் காணப்படுகின்றது.

இந்தியத் தொலைக்காட்சிகளில் குறிப்பாக இந்தியத் தேசியத் தொலைக்காட்சியான தூரதர்ஸனில் AIDS நோய் பற்றிய விளம்பரம் அதாவது HIV தொற்று எவ்வாறு ஏற்படுகின்றது, எங்கே இரகசியமான முறையில் தம்மை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பரிசோதனை செய்துகொள்ளலாம், HIV தொற்று என்னென்ன வழிகளால் ஏற்படாது, தொற்றிருப்பின் மேற்கொள்ள வேண்டிய முறைகள் என்பன பற்றி பாமர மக்களும் விளங்கக் கூடிய வகையில் விளம்பரம் செய்யப்படுகின்றது. எமது தொலைக்காட்சிகளில் அவ்வாறான விளம்பரங்கள் பெரிதளவில் காணப்படாததும், பரிசோதனைகளுக்கென தனியான இடங்கள் காணப்படாததும், AIDS நோயாளிகளை வைத்துப் பராமரிக்கவென காச நோயாளர்களுக்கு இருப்பது போல தனியான ஒரு இடம் இல்லாமையும் மிகச் சவாலான விடயங்களாகும்.

இத்தனை சவால்களையும் முறியடித்து சமூகத்தின் மாற்றத்தினை எமக்கு சாதகமாக்கி உயிர்க் கொல்லியாம் AIDS இலிருந்து விடுதலை பெற முயல்வோம்.

## சிறுவர் பாலியல்...

*(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

என்பதனை அன்பாகவும், மென்மையாகவும் விளக்கிக் கூறுவதுடன் சில உறுப்புக்களை தொடுவது சரியில்லை என்பதனையும் கூறவேண்டும். பெற்றோர்கள் ஆகிய நீங்கள் சரியான பதிலை கூறினால் தான் குழந்தைகள் உங்களை நம்புவார்கள். நம்பிக்கை ஏற்படுவதன் காரணமாக எதிர்காலத்தில் தனக்கு ஏற்படுகின்ற பாலியல் ரீதியான சந்தேகங்களை உங்களை அணுகி தெளிவுபெறுவார்கள். சில சந்தர்ப்பங்களில் ஒரே கேள்வியை பல தடவைகள் கேட்பார்கள். இதனால், பாலியல் பற்றி அதிக கவனம் செலுத்துகிறார்கள் என பெற்றோர்கள் நினைக்கக் கூடும். ஆனால், அவர்கள் முன்பு கூறிய பதிலை மறந்துவிடுவார்கள் என்பதே இதற்கு காரணமாகும்.

வளரிளம் பருவத்திலுள்ள பிள்ளைகளுக்கு பாலியல் பற்றிய சரியான தகவல்களை வழங்க வேண்டும். பெண் பிள்ளைகளுக்கு மாதவிலக்கு துவங்குவதற்கு முன்பே மாதவிலக்கினை பற்றி கூறவேண்டும். அதேபோல, ஆண் பிள்ளைகளுக்கு இரவுக் கனவுகள் பற்றியும் விந்து சுரப்பது, விந்து வெளியேறுவது பற்றியும் விளங்கப்படுத்த வேண்டும். பெற்றோர்கள் இது பற்றி கூறாதவிடத்து பிள்ளைகள் தம் நம்பிக்கைக்குரியவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும். இதன் போது தேவையற்ற விபரீதங்கள் ஏற்றபட வாய்ப்புக்கள் அதிகமாகும். எனவே, பெற்றோர்களாகிய நீங்கள் கூறுவதே ஆரோக்கியமானதாகும். இதுபற்றி பிள்ளைகள் பேச வேண்டியதன் முக்கியத்துவத்தினை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். சுய இன்பம் என்பது பாலியல் உணர்ச்சியின் அழுத்தத்திலிருந்து விடுபடவும் பாலியல் உணர்ச்சிகளை உணரவும் இயற்கையான தீங்கற்ற வழி என்பதனை பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் தெரியப்படுத்த வேண்டும். பிள்ளைகள் கேட்கும் நேரடியான மற்றும் மறைமுகமான கேள்விகளுக்கு பதிலளித்து பால், பால்நிலை ஆரோக்கியம் பற்றிய சரியான தகவல்களை வழங்க வேண்டியது பெற்றோர்களின் கடமையாகும். பாலியல் கல்வியினை தெளிவுபடுத்துவதன் மூலம் பாலியல் துஷ்பிரயோகங்களில் இருந்து சிறுவர்களை காப்பாற்றலாம். சிறுவர்களின் வளமான வாழ்விற்கு - உரிய முறையில் பாலியல் கல்வி வழங்கி ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவோம்.

என் இயற்கை எனும்
குளத்தினுள்
கல்லெறிந்துவிட்டு
சமாதிக்கு
இலவசமாக பூமாலைகளை
சாத்தி சென்றனர்

எப்போதும்
அவளுக்குப் பின்னாலே
ஒரு கூட்டம்
அலை மோதுகிறது
அவளை இரசிக்க அல்ல
ருசிப்பதற்காக

எனக்கு இப்போது
என்னை தெரிவதில்லை
அவளுக்கு முன்னால்
நான் ஓர்
அறியாத பேர்வழி

அவளை ஒரு
புனித ஆத்மா
என்று எண்ணியிருந்தேன்
மோகினியாய் மாறி
என் கனவுகளை
தீண்டும் வரை

என் வாலிப கிளிசல்களில்
இப்போதும்
சில திருப்பங்கள்
நடந்தேறிக்
கொண்டேயிருக்கின்றன

*மருதங்கேணியூர்*
*வே.வே.அகிலேஸ்வரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்

நாட்டில் கொடும் வெப்பம் நிலவுகின்ற போது இடைக்கிடையே இடி இடித்து மழை பொழிவது இயற்கை. அது போலவே அநீதிகள், கொடுமைகள் பொங்கி மக்கள் அவலப்படும் போது அருளாளர்கள் தோன்றி அருள் மழை பொழிந்து மன்னுயிர்களையும் காத்தருளியதாக இலக்கிய சான்றாதாரங்கள் வாயிலாகப் பார்க்கிறோம்.

இந்த வகையில், 19 ஆம் நூற்றாண்டிலே ஜாதி வெறி, சமய வெறி முதலிய பல அக்கிரமங்கள் தாண்டவமாடி மக்களை நிலைகுலையச் செய்தபோது அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார் தோன்றினார் என கூறப்படுகின்றது. வள்ளலார் சென்னையில் வாழ்ந்தால் தனது நிலை குலையும் எனக் கருதி ஊர்களை நாடிவந்தார். இதன் ஒரு கட்டமாக சிதம்பரம் வந்து குடியமர்ந்தார். இன்னும் ஒதுங்கி வாழ எண்ணி வடலூராகிய பெருவெளியை அடைந்தார். அங்கும் மக்களின் இடையூறு காரணமாக அங்கிருந்து மேட்டுக் குப்பத்திற்குச் சென்றார். இறைவன் திருவருளை நாடி காடு மேடு எங்கும் அலைந்தார். தான் பட்ட பாட்டை பின்வரும் திருவருட் பாமூலம் கூறுகிறார்:

*"தேட்டிலே மிகுந்த சென்னையிலே இருந்தால்*
*கிறுகுறும் என்றுள்ளம் பயந்தே*
*நாட்டிலே சிறிய ஊர்ப்புறங்களிலே நண்ணினேன்"*

என்று சுவாமிகள் தான் அடைந்த துன்பங்கள் பற்றி கூறுகிறார். தான் பட்ட பாடு பஞ்சுகூடப் படாதது என கூறுகிறார். காற்றிலிடை அகப்பட்ட பஞ்சு எப்பாடுபடுமோ அதை விட மோசமாக அங்குமிங்கும் அலைந்து திரிந்ததாகக் குறிப்பிடுகிறார்.

*"நான் படும் பாடு சிவனே உலகர் நவிலும் பஞ்சு*
*தான் படுமோ? சொல்லத் தான் படுமோ? எண்ணத்தான் படுமோ?*
*கான்படு கண்ணியின் மான் படுமாறு கலங்கிநின்றேன்*
*ஏன் படுகின்றமை என்றிரங்கா யென்னில் என்செய்வேனே"*

என்ற திருவருட் பாமூலம் தான் படும் கஷ்ட நஷ்டங்களை விளக்குகிறார்.

இவ்வாறு ஈசன் திருவருளை நாடி அடிகளார் வாடினார்; வருந்தினார். அவன் அருள் எப்போது கிடைக்கும் என எண்ணி ஏங்கி அழுதார். இப்படி நாட்கள் பல கழிந்தன. வருடங்கள் பல ஓடின.

ஒரு நாள் நள்ளிரவு மேட்டுக் குப்பத்தில் சித்திவளாகம் என்ற குடிசையில் இராமலிங்க அடிகளார் படுத்துறங்கிக் கொண்டிருக்கையில் அந்த அற்புதம் நிகழ்ந்தது.

கனக சபையில் அநவரதமும் ஆனந்தத் தாண்டவம் புரியும் ஆண்டவர் அருள் வடிவம் கொண்டு வந்தார். உள்ளமும் உணர்வும் இழந்து மூர்ச்சையாகிக் கிடந்த வள்ளலாரை இறைவன் தனது கரங்களால் தூக்கி முகத்தை தடவிக் கொடுத்தார். வள்ளலார் திடுக்கிட்டு எழுந்து கண் விழித்துப் பார்த்தார். ஒளி மயமான ஈசனைக் கண்டார். பரவசமடைந்து, "ஆண்டவனே! எளியேனையும் ஒரு பொருட்டாக எண்ணி இந்த ராத்திரியில் எழுந்தருளி வந்தீரே அப்பனே! உன் அருள் பெறாது அல்லற்பட்டுத் தவிக்கிறனே! ஐயனே உய்யுமாறு அருள்வாய்!" என்று அழுது தொழுதார். உடனே இறைவன் மின்னல் போல ஒளியை உண்டாக்கி அந்த ஒளியே தானேயாகி அவ்வொளியான அருட்பெரும் சோதியாகி வள்ளலாரின் உடம்பில் புகுந்தார். உடல், உள்ளம், உணர்வு, உயிர் ஆகியவற்றில் கலந்துவிட்டார். வள்ளலாருக்கு உண்டான சந்தோஷத்திற்கு எல்லையே கிடையாது. உடலும் உள்ளமும் குளிர்ந்து பரிபூரண இன்பம் பொங்கியது.

பின்னர் மீண்டும் துன்புற்று அழுதார் தொழுதார். "ஐயனே! ஐயனே!" என அழுதார். எம்பெருமான் வள்ளலாரது உள்ளத்துள் நின்று, "மகனே இப்போது நீயும் நானும் ஒன்றுபட்டு இரண்டறக் கலந்துநிற்கிறோம். அருளமுதத்தை உனக்கு அள்ளி வழங்கினோமே. இப் பேரின்ப நிலையை வழங்கிய பின்பும் ஏன் அழுகின்றாய்" என வினாவினார்.

அதற்கு அடிகளார் "ஆண்டவனே! அருளமுதம் எளியேனுக்குக் கிடைக்கவில்லையே என முன்னர் துவண்டேன். உனது பேரருள் பெற்ற பின்னர் முன்னரிலும் பார்க்க அதிகம் துன்பமுறுகின்றேன்" என கலங்கினார்.

"இத்தகைய இன்பம் மற்றைய உயிர்களுக்கும் கிடைக்கவில்லையே. ஆன்மாக்கள் அவமே அலைந்து கெடுகின்றனவே! இந்த இன்பம் என்னைப் போல் எல்லோருக்கும் கிடைக்க வேண்டாமா? என் பெருமானே முன்னர் என் பொருட்டு அழுதேன். இப்போது உலக உயிர்களுக்காக அழுகின்றேன்" என்று பெருமானை நோக்கி அழுது புலம்பினார். அப்போது அவர் பாடிய பாடல் இதோ!

*"பாதி இரவில் எழுந்தருளிப் பாவியேனை எழுப்பி அருட்*
*சோதியளித்தென் உள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகிறாய்*
*நீதி நடஞ்செய் பேரின்ப நிதி நான் பெற்ற நெடும் பேற்றை*
*ஓதி முடியா தென்போல் இவ் வுலகம் பெறவேண்டு பவனே"*

என்று பாடுகிறார். அவருடைய கருணை தான் என்னே!

எஸ். நதிபரன் B.A. (Hons)

# உளர்(!) புதினம்




'சபைக்கு முந்து சண்டைக்குப் பிந்து' என்பது தமிழ் பேசுவோர் யாவரும் அறிந்த ஓர் பழமொழி.

"சாப்பாடு கொடுக்கும் இடத்திற்கு முன்னுக்குப் போ. சண்டை ஏதும் வந்துவிட்டால் பின்னுக்குப் போ" என்ற கருத்தில் தான் இப் பழமொழியை மிகப் பெரும்பாலானோர் விளங்கி வைத்துள்ளோம். ஆனால், அது தவறு.

அப் பழமொழியின் சரியான கருத்து உங்களுக்காக...

சபைக்கு முந்து: அதாவது கல்வி, கேள்வி, தலைமைத்துவப் பண்பு, பதவி எல்லாவற்றிலும் உயர்ந்த நிலையை அடைந்தால் பெரியார் உள்ள சபையில் முன் வரிசையில் இடம் கிடைக்கும்.

சபையில் உயர்வான மரியாதை கிடைக்கும். நாம் எம்மை உயர்ந்தவர்களாக்கி சபையில் முதலாவது வரிசையில் இருக்க வேண்டும் என்பதைக் குறித்தே 'சபைக்கு முந்து' என கூறப்பட்டுள்ளது.

சண்டைக்குப் பிந்து: சண்டைக் களத்தில் உயர்வான பதவியை வகிப்பவர்கள் களத்தின் பின்னிருந்து தான் வழிநடத்துவார்கள். கல்வித் தகுதி குறைவான சிப்பாய்களே சண்டைக் களத்தில் முன்புறமிருந்து சண்டை இடுவார்கள்.

களத் தலைவர்கள் பின்புறமிருந்தே சண்டைக்கு தலைமை தாங்குவார்கள். அதனால் தான், சண்டைக்குப் போவதானால் நாம் உயர்தகைமை பெற்றவர்களாயிருந்து பின்புறமிருந்து வழிநடத்தும் நிலையிலிருக்க வேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது.

மனிதர்கள் ஒவ்வொருவரும் உயர் நிலையை அடைந்து மதிப்பாக வாழ வேண்டுமென்ற நல்ல நோக்கில் கூறப்பட்ட பழமொழி அது. ஆனால், பழமொழியை சாப்பாட்டுக்கு முதலாவது ஆளாக ஓடு என கொச்சைப் படுத்தி விட்டமை கவலைக்குரியது. எம் முன்னோர் அனுபவப் பாடங்கள் மூலம் கற்றறிந்த பழமொழிகள் பல திரிபடைந்து பயன்டுத்தப்பட்டு வருவது கவலைக்குரியது.

மனிதர்கள் உயர் விழுமியங்களைக் கற்று சமூகம் உயர நற்பிரஜைகளாக வாழவேண்டுமென எம் முன்னோர்கள் கூறிய பழமொழிகள் பெறுமதியானவை. அவற்றைச் சரியான கருத்துடன், சரியான சொல் அமைப்புடன் அறிந்து கொள்ள வேண்டியது எமது கடமையாகும்.

மூத்தோர்களின் வாழ்க்கைப் பாடம் எமது நிகழ்கால, எதிர்கால சந்ததிகளை உயரவைக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

● சிவகாமி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழில்நுட்பம் 7

## கணினி நிரலாக்கல் மொழிகள்

## Computer Programming Languages



கணினிச் சாதனமொன்று என்ன செய்ய வேண்டும் என்று அதற்கு ஆணையிடுகின்ற அறிவுறுத்தல்கள், நிகழ்ச்சிநிரல்கள் ஆகியவற்றின் தொகுப்பு மென்பொருள் (Software) எனப்படுகின்றது. நிரல்மொழி கொண்டு செய்நிரல்கள் உருவாக்குவதன் மூலம் மென்பொருள் உருவாக்கப்படுகின்றது.

கணினியின் இயக்கத்தை நெறிப்படுத்துவதற்காக நிரலாக்கல் மொழிகள் (Programming Languages) பயன்படுத்தப்படுகின்றன. மனிதர்கள் பயன்படுத்தும் சாதாரண மொழிகள் (Human Languages) போன்றே இவ் நிரலாக்கல் மொழிகளிலும், குறியீடுகளும் (Syntactic), இம்மொழி எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதற்கான ஒழுங்குமுறைகளும் (Semantic) அவற்றுக்கான கருத்துக்களும் உள்ளன.

இற்றைவரை பல்லாயிரக்கணக்கான கணினி நிரலாக்கல் மொழிகள் பயன்பாட்டில் வந்துவிட்டன. புது வகையான மொழிகள் ஒவ்வொரு வருடமும் புதிதாக அறிமுகமாகி வருகின்றன. சில குறிப்பிடும்படியான மொழியாக குறிப்பிடும்படியான மக்களால் (Programers) தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும், இவர்கள் தங்கள் தொழிலில் பல்வேறான கணினி நிரலாக்கல் மொழிகளை பயன்படுத்துகின்றனர்.

நிரல்மொழிகளை வரையறுத்தல் ஒரு மொழியை கணினி நிரலாக்கல் மொழியென்று வரையறுப்பதற்காக அம்மொழி கொண்டிருக்க வேண்டிய இயல்புகள்:

1. செயலிகள் (Funtion):- நிரல்மொழியானது கணினி நிரல்களை எழுதுவதற்காகப் பயன்படுத்தப்படும். இவை தகவல்களை செயன்முறைப்படுத்தப் பயன்படுத்தப்படுவதுடன் சில வெளிவன்பொருட்களை (External Devices Eg: Printers, Scaners) தேவைக்கு ஏற்ப கட்டுப்படுத்துவதற்கும் கணினிகளில் உபயோகப்படுகின்றன.

செயலிகள் ஒரு பொருள் செய்யக்கூடிய செய்கையை விவரிக்கும் நிரல் ஒன்றின் பகுதியாகும். அதாவது, ஒரு செயலை அல்லது வினையைச் செய்ய வல்ல ஆணைத் தொடர்கள் (Algorithms) செயலி ஆகும்.

2. நோக்கம் (Target):- சாதாரண வாழ்க்கையில் நாம் பயன்படுத்தும் மொழிகளானது இரு வேறு மனிதர்களிடையே தொடர்பை ஏற்படுத்தப் பயன்படுகின்றது. ஆனால், நிரல்மொழிகளானது மனிதர்கள் இயந்திரத்திற்கு கட்டுப்பாட்டினை வழங்குவதற்காக பயன்படுத்தப்படுகின்றது. சில நிரல் மொழிகளானது ஒரு கருவி (Device) இன்னுமொரு கருவியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கப் பயன்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, Post script நிரல்மொழியானது Printer ஐ கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக வேறு ஒரு நிரலாக்கல் மொழியால் உருவாக்கப்படுகின்றது.

3. உருவாக்கிகள் (Constructs):- நிரலாக்கல் மொழியானது தகவல்களை படிமுறைப்படுத்துவதற்கும் அவற்றை தேவைக்கேற்ப சேமித்துவைத்திருப்பதற்கும், மேலும் அவை எந்த ஒழுங்கில் படிமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பது பற்றியதுமான அமைப்புக்களைக் கொண்டிருக்கும்.

(தொடரும்...)

கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். பதில் கிடைக்கும்.
முகவரி
'வீரகேசரி' கிளைக் காரியாலயம்
117, புகையிரத வீதி, யாழ்ப்பாணம்.



# திருப்பாடுகளை நினைவுகூருவோம்

## மறுகிறிஸ்துவாக மாறுவோம்

இயேசுவின் பாடுகளும் மரணமும் அன்பின் அடையாளமாகும். ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அழிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மீது அன்பு கூர்ந்தார்.

சிலுவை என்பது ஓர் அன்பின் அடையாளம். இயேசுவின் மாட்சிமையையும் தந்தையின் விருப்பத்தையும் நிறைவேற்றவும் உலக மக்களை மீட்கவும் இயேசு எடுத்த ஆயுதம் சிலுவை. சாதாரணமாக பார்க்கும் போது சிலுவை துன்பங்களின் அடையாளம்; அவமானத்தின் சின்னம். எனவே தான் தூய பவுல், சிலுவை யூதருக்கு தடைக்கலாகவும் பிற இனத்தாருக்கு மடமையாகவும் இருக்கின்றது என்றார்.

ஆனால், இயேசுவின் கையில் அது மீட்டளிக்கும் கருவியாக இருக்கிறது. [illegible] வாழ்வில் பயணத்தை போ நோக்கத்திற்காக உன்னதமான இலட்சியங்களுக்காக துன்பங்களை ஏற்கும் போது அதில் அர்த்தம் இருக்கிறது. இயேசுவின் பாடுகளிலும் அர்த்தம் உள்ளது. உலக மக்களின் மீட்புக்காக இயேசு சிலுவையை துணிவுடன் ஏற்கிறார். பலவித அடிமைத்தனங்களால் கட்டுண்டு கிடக்கும் மக்களின் விடுதலைக்காக உழைக்க அதனால் வரும் துன்பங்களைத் தாங்க இன்று நாம் தயாராக உள்ளோமா?

இல்லைவே இல்லை. சுயநலத்திற்காகவும் பாரம்பரியங்களுக்காகவும் வரட்டுக் கௌரவங்களுக்காகவும் பிறரை இயன்றளவு துன்புறுத்தி இயேசுவின் சிலுவைப் பாரத்தை சுமப்பவர்களாகவே இருக்கின்றோம். மனுக்குலத்தை மீட்க இயேசு உயிர் நீத்த இன்று புனித வெள்ளி இன்றைய நாளில் சிலுவையின் இரகசியத்தை அறிந்த டுவதே சிறப்பு. சில வேளைகளில், நாம் இவ்வுலக வாழ்க்கையில் விழுந்துவிடலாம். ஆனால், எழுந்து நடக்கவேண்டுமென இயேசு நமக்கு அழைப்பு விடுக்கின்றார். பாவச்சேறில் புதையுண்டு கிடப்பது நாம் அவருக்குச் செய்யும் துரோகம்.

இயேசு நமக்குத் தரும் பலமோ பெரிது. 'என்னை பலப்படுத்துபவரைக் கொண்டு என்னால் எல்லாம் செய்யக் கூடும்' என்று புனித பவுல் எத்துரைப்பவற்றுக்கேற்ப இயேசுவின் வாழ்வை நமதாக்கிக் கொண்டு உண்மையும் நேர்மையும் எம் மனதிலும் மண்ணிலும் மலர்ந்திட வாழ்ந்திடுவோம். தியாகமும் கீழ்ப்படிவமும் கொண்டு நாம் கிறிஸ்துவர்களாக வாழ இன்றைய நாள் எமக்கு வெளிப்படுத்தி நிற்கிறது. இயேசுவின் வாழ்வு எம்மில் மிளிர அதை நாம் வாழ்வாக்க முயற்சிப்போம்.

ஜெ.அனுஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் விளையாட்டுச் செய்திகள்

# சி. தனபாலன் ஞாபகார்த்த கிண்ணம் கொக்குவில் இந்து கல்லூரி வசம்

இலங்கை வங்கியின் அனுசரணையுடன் சென். ஜோன்ஸ் கல்லூரியும் யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கமும் இணைந்து நடத்திய அணிக்கு 06 பேர் 5 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் கொக்குவில் இந்து வெற்றிவாகை சூடியது.

கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ். இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். இந்துக்கல்லூரி அணித் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். 4.3 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

யாழ். இந்துக் கல்லூரி அணி வீரன் சஜீகன் ஆகக் கூடுதலாக 14 ஓட்டங்களை மாத்திரம் பெற்றார். உதிரிகளாக 20 ஓட்டங்கள் பெறப்பட்டன. பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வீரர் ராகுலன் 02 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

53 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 4.1 ஓவர்களில் ஒரு விக்கட்டினை மாத்திரம் இழந்து பெற்று வெற்றிபெற்றது. இதில் அணித்தலைவர் ராகுலன் 19 ஓட்டங்களையும் சிலோசன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்ட நாயகனாக கொக்குவில் இந்துக் கல்லூரி அணித் தலைவர் ராகுலன் தெரிவுசெய்யப்பட்டார்.

## வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் சம்பியன்

தெல்லிப்பழை,

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றிபெற்றது.

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் இறுதிப் போட்டியில் மோதின.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான முதல் பாதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 10:7 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் 8:6 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இறுதியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியை 18:13 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று வலய மட்ட சம்பியனாகியதுடன் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வடமாகாண அணிகள் நான்கு பங்கேற்பு

மஞ்சி பிஸ்கட் ஆதரவுடன் தேசிய ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் கண்டி நாவலப்பிட்டி பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த ஆண்கள் அணியில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன.

பெண்கள் பிரிவில் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பங்குபற்றுகின்றன.

இவ் நான்கு அணிகளும் கடந்த மாதம் நடைபெற்ற வடமாகாண ரீதியிலான போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகளாகும். முதலாமிடம் பெற்ற காங்கேசன் துறை ஐக்கிய விளையாட்டுக் கழக ஆண்கள், பெண்கள் அணிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும் இரண்டாமிடம் பெற்ற ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக் கழகம், கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழக அணிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபாவும் இப்போட்டிகளில் வழங்கப்பட்டன.

## அருணோதயா-விக்டோரியா எல்லே போட்டியில் சம்பியன்

தெல்லிப்பழை,

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற எல்லே போட்டியில் ஆண்கள் பிரிவில் அருணோதயாக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியும் வெற்றிபெற்றுள்ளன.

ஆண்கள் பிரிவினருக்கான போட்டியில் அருணோதயாக் கல்லூரி முதலாமிடத்தையும், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி இரண்டாமிடத்தையும், வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவினருக்கான போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி முதலாமிடத்தையும், இளவாலை கன்னியர்மடப் பாடசாலை இரண்டாமிடத்தையும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

## கோப்பாய் கோட்டப் போட்டிகளில் புத்தூர் சோமஸ்கந்தாவுக்கு முதலிடம்

கோப்பாய் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட 37 பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி போட்டியானது இரண்டு நாட்கள் நடைபெற்றன. முதலாம் நாள் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். வலய உடற்கல்வி பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் சண் தயாளனும் இரண்டாம் நாள் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் கலந்துசிறப்பித்தனர்.

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகளில் புத்தூர் சோமஸ்கந்தா 225 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தினையும் அத்தியார் இந்துக் கல்லூரி 229 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தினையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 157 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டன.

## கரம் சுற்றுப்போட்டியில் உடுவில் மான்ஸ் ம.வி. வெற்றி

தெல்லிப்பழை,

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுப் பிரிவு பெண்கள் கரம் சுற்றுப் போட்டியில் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இக்கரம் சுற்றுப்போட்டியில் இரண்டாம் இடத்தை மருதனார்மடம் இராமநாதனின் கல்லூரியும்ல மூன்றாம் இடத்தை இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

மேற்படி கரம் சுற்றுப்போட்டிகள் அனைத்தும் இராமநாதன் மகளிர் கல்லூரியில் இடம்பெற்றன.

## யாழ். கல்வி வலயப் பாடசாலை பூப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

தெல்லிப்பழை,

யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பூப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் சென். ஜோன்ஸ் கல்லூரியும் பெண்கள் பிரிவில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியும் வெற்றி பெற்றன.

ஆண்களுக்கான போட்டியில் இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை சென். பற்றிக்ஸ் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

பெண்களுக்கான பிரிவில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி இரண்டாமிடத்தையும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.



கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி வேரவில் மகாவித்தியாலய உதைபந்தாட்ட அணியினர் மற்றும் பாடசாலை அதிபர் திருமதி ப.சோதிலிங்கம் உடற்பயிற்சி ஆசிரியரையும் படத்தில் காணலாம். (படம்:- நெடுங்கேணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவியின் பிடியில் ஆண்கள்: தப்பியோர் வாக்கு மூலம்

தமிழ்நாட்டில் கிராமங்களில் ஆவி, பேய், மாந்திரிகம் என்பவற்றால் தொடரும் பீதியால் மக்கள் அச்சத்தின் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். ஆவி மற்றும் பேய் போன்ற அச்சம் எமது நாட்டு மக்கள் மத்தியில் பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியதாக இல்லை என்றே கூறவேண்டும். எனினும் இவற்றை நேரில் கண்ட - தாக்கத்துக்குட்பட்டவர்கள் எனக் கூறுபவர்களின் வாக்குமூலங்கள் வியக்க வைக்கத்தான் செய்கிறது. தமிழ்நாட்டின் கிராமம் ஒன்றில் இடம்பெற்ற ஆவியின் தாக்த்தால் பாதிக்கப்பட்டவர்களின் கதையை வாசியுங்கள்.

தர்மபுரி மாவட்ட எல்லையாக அமைந்திருப்பது தொப்பூர் கணவாய் என்ற கிராமம். சுமார் 3 கிலோமீற்றர் தூரத்துக்கு இருபுறமும் மலையால் சூழப்பட்ட இந்த பகுதி, அடர்ந்த மரங்கள், செடி கொடிகள் நிறைந்து பார்ப்பதற்கே திகிலூட்டும் இடமாகவிருக்கிறது. இந்த கணவாய் பகுதிக்குள் நுழையும் ஆண்கள் பலர் அகோரமாகத் தாக்கப்பட்டு இறக்கின்றனர். அதற்கு ஆண்களை பழிவாங்கும் பெண்ணின் ஆவிதான் காரணம் என அச்சப்பட்டு கொண்டிருக்கிறார்கள் அப்பகுதி மக்கள். பல ஆண்கள் அந்த கணவாய் பகுதியில் பலியாகி இருப்பதும், ஆவியின் கையில் சிக்கி நூலிழையில் தப்பியதாக கூறும் சிலரின் வாக்குமூலங்களும் பயத்திற்கு அச்சாரமாக உள்ளது.

சில வருஷங்களுக்கு முன்னர் வேடியப்பன், பரமன் மற்றும் செல்வம் ஆகிய மூன்று பேர் வெளியூர் போய்விட்டு தர்மபுரிக்கு ஒரு சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தனர். அமாவாசை என்பதால் கும்மிருட்டாக இருந்தது. தொப்பூர் கணவாயை கடந்துதான் செல்ல வேண்டும். அப்பகுதியில் மோகினி நடமாட்டம் இருப்பதாக சொல்லப்படுவதால் வேடியப்பனுக்கு பயம் உச்சத்தில் இருந்தது.

கணவாய் வளைவு நெருங்க நெருங்க அவருக்கு உடல் வெடவெடத்தது. முன்னால் உட்கார்ந்திருந்த பரமனும், பின்னால் உட்கார்ந்திருந்த செல்வமும் எதையும் கண்டு கொள்ளாமல் ஜாலியாக பேசியபடி வந்தனர். கணவாய் பகுதிக்குள் நுழைந்ததும் பாதை மேடாக இருந்ததால் கீழே இறங்கி சைக்கிளை தள்ளியபடி வந்தனர். அப்போது திடீரென மூன்று பேருக்கும் மயக்கம் வருவது போன்ற உணர்வு ஏற்பட்டது. எப்படியோ சுதாரித்துக் கொண்டு தொடர்ந்து நடந்தனர்.

சிறிது நேரத்தில் கமகமவென மல்லிகை வாசம் வீசியது. அப்போது மரத்தடிக்கு அருகில் பெண் உருவம் நிற்பது போன்று தெரிந்தது. அதை பார்த்ததும் பரமனும், செல்வமும் பரவசமடைந்து வேடியப்பனிடம் சைக்கிளை நிறுத்த சொன்னார்கள்.

ஆனால், ஆவியின் பயத்தில் இருந்த அவர் நிறுத்தவில்லை. ஆனாலும் பரமனும், செல்வமும் சைக்கிளை இழுத்து நிறுத்தினார்கள். நாங்க பாத்துட்டு வரோம் என்று சொல்லிவிட்டு போனார்கள். பெண் உருவம் காட்டுக்குள் மறைய இரண்டு நண்பர்களும் காட்டுக்குள் சென்றனர். அங்கு ஆக்ரோஷ உருவம் காட்டி சிரித்த ஆவியைப் பார்த்து விட்டு, பீதியில் அலறியடித்து ஓடி வந்தவர்களின் உயிரை, கணவாய் வீதியில் வந்த ஒரு லொறி பறித்துக் கொண்டு போய் விட்டது. வேடியப்பன் மட்டும் தப்பி வந்துவிட்டார் என்று சம்பவத்தை விவரிக்கும் மக்களின் பேச்சில் கலக்கம் அப்பட்டமாகத் தெரிகிறது.இதுபோல ஒன்றிரண்டு அல்ல. பல சம்பவங்கள் நடந்திருக்கு என்று சொல்கிறார்கள் அப்பகுதி மக்கள். தர்மபுரியை சேர்ந்த லொறி சாரதியான செல்லமாதுவும், உதவியாளரன தீத்தானும் கணவாய் கட்டமேடு பகுதியில் விபத்துக்குள்ளாகி அகோரமாக பலியானார்கள். இதுமாதிரி நிறைய ஆம்பிளைங்க தொப்பூர் கணவாய் கட்டமேடு, கணவாய் வளைவு பகுதியில செத்து போயிருக்காங்க.. மாசத்துக்கு 8 அல்லது 10 தடவை விபத்து நடக்குது. அதில் பலர் பலியாகிடுறாங்க. ஆவி குறுக்கே போகும்போது நேர்பட்டுதான் அவங்க செத்து போறாங்க. தொப்பூர் கணவாய் பகுதியில் உள்ள மூலிகை பண்ணையில சில் வருஷத்துக்கு முன்னால வயசு பொண்ணு ஒருத்தி இருந்தா, கொள்ளை அழகு. அவளை ரவுடி பசங்க பலாத்காரம் செய்து கொன்னு வீசிட்டு போயிட்டானுங்க. அந்த பெண்ணோட ஆவிதான் கொலைவெறியுடன் ஆண்களை பழிவாங்குது என்று ஊர் பெரியவர்கள் சொல்கின்றனர். என்னதான் நடக்குது... ஒன்றுமே புரியல....

# 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன்

## [22.04.11 முதல் 28.04.11 வரை]

## கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



### * மேஷம்

மேஷ ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திம பலன்களே ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலாபலன்கள் அமையும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் சற்று நிதான செயற்பாடு வேண்டும். பெண்களுக்கு மனச் சஞ்சலமிருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.



### * இடபம்

இடபராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் சிறு சிறு அலைச்சல் இருக்கும். குடும்ப நிலையில் எதிர்பாராத வகைச் செலவீனம் ஏற்படும். பணவரவு ஓரளவிற்கு அனுகூலமான நிலையில் அமையும்.

தேவையற்ற அலைச்சல் நிலைகள் அதிகம் ஏற்படலாம். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலை அமைந்திருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் இருக்கும். மாணவர்களுக்கு மத்திம பலன் உண்டு.



### * மிதுனம்

மிதுன ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றி அமையும். தொழில் நிலைகளில் முன்னேற்றம் அமையும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலைகளும் ஏற்படும். எதிர்பார்ப்புகள் நிறைவேறுகின்ற பலாபலன் உண்டு.

கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



### * கடகம்

கடக ராசி அன்பர்களுக்கு நற்பலாபலன்கள் அமைகின்ற நிலையுண்டு. தொழில் நிலையில் நல்ல மேன்மை ஏற்படும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நிலைப் பலனும் அமையும். தந்தை வழிமூல உறவினர்களால் அனுகூல பலன் ஏற்படும். பண வரவு மிகவும் திருப்திகரமாக அமையும் நிலையுண்டு.

கடன் நிலைகளில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். பெண்களுக்கு வெற்றி உண்டு. மாணவர்களுக்கு அனுகூலமுண்டு.



### * சிம்மம்

சிம்ம ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். தொழில் நிலைகளில் சிறு சிறு அலைச்சல் இழுபறி நிலைகள் இருக்கும். குடும்பத்தில் சுமாரான மத்திம பலன்களே ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பணவரவு சற்று சுமாரான நிலையிலேயே அமையும் பலனுண்டு. உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்பட்டு மறையும். பெண்களுக்கு சுமாரான பலன் உண்டு. மாணவர்கள் முயற்சி வேண்டும்.



### * கன்னி

கன்னி ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு வெற்றிகள் அமைய இடமுண்டு. குடும்ப நிலையில் நற் பலன்கள் ஏற்படும். பணவரவு ஓரளவிற்கு அனுகூலமாய் அமையும் நிலையுண்டு. தொழில் நிலைகளில் முன்னேற்ற பலன்கள் அமையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகள் ஏற்படும் நிலையுண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும்.

பெண்களுக்கு மன சஞ்சலமுண்டு. மாணவர்களுக்கு மேன்மையுண்டு.



### * துலாம்

துலாம் ராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் சிறு சிறு தடை இருக்கும். தொழில் நிலைகளில் வேலைப்பளு அதிகமாக அமையும் நிலையுண்டு. குடும்ப நிலையில் சிறு சிறு மந்த நிலைகள் அமைந்திருக்கும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலை உண்டு. கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும்.

பெண்களுக்கு அனுகூல பலன் உண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### * விருச்சிகம்

விருட்சிக ராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் ஏற்படும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் அமையும் நிலையுண்டு. குடும்பத்தில் மகிழ்வும் நிறைவும் கொண்ட பலன்கள் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும். எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய நிலைகள் இருக்கும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு மனமகிழ்வு ஏற்படும். மாணவர்களுக்கு வெற்றி உண்டு.



### * தனுசு

தனுசு ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே ஏற்படும். தொழில் நிலைகளில் வேலைப்பளு அதிகமாக அமைந்திருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதான செயல்பாடு வேண்டும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் ஏற்படும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலை தொடரும். பெண்களுக்கு மனச் சஞ்சலமுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### * மகரம்

மகர ராசி அன்பர்களுக்கு சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலைகளில் சிறு சிறு மந்த நிலைகள் அமையும். குடும்பத்தில் சுமாரான மத்திமமான பலன்களே ஏற்படும். சகோதரர் வழியில் சிறு சிறு பிரச்சினைகள் அமையும் நிலையிருக்கும்.

கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் தொடரும். பெண்களுக்கு அனுகூலமுண்டு. மாணவர்கள் முயற்சி தேவை.



### * கும்பம்

கும்பராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலமான பலன்கள் அமையும். தொழில் நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படுகின்ற நிலையுண்டு. குடும்பத்தில் மகிழ்வும் நிறைவும் அமையும் பலன் உண்டு. பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலேயே அமையும் பலன் உண்டு. உறவினர்கள் மூலமாக அனுகூலமான பலன்கள் அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு மேன்மை உண்டு.



### * மீனம்

மீன ராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். எடுக்கும் முயற்சிகளில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். தொழில் நிலைகளில் சிறு சிறு இழுபறி தாமத நிலை இருக்கும். பணவரவு சுமாரான மத்திமமான நிலையிலேயே அமையும். உடல் நிலையில் சிறு சிறு சுகயீனங்கள் ஏற்பட்டு மறையும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலைகள் ஏற்படும். பெண்களுக்கு மனச் சஞ்சலமிருக்கும். மாணவர்கள் முயற்சி தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குறுகிய காலத்தில் தீவிர வளர்ச்சி கண்ட கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

இம்மாணவ அனுமதிக்கான இட நெருக்கடியினை குறைக்க பாடசாலையின் பழைய மாணவரும் சமூகப் புரவலருமாகிய மாணிக்கம் சுப்பிரமணியத்தின் உதவியினை பாடசாலை சமூகம் நாடிச் சென்றவேளையில் எதுவித தயக்கமும் இன்றி பெருமனதோடு 140 "x 30" அடி பரப்பளவு கொண்ட மண்டபத்தினை அமைத்துத் தந்தார். இம்மண்டபமே 'சுப்பிரமணியம் மாலதி' மண்டபம் என்னும் நாமத்துடன் உயர்ந்து நிற்கின்றது.

இம் மண்டபத்தில் மாணவச்சிறார்களின் நிகழ்வுகளைத் திறம்பட நடத்துவதற்காக பெற்றோர் ஒருவரின் உதவியுடன் பொது அரங்கம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இப் பாடசாலையானது இரண்டு கட்டடத் தொகுதிகளாக இயங்க ஆரம்பித்தது. இக்கட்டடத் தொகுதிகளுக்கு தனித்தனியான மின் இணைப்பு, குடிநீர் வசதிகள், தொலைபேசி இணைப்பு வசதிகள் என்பன தனித்தனியாக செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள தலைசிறந்த பாடசாலைகளாக உள்ள முதல் மூன்றில் இப் பாடசாலையும் ஒன்றாகும். இப்பாடசாலையின் வளத் தேவைகளும் குறிப்பிட்ட அளவு பூர்த்திசெய்யப்பட்டுள்ளமை இங்கு விசேட அம்சமாகும்.

தற்போதைய புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாக கற்றல் செயற்பாடுகள் சிறப்பாக முன்னெடுக்கப்படும் அதேவேளை, சம காலத்தில் பௌதீக வள தேவைகளும் பூர்த்திசெய்யப்பட்டு வந்துள்ளமை இப்பாடசாலையின் முக்கிய சிறப்பம்சமாகும்.

இதற்கெல்லாம் காரணம், பாடசாலையின் தற்போதைய அதிபராகும். மாணவச் சிறார்களால் 'மெடம்' எனவும் பெற்றோர்களால் 'அம்மா' எனவும் அன்பாக அழைக்கப்படும் இவ் அதிபர் வீட்டுக்குச் செல்வதில்லையா என நானும் பெற்றோர் பலரும் எண்ணியுள்ள பல சந்தர்ப்பங்கள் உள்ளன. காரணம், எந்த நேரம் சென்றாலும் பாடசாலையில் அதிபரைச் சந்திக்க முடியும். எப்போதுமே அவருடைய சிந்தனையெல்லாம் பாடசாலையின் வளர்ச்சி, அபிவிருத்தி பற்றியதாகவே இருக்கும் என்பது பெற்றோர்களின் கூற்றுக்களில் இருந்து அறியக் கூடியதாகவுள்ளது.

**இப் பாடசாலையின் பெருமையை அண்மைய ஆண்டுகளில் பறைசாற்றிய மாணவர்கள் பலரும் உள்ளனர். 2009 ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட நிலை பெற்ற ம. தேன்நிலா, துரித கணிதச்செய்கையில் மாகாண மட்டத்தில் முதல் இடம்பெற்ற உ. பவனிதன் மற்றும் தமிழ்மொழித் தினத்தில் தேசிய மட்டத்தில் பங்குபற்றிய ஜெ. மதூஷாகன், ஆ. ஹரிசங்கர் ஆகியோர் இதற்கு எடுத்துக்காட்டாகும்.**



இதற்கு எல்லாம் என்னதான் காரணம் என ஆராய்வோமாயின் இவ் அதிபரின் சிறப்பான பண்பு, தூரநோக்குப் பார்வை என்பது புலப்படுகின்றது. அத்துடன், இப் பாடசாலையின் பழைய மாணவியாயும் அதே பாடசாலையின் ஆங்கில ஆசிரியராகவும் இருந்திருக்கின்றார். இப்படி இரண்டு சந்தர்ப்பங்களும் கிடைப்பது அபூர்வம். அச் சந்தர்ப்பம் இவ் அதிபருக்குக் கிடைத்துள்ளது. அதனை அவரும் சரிவரப் பயன்படுத்தி பாடசாலையின் வளர்ச்சி, அபிவிருத்தி என்பனவற்றின் மூலம் ஆத்மதிருப்தி அடைந்துவருகின்றார் என்பது உண்மை. ஜப்பான் அரசின் கருத்துக் கணிப்பின்படி இப் பாடசாலையானது யாழ். மாவட்ட 10 பாடசாலைகளில் ஒன்றாகத் தெரிவுசெய்யப்பட்டு ஜப்பான் அரசினால் வழங்கப்பட்டு வரும் நிதி உதவியுடன் ஆங்கில வள நிலையம், மூலிகைத் தோட்டம், சிறுவர் பூங்கா என்பன அமைக்கப்பட்டன.அத்துடன், கற்றல் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டன. அத்துடன், அவர்களால் துரித கணிதச் செய்கை 55 முறைக்கான சிறந்த பாடசாலைக்கான வெற்றிக் கேடயமும் கிடைக்கப்பெற்றது.

இப்பாடசாலையில் கணினிக் கற்கை நெறிகள் திறம்பட மேற்கொள்ளப்படுவதுடன் யாழ். மாவட்டத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் முதல் மூன்று இடங்களில் ஒன்றாக இப்பாடசாலை விளங்குகின்றது என்றால் அதற்குப் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பேருதவியே இதற்கு எல்லாம் காரணம் எனலாம்.



750 இற்கு மேற்பட்ட மாணவர்களையும் 25 ஆசிரியர்களையும் கொண்ட இப்பாடசாலையின் பெருமையினை அண்மைய ஆண்டுகளில் பறைசாற்றிய மாணவர்கள் பலரும் உள்ளனர். 2009 ஆம் ஆண்டு தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட நிலை பெற்ற ம. தேன்நிலா, துரித கணிதச்செய்கையில் மாகாண மட்டத் தில் முதல் இடம்பெற்ற உ. பவனிதன் மற்றும் தமிழ்மொழித் தினத்தில் தேசிய மட்டத்தில் பங்குபற்றிய ஜெ. மதூஷாகன், ஆ. ஹரிசங்கர் ஆகியோர் பாடசாலையின் தூண்கள் ஆவர்.

மேலும், பாடசாலையில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய நிலையில் முதன்நிலை பாடசாலைகளில் ஒன்றாக தெரிவுசெய்யப்பட்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் பாராட்டையும் பெற்றுள்ளது. இதன் மூலம் அனைத்துப் பாடசாலைகள், கல்வித்திணைக்களம் என்பனவற்றின் பார்வை எல்லாம் இக் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மீது திரும்பியுள்ளது என்பதனை அனைவரும் ஏற்கத்தான் வேண்டும்.

இப்படியாக பல்வேறு சாதனைகளைப் படைத்துவரும் இப்பாடசாலையில் நூல் நிலையம், விளையாட்டு மைதானம் இல்லை என்பது மிகவும் வேதனை தரக்கூடிய விடையமாகக் காணப்படுகின்றது. ஆனால், அதிபர் இவ் விடங்களை கருத்திற்கொண்டு தன்னுடைய சேவைக் காலத்திலேயே தான் இப்பாடசாலைக்கு ஓர் ஒழுங்கான நூல் நிலையமும் விளையாட்டு மைதானத்தினையும் அமைத்துத் தரத் தேவையான கடும் முயற்சிகளை எடுத்துவருவதனை அவதானிக்க முடிகின்றது.

எனவே, இவ்வாறு குறுகிய காலத்தில் பல்வேறு சாதனைகளைப் படைத்துவரும் இக் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையானது மென்மேலும் பல சாதனைகளைப் படைத்து அதிபரின் ஆசைகளும் நிறைவேற எல்லாம் வல்ல 'கொக்குவில் கிருபாகர சுப்பிரமணிய சுவாமிகளின் அருட்கடாட்சம் பாடசாலை சமூகத்திற்குக் கிடைக்க வேண்டும்.

•கே.ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நிகழ்வுகள்



யாழ். அத்தியடி சிதம்பர நடராஜ விநாயகர் ஆலய தேர்த் திருவிழாவில் விநாயகர் பெருமான் தேரில் எழுந்தருளி வருவதை படத்தில் காணலாம்.
(படம் : நெடுந்தீவு நிருபர்)



தீ;வண்ணை நாச்சிமார் கோவில் வருடாந்த தேர்த்திருவிழாவில் அம்மன் தேரில் வீதி உலா வருவதை படத்தில் காணலாம். (படம் : வட்டுக்கோட்டை)



மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் முருகப் பெருமான் தேரில் பவனிவருவதைப் படத்தில் காணலாம்.



சுன்னாகம் சிவபூதவராயர் ஆலய மகா கும்பாபிசேக நிகழ்வில் கும்பங்கள் வீதி உலா வருவதை படத்தில் காணலாம்.
(படம்: தெல்லிப்பழை)



வேலணை மண்கும்பான் வெள்ளைகுச்சடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான தேர்த்திருவிழாவில் விநாயகர் பெருமான் தேரில் வீதியுல வருவதைப்படத்தில் காணலாம். (படம்: நெடுந்தீவு நிருபர்)



சங்கானை சிங்கப்பூர் ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேகத்தின் போது வைரவ பெருமான் வீதிஉலா வருவதைப் படத்தில் காணலாம். (படம் : சங்கானை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட்டின் தெரிவும் டில்ஷானின் பொறுப்பும்...

நடைபெற்று முடிந்துள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரானது தோல்வியை தழுவிக் கொண்ட சர்வதேச அணிகளுக்கு அழுத்தங்களையும் ஏமாற்றங்களையும் இழப்புக்களையும் ஏற்படுத்தியிருக்கின்றதோ இல்லையோ, அது இலங்கை அணியை வெகுவாகவே பாதித்துள்ளது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான் உள்ளிட்ட பெரிய அணிகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்த அதேவேளை இலங்கை அணிக்கு ஏற்பட்ட திடீர் ஏமாற்றங்கள் இழப்புக்கள் என்பன இலங்கை கிரிக்கெட் ரசிகர்களை மட்டுமல்லாது முழு நாட்டையுமே ஒரு கணம் திரும்பி பார்க்க வைத்துவிட்டது.

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி இந்தியாவிடம் தோல்வியடைந்ததை அடுத்து இலங்கையணிக்குள் பெரும் புயலே வீசி ஓய்ந்துவிட்டது. அணித் தலைவர், துணைத் தலைவர், கிரிக்கெட் சபை என சகல தரப்பும் பதவி துறந்தமையால் இலங்கை அணியில் பாரியதொரு வெற்றிடம் ஏற்பட்டது.




உலகக் கிண்ணத் தொடரை தொடர்ந்து இலங்கையணியில் முதலாவது கிரிக்கெட் சுற்றுப் பயணமாக இங்கிலாந்துக்கு செல்ல வேண்டியிருந்த நிலையில் அணிக்கு தலைமைத்துவம் இல்லாதிருந்தமை பெரியதொரு குறைபாடாக தென்பட்டது. இருந்தபோதிலும் சமயோசிதமாக செயற்பட்ட இலங்கை கிரிக்கெட் சபை உடனடியாகவே திலகரட்ண டில்ஷானை அணித் தலைவராக நியமிப்பதாக அறிவித்து விட்டது. இந்த அறிவிப்பானது இலங்கை கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஒருவித ஆறுதலை தந்திருக்கின்ற போதிலும் புதிய அணி தலைமை, அதனால் தொடரப்படும் பயணம் தொடர்பில் சில சந்தேகங்கள் நிலவவே செய்கின்றன.

டில்ஷானை தலைமையாக ஏற்றுள்ள இலங்கை அணி தான் இதுவரையில் வந்த வழியிலேயே பயணிக்க வேண்டும் என்பது சகலரினதும் அவாவாகவும் பிரார்த்தனையாகவும் இருக்கின்றது. துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு என சகல துறையிலும் ஜொலித்து வருகின்ற திலகரட்ண டில்ஷான் தான் ஏற்றுள்ள தலைமை பொறுப்பை எவ்வாறு திறம்பட செயற்படுத்த போகின்றார் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயமாகும். அது மட்டுமல்லாது, இரண்டு தடவைகளும் உலகக் கிண்ணத் தொடரில் இறுதிப் போட்டிவரை வந்து தோல்வியை தழுவிய இலங்கை அணி 2015 நடைபெறவிருக்கும் 11 ஆவது உலகக் கிண்ணத் தொடரில் கிண்ணத்தை கைப்பற்றும் வகையில் அணியை தயார்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பும் டில்ஷானையே சார்ந்திருக்கின்றது. அல்லது அந்தப் பொறுப்பு அவரது தலையில் சுமத்தப்பட்டிருக்கின்றது என்றே கூற வேண்டும்.

இதற்கு முன்னர் அணித் தலைவர்களாக செயற்பட்ட குமார் சங்கக்கார மற்றும் மஹேல ஜயவர்த்தன ஆகியோரின் அணிகளில் இடம் பிடித்திருந்த டில்ஷான் அவர்களது நுட்பமான செயற்பாடுகளை அறிந்திருந்திருக்க வாய்ப்பில்லை. அவர்களது வழிகாட்டலில் வந்த டில்ஷான் முறையான பின்பற்றுதல்களை கைக்கொண்டால் தான் ஏற்றிருக்கும் தலைமைப் பொறுப்புக்கு தான் தகுதியானவன் தான் என்பதை நிரூபித்துக் காட்ட முடியும்.

இன்றைய சூழலில் இலங்கை அணியின் தலைமைப் பதவிக்கு டில்ஷானை தவிர வேறு வீரர்கள் பொருத்தமானவர்களாக இருப்பார்கள் என்பதில் சந்தேகத்திற்கு இடமானது. இதனை நன்கு உணர்ந்து கொண்ட கிரிக்கெட் சபை சரியான தீர்மானத்தை எடுத்திருக்கின்றது என்பது புலனாகின்றது. கிரிக்கெட் சபையின் இந்த சரியான தீர்மானத்தை எதிர்காலத்தில் மெய்ப்பித்துக் காட்ட வேண்டிய தர்மசங்கடத்திலும் டில்ஷான் இருக்கின்றார். இலங்கை அணியை பொறுத்தவரை எந்த ஒரு போட்டியிலும் ஓர் அணியாகவே செயற்பட்டு வந்திருக்கின்றது. வீரர்களிடத்திலும் ஏற்றத் தாழ்வுகள், பாகுபாடுகள், வேறு வகையான பாரபட்சங்கள் காணப்படுவது அரிதாகும். இதேவகையில் அணியின் ஒற்றுமை நீடித்து நிலைக்குமானால் அது டில்ஷானின் பயணத்துக்கு சாதகமாகவும் இலங்கை அணியின் எதிர்கால வெற்றிகளுக்கு உறுதுணையாகவும் அமையும் என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

மிகக் குறுகிய காலத்தில் தனது துடுப்பாட்டத்தினாலும் களத்தடுப்பினாலும் உலகக் கிரிக்கெட் ரசிகர்களை திரும்பிப் பார்க்க வைத்த டில்ஷான் இலங்கை ரசிகர்களின் கதாநாயகனாகவும் வலம் வந்தார். உலகக் கிண்ணத் தொடரில் இவர் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்திருந்ததை காண முடிந்தது. அந்த வகையில் அவர் அதனை நிறைவேற்றியும் இருந்தார். எனினும் இலங்கை அணியின் தலைவராக வருவதற்கு அவரிடம் போதுமான தகுதிகளும் திறமைகளும் நிறைந்தே காணப்பட்டிருந்தது.

இலங்கை அணியின் புதிய தலைவரான டில்ஷானுக்கு சங்கக்கார மற்றும் மஹேல ஆகியோர் பக்கபலமாக இருந்து சிறந்த வழிகாட்டிகளாக செயற்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. தலைமையை ஏற்று தாம் சந்திக்கும் முதலாவது சுற்றுப் பயணமான இங்கிலாந்து அணியுடனான தொடர் அவரது எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற தொடராக அமைந்திருக்கின்றது. இந்த தொடர் அழுத்தங்களை கொடுத்திருக்கின்றது. எனினும் இலங்கை அணி இதில் சிறப்பாக செயற்பட வேண்டும் என்பது சகலரினதும் எதிர்பார்ப்பாகும்.

களுத்துறையை சொந்த இடமாகக் கொண்ட டில்சான் 1976 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி பிறந்தார். தனது முதலாவது சர்வதேச போட்டியை 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் திகதி சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் களம் கண்டார். தனது முதல் சர்வதேச போட்டியில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியில் நிரந்தர இடத்தினைப் பிடித்துக்கொண்டார்.

இந்நிலையில் இலங்கை அணியின் 11 ஆவது அணித்தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள டில்சான் இதுவரையில் 66 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 11 சதங்கள் 16 அரைச்சதங்கள் உட்பட 3990 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இதேவேளை 203 ஒரு நாள் போட்டிகளில் 10 சதங்கள் 22 அரைச்சதங்கள் உட்பட 5456 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.



Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday April 22, 2011
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org